உ உ

ஓம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா சரணம்

ஓம் பிரம்மஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மார் துணை!

# உமக்குள்ளே பல தெய்வம்
# ஸ்ரீ மஹா பெரியவா!

## அகிலா கார்த்திகேயன்

**பகவான் யோகமூர்த்தி ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாள்**
**மீளா அடிமை டிரஸ்ட்**

நெ. 54, ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தெரு,
பங்காரு அம்மன் தோட்டம், காஞ்சிபுரம்.
தொலைபேசி : 044 - 27237360
அகிலா கார்த்திகேயன் : 9940326561

## நன்றி! நன்றி! நன்றி!

நம்மிடையே நடமாடிய தெய்வமாம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் மகிமைகளை பக்தர்களிடமெல்லாம் பகிர்ந்து மகிழும் வியாபார நோக்கமில்லாத இந்த நூலின் தொகுப்புக்கு உதவிய பல ஸ்ரீபெரியவா பற்றிய புத்தக பதிப்பாளர், ஆசிரியர்களுக்கும், ஸ்ரீபெரியவா புராணம் போன்ற யூட்யூப் பேட்டிகள் மூலம் பெரும் தொண்டாற்றிக் கொண்டிருக்கும் அன்பருக்கும் என் மனமார்ந்த நன்றியினை தெரிவிக்கும் கடமைப்பட்டுள்ளேன்.

**அகிலா கார்த்திகேயன்**
(9940326561)

ஒளி அச்சு :
**சாம் கம்ப்யூட்டர்ஸ்**
சென்னை – 600 019.
செல் : 94445 35252 / 90423 14880



ஓம் ஸ்ரீ கணாதிபதயே நம;
ஓம் ஸ்ரீ பூர்ணபுஷ்களாம்பாள் சமேத ஹரிஹரபுத்ர சுவாமினே நம;
ஓம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ யோகமூர்த்தி மஹா பெரியவா சரணம்
ஓம் பிரம்மஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மார் துணை

# முன்னுரை

**உ**லகெலாம் உணர்ந்து ஓதற்கரியவராக ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் ஸ்ரீ பரமேஸ்வரரின் திருஅவதாரம் தன்னுள் எல்லா தெய்வங்களையும் உரைந்தருளும் மகிமையினை சில சமயங்களில் வெளிப்படையாகவும், சில நேரங்களில் சூட்சமமாகவும் தன் பக்தர்களில் பலருக்கு பெரும்பாக்யமாக அனுக்ரஹித்துள்ளார்.

பிரம்மஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மார் ஸ்ரீ மஹா பெரியவாளை சாக்ஷாத் பரமேஸ்வரராய் பூர்ணமாக அனுபவித்து ஆனந்தித்த அதீத பக்தியால், ஒருமுறை சிவராத்திரியின்போது ஒரு அன்பர் ஸ்ரீபெரியவாவின் விக்ரஹத்தை புலித்தோல், சடை, நாகாபரண மென அலங்கரித்திருந்தபோது "ஸ்தூலமாக நம்முன்னே திருக்காட்சியருள சாக்ஷாத் ஈஸ்வரே பெரியவாளெனும் திருகோலத்தோடு அனுக்கிரஹிக்க வேற எந்த ரூபத்திலேயும் அந்த தெய்வத்தை பாக்க தோணலயே" என்று தன் உறுதியான பெரியவாபக்தியை வெளிப்படுத்தினார்.

அப்படியோர் தனித்துவமான பக்தியின் மேன்மையால் 64ம் நாயன்மார் எனும் உயர்வுபெற்ற உத்தமரின் தவவலிமையால் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியாவாளின் பக்தி உலகமெல்லாம் பரவி அருளிக் கொண்டிருக்க, அத்தெய்வம் இன்னும் சில பக்தர்களுக்கு தன்னுள் பல தெய்வங்களை காட்டியருளிய சம்பவங்களும் நம்மை வியக்க வைக்கின்றன.

அப்படிப்பட்ட சம்பங்களை தொகுத்து வழங்கலாமென்ற ஆவலுடன் தேடி எழுதிக் கொண்டிருந்தபோது காஞ்சியிலிருந்து ஸ்ரீராம் அவர்கள் (பிரதோஷம் மாமாவின் பேரன்) போன் செய்து ஸ்ரீ சேலம் ரவிசந்திரன் ஸ்ரீ மஹாபெரியவா மகிமை ஒன்றை கூறுவார் என்றார். எப்போதும் ஸ்ரீ ரவிசந்திரன் அபூர்வமான மகிமைகளை தான் கேட்கும்போது அதை பக்தர்களிடம் பரிமாறி ஆனந்தமடைவதுண்டு. அவர் அதன் பிறகு என்னிடம் சொன்ன

அந்த மகிமை சம்பவம் இந்த நூலை நான் எழுதிக் கொண்டிருப்பததற்கான ஸ்ரீ பெரியவாளெனும் தெய்வத் திடமிருந்து சூட்சமமான அங்கிகாரமாக அமையும் என எதிர்பார்க்கவில்லை. நான் இந்நூலை எழுதுவதோ, இது சம்பந்தமான மகிமைகளை தொகுப்பதோ யாரிடமும் சொல்லாத போது, 'நானே சொல்கிறேன்' என்பதாக ஸ்ரீரவிசந்திரன் மூலம் எனக்கு ஸ்ரீபெரியவாளின் அருளால் அத்தெய்வம் தன்னை மதுரை மீனாட்சி அம்மையாய் ஸ்ரீமதி பொள்ளாச்சி ஜெயம் என்ற பக்தைக்கு காட்சி அளித்து அனுக்ரஹித்த சம்பவம் கிடைத்தது போலானது. (இதை உள்ளே பக்தர்கள் காணலாம்).

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் பேரருளோடு, பிரம்பஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரின் ஆசியோடு, எமை ஈன்ற புண்ணியர்களின் பாத மலர்களை வணங்கி இந்த நூலை ஸ்ரீ மஹாபெரியவாளின் பிரசாதமாக வழங்கும் பாக்யம் பெற்ற ஆனந்தத்துடன்,

**அகிலா கார்த்திகேயன்**

❖ ❖ ❖



# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | விக்னேஸ்வரரும் நானே! நந்திகேஸ்வரரும் நானே! | 7 |
| 2. | ஸ்ரீ சந்திரசேகர கணபதி! | 9 |
| 3. | அவல் பொரி ஏற்ற கணேச பெரியவா! | 11 |
| 4. | கணபதி கவசம் கடவுளாம் உம்வசம் | 13 |
| 5. | கணக்கு சொன்ன கணபதி பெரியவா! | 15 |
| 6. | தும்பையை ஏற்ற தும்பிக்கை பெரியவா! | 17 |
| 7. | ஐயப்பனாக ஆதிசேஷனாக அன்பு பெரியவா! | 18 |
| 8. | தக்ஷிணாமூர்த்தி பெரியவா! | 20 |
| 9. | ஆதிசங்கராய் ஒரு தரம் : பெரியவாளாய் இன்னொரு தரம்! | 22 |
| 10. | மீனாட்சி பெரியவா! மேன்மை பெரியவா! | 24 |
| 11. | அம்பாளாய் ஆன குரு! | 29 |
| 12. | திரிபுரசுந்தரியாய் திரிகாலஞானேஸ்வரர் | 31 |
| 13. | காமாட்சி பெரியவா! | 33 |
| 14. | அப்பனும் நீயே! அம்பாளும் நீயே! | 34 |
| 15. | தேனம்பாக்கத்தில் நீ தேடும் காமாக்ஷி | 36 |
| 16. | அம்பாளை சூடிய பிறைசூடி! | 38 |
| 17. | ஊச்சலில் ஆடிய அம்பிகை தரிசனம் | 39 |
| 18. | கருணை வடிவில் காளிகாம்பாள் | 41 |
| 19. | பாலாஜியை பாத்தாச்சி! | 42 |
| 20. | கோகுலத்து கண்ணனைப் போல் கோலம் பூண்ட பெரியவா! | 44 |
| 21. | நீ பார்ப்பது பத்ரிநாராயணனே! | 46 |
| 22. | நடமாடும் ஸ்ரீநரசிம்ம பெரியவா! | 47 |
| 23. | நான்தான் நாராயண மூர்த்தி | 48 |
| 24. | ஸ்ரீ சக்ரபாணியாய் ஸ்ரீசங்கர பெரியவா! | 49 |
| 25. | நாதராய் குருநாதர்! | 51 |

26. வேணுகோபாலன் வேறெங்குமில்லை 52
27. திருவடி தந்த தசாவதார தரிசனம் 53
28. திரிமூர்த்தியாய் ஸ்ரீபெரியவா! 55
29. ஸ்ரீசுவாமிநாத பெரியவா! 56
30. முருகனை தரிசிச்சாச்சி! 58
31. மயிலேறும் ஸ்ரீபெரியவா! 60
32. நான்முகனாய் நான்மறையோன் 63
33. "அருணாசல பெரியவாளும் அறுபத்து நாலாம் நாயன்மாரும்" 66
34. நாட்டிய நடராஜ பெரியவா! 68
35. ஏகாம்பரேஸ்வரும் நானே! 69
36. அற்புத ஆனந்த நடன பெரியவா! 70
37. நினைவில் வைத்தாலே முக்தி தரும் மாமுனிவர்! 72
38. தில்லை நடராஜராய் திவ்ய தரிசனம் 73
39. ஸ்ரீ அபிராமி மணாளனான பெரியவா! 74
40. ஆனந்த நடன அரிய தரிசனம் 74
41. சேஷாத்ரி சுவாமிகளும் நீரே! ஸ்ரீ ரமண பகவானும் நீரே! 77
42. 'பரமிரும்மம் ஜகந்நாதம்' 81
43. ஜோதி பிழம்பாய் ஜொலித்திட்ட பெரியவா! 82
44. **I am living GOD** 83
45. அரூபமாகவும் அருள்வார் 84
46. பைரவ சங்கரர்! 85
47. எல்லாமும் பெரியவா! அல்லாவும் பெரியவா! 87
48. ஈசன் திருமுகத்தில் ஏசு! 88
49. உலகளந்த பெரியவா! 89
50. நீதிபதி அருகே பசுபதி 91
51. கதவைத் தட்டிய காஞ்சி தெய்வம் 91
52. ஸ்ரீராமரும் நீரே! ஸ்ரீபக்த ஹனுமனும் நீரே! 93




# 1. விக்னேஸ்வரரும் நானே! நந்திகேஸ்வரரும் நானே!

**ஸ்ரீ**ஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா தன்னை பரமேஸ்வரராய், ஸ்ரீமந்நாராயணராய், அம்பிகையாய், சுப்பிரமணிய சுவாமியாய், வெங்கடாஜலபதியாய், காமாட்சியாய், ஸ்ரீராமபிரானாய், பத்ரி நாராயணராய் இன்னும் பல தெய்வங்களாய் பக்தர்களுக்கு தரிசனம் நல்கிய அரிய சம்பவங்கள் உள்ளன.

ஆனால் விக்னேஸ்வரராய் தன்னை காட்டியிருளிய சம்பவங்கள் எந்த பக்தருக்கும் அனுபவமாகவில்லை என்பது ஸ்ரீபெரியவா பற்றியே சதாசர்வ காலமும் சிந்தித்து பக்தி செய்யும் அன்பர்களையும், ஸ்ரீபெரியவாளைப் பற்றி பிரவசனம் செய்யும் உபன்யாசகர்களையும் கேட்டபோது தெரிந்தது.

பின் அந்த விக்னேஸ்வரரின் அருளாலும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் அனுக்கரஹத்தாலும் பிரம்மஸ்ரீ பிரதோஷ நாயன்மாரின் ஆசியாலும் இரு சம்பவங்கள் அதற்கான அத்தாட்சியோடு கிடைக்கப் பெற்றேன்.

நேரடியாக இல்லாமல் மனசூட்சமமாக ஸ்ரீமஹாபெரியவா தன்னை கணபதியாய் காட்டிக் கொண்ட அனுபவம் என் தந்தையாம் ஸ்ரீசுப்ரமணிய ஐயருக்கு ஏற்பட்டிருந்தாலும், அந்த முழுமுதற் கடவுளின் பிரியமான சிதறு தேங்காய் சம்பந்தமான ஒரு சம்பவம் மாதுஸ்ரீ சீதம்மா பாட்டி எனும் பக்தைக்கு நேரடியாக கிடைத்த பாக்யத்தை முதலில் பார்ப்போம்.

இதற்குமுன் எங்கேயோ படித்து எழுதியுள்ளோமே என்று தேடிக் கொண்டிருந்த இந்த சம்பவத்தை நூற்றாண்டு ஜோதி மலரிலிருந்து எடுத்து அனுப்பிய அன்பர் ஸ்ரீ கணேஷ் பார்த்தசாரதிக்கு என் நன்றி.

மாதுஸ்ரீ சீதம்மா ஆந்திர தேசத்து தெனாலியை சேர்ந்த பெரியவா பக்தை. எப்போதும் ஸ்ரீபெரியவா சன்னதியிலேயே ஒரு பக்கம் நின்று தரிசித்து கொண்டிருப்பாள். மிக ஆச்சாரமாக ஸ்ரீமடத்திற்கு அதிகமாக திரவியங்களை சேர்க்கும் குணவதி ஆவாள்.

சீதம்மாவின் கணவரை சூரி என்றும் பாபு என்றும் அழைப்பர். ஒருமுறை இவர் ஒரு கோயிலுக்கு சென்றுள்ளார். அங்கு அவர் தரிசித்த விக்னேஸ்வரர் சிலாரூபத்தை நந்திகேஸ்வரர் என்று நினைத்து விட்டார்.

அந்த நந்திகேஸ்வரருக்கு 108 தேங்காய் உடைப்பதாக ஏதோ ஒரு சங்கல்பத்துக்காக இவர் நேர்ந்துக் கொண்டார். ஆனால் அதை அவர் நிறைவேற்ற இயலவில்லை.

அடுத்த முறை அவர் தன் மனைவி சீதம்மாவுடன் ஸ்ரீமஹாபெரியவாளை தரிசிக்க வந்தபோது, வெகுநாளாக அந்த நந்திகேஸ்வரருக்கு நேர்த்திக் கடனை செலுத்த முடிய வில்லையே என்ற ஆதங்கத்தை ஸ்ரீபெரிவாளிடம் முறையிட்டார். இவர் கேட்டதும் எல்லாமும் அறிந்த ஞானியாம் ஸ்ரீபெரியவா, "நீ அந்த கோயில்லே பார்த்தது நந்திகேஸ்வரரில்லே... அவர் கணேசர். நீ நந்திகேஸ்வரராய் நினைச்சி நேர்ந்துட்டதாலே அவருக்குத்தான் சூறை உடைக்கணும்... ஆனால் மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில்லேதான் நந்திகேஸ்வரருக்குன்னு தனிசன்னதி இருக்கு... பங்குனி மாசம் பௌர்மணி அன்னிக்குத் தான் திறப்பா... ரொம்ப நாளாகுமே" என்ற கவலைப்படுவது போல கேட்டார்.

பின் சற்று யோசனை செய்தார்.

அவருள் உறையும் விக்னேஸ்வரரும், நந்திகேஸ்வரருமாக வாக்கு அருளுவதுபோல

"நீ அப்போ என்ன பண்றே... அந்த நூறு தேங்காயை வங்கிண்டு வந்து என் முன்னாலேயே உடைச்சுடு" என்ற ஒரு அபூர்வ உத்தரவாய் நல்கி பாபுவை ஆனந்திக்க வைத்தார்.

அப்படியே உடைத்ததாக அந்த பக்தரின் அனுபவம் எழுதப்பட்டுள்ளது. நூற்றாண்டு மலர் எனும் பூர்ணமாக நம்பத்தகுந்த நூலிலிருந்து பெறப்பட்ட சம்பவமென்றாலும், ஸ்ரீ மஹாபெரியவாளின் அருள் அதற்கான சாட்சியாக ஒரு பக்தர் மூலமும் அறிவிக்க செய்தது விந்தையே!

சீதம்மா பாட்டி ஒருமுறை ஸ்ரீபெரியவா முன் 108 தேங்காய்களை உடைத்தபோது அதை கண்ணுற்றதாக ஸ்ரீகணேச சர்மா என்னிடம் சொன்னார்.



ஆனால் சீதம்மாவின் கணவர் பாபு 1973இலேயே இறைவனடி சேர்ந்துவிட்டதா அந்த நூலில் கண்டுள்ளதால், அவர்தன் மனைவியோடு ஸ்ரீபெரியவா கேட்டு தேங்காய் உடைத்த சம்பவமும் 1973க்குப்பின் பல வருடங்கள் கழித்து ஸ்ரீகணேச சர்மா பார்த்த சம்பவமும் வேறு வேறு காலங்களில் நடந்ததாக தெரிகிறது.

"அப்படி அந்த பாட்டி உடைச்சபோது, ஸ்ரீ மடம் பாலுவும் இன்னொருத்தரும் மடத்து பிள்ளையாருக்கு போய் உடைங்க பாட்டி.. இங்கே வேண்டாம் என்று தடுத்தும் பாட்டி விடலே.. அங்கே பெரியவா உட்கார்ந்திருக்க உடைச்ச தேங்காயிலேர்ந்து அத்தனை இளநீரும் ஆறா வழிஞ்சு ஓடினது" என்று தான் பார்த்த அரிய நிகழ்வை ஸ்ரீ கணேச சர்மா விவரித்தார்.

தன் கணவரின் காலத்திற்கு பிறகும் மாதுஸ்ரீ சீதம்மா பாட்டி இப்படி விக்னேஸ்வர பெரியவாளுக்கு சிதறு தேங்காய் உடைப்பதை பாக்யமாக பின்பற்றியுள்ளார் என்பதை அனுமானிக்க முடிகிறது.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா தன்னை கணேஸ்வரராய், நந்திகேஸ்வரராய் காட்டி அருளிய சம்பவம் எப்போதோ நடந்திருந்தாலும் அது சத்தியமே என்று சாட்சி சொல்ல ஸ்ரீ கணேச சர்மாவையும் நியமித்திருக்கும் ஸ்ரீபெரியவாளின் அருள் வியப்பளிக்கிறது.

❖ ❖ ❖

# 2. ஸ்ரீ சந்திரசேகர கணபதி!

**வி**நாயகர் விக்ரஹத்துக்கு சந்திரசேகர கணபதி என்றே திருநாமம் சூட்டியிருக்கார் அந்த 92 வயது நிரம்பிய மலேசியா பக்தர் ஸ்ரீபெரிவாளிடம் பக்தி கொண்டவராய் விநாயகரையே ஸ்ரீபெரியவாளாய் பாவித்து தினமும் அந்த முதியவர் 108 புஷ்பங்களால் மிக சிரத்தையாக பூஜித்து வந்தார். இது பல வருடங்களாக தொடர்ந்த ஒரு திருப்பணி.

இப்படி எங்கோ மலேசியாவில் தன்னை பிள்ளையாராய் பூஜித்துக் கொண்டிருப்பதை காஞ்சி மாமுனிவர் அறிந்திருக்க வாய்ப்புண்டோ? அத்திருஉரு மாமுனிவர் என்பதோடு

எல்லாமுமான தெய்வம் என்பது சத்தியமானதால் ‘அதை நானறிவேன் என்ற மகிமையை ஸ்ரீபெரியவா காட்டிய சம்பவமிது.

இந்த முதியவருக்கு உடல்நலம் சரியில்லாமல் வர இயலாமல் போனதால் இவரது துணைவியாரும் தமிழ்நாட்டில் கூட்டுறவு துறையின் மேலதிகாரியான இவரது உறவினரும் ஸ்ரீபெரியவாளை தரிசிக்க வந்தனர்.

முதியவரின் மனைவிக்கு ஸ்ரீபெரியவாளை அவரது கணவர் விக்னேஸ்வரராக பாவித்து பூஜை செய்வதை மகானிடம் தெரிவித்து வணங்க வேண்டுமென்ற ஆவல் இருந்தது.

இவர்கள் வந்தபோது ஸ்ரீபெரியவா பாஷ்ய பாடம் வேதபண்டிதர்களுடன் நடத்திக் கொண்டிருந்தார். காலை 8 மணியான அந்த நேரத்தில் அவர்கள் காத்திருந்தனர்.

பாஷ்ய பாடம் முடிந்ததும் தூரத்தே நின்ற மலேசிய பக்தையை ஸ்ரீபெரியவா சைகை செய்து கூப்பிட்டார். பழத்தட்டுடன் முதியவரின் மனைவி முன்னே சென்று தான் சொல்ல நினைத்தவைகளை கூற தயாரானாள்.

ஆனால் அதற்குள் ஸ்ரீபெரியவாளே எல்லாமும் நான் அறிவேன் என்பது போல “உன் பர்தா நல்லா இருக்காரா? அவர் தினம் பண்ற அர்ச்சனை எல்லாம் என் மேலே வந்து சேர்ந்துண்டிருக்குன்னு அவர்கிட்ட சொல்லுங்கோ” என்று பழங்களை ஆசீர்வதித்து கொடுத்தார்.

இந்த அம்மையாருக்கு ஒருபுறம் வியப்பும், மறுபுறம் ஸ்ரீபெரியவாளெனும் தெய்வம் தன் கணவர் பூஜை செய்வதை அறிந்தவர் போலவும் அதை தினமுமே ஏற்றுக்கொள்வதாகவும் கூறியதால் ஆனந்தமும் உண்டானது.

அங்கு அதை கண்ட பக்தர்களுள் ஒருவராய் இந்த ஒரு வைணவ அன்பர் இதனை தன் புத்தகமொன்றில் எழுதி யுள்ளார்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா தன்னை சந்திரசேகர கணபதியாய் காட்டிக் கொண்ட சம்பவம் வியப்பளிக்கிறது.

❖ ❖ ❖



# 3. அவல் பொரி ஏற்ற கணேச பெரியவா!

**ஸ்ரீ** சுப்பிரமணிய ஐயர், ஸ்ரீமஹாபெரியவாளை பெண்ணும் மாப்பிள்ளையும் தரிசிக்க புறப்பட்டபோது, அவசர அவசரமாக பெரியவாளுக்கு கொடுத்தனுப்ப ஏதாவது உள்ளதா என ஆசையாக தேடினார். அவர்கள் திடீரென்று புறப்பட்டதால் பழங்களை வாங்கி வைத்திருக்கவில்லை.

அதனால் வீட்டில் தேடியபோது அந்த எளிய அவலும் பூரா சர்க்கரை எனும் வெல்ல சர்க்கரையும்தான் இருந்தது. ஆலந்தூரின் அவரது வீட்டு எதிரே ஒரு சுயம்புவான விநாயகர் அமர்ந்திருந்தார். தெரு ஓர சின்ன மண்டபத்தில் அமர்ந்த பிள்ளையாரை பராமரிக்க யாருமில்லாததால் தினமும் சுப்ரமணிய ஐயர் கணபதிக்கு அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்து நைவேத்யம் செய்வார். விசேஷ நாட்களில் மோதகம், சர்க்கரை பொங்கல் என நைவேத்தியம் செய்ய முடிந்தது. ஆனால் தினமும் அவலும், பூரா சர்க்கரையுமே அவசரத்திற்கு ஏற்ற எளிமையான நைவேத்தியமாக விநாயர் ஏற்றுக் கொள்வார்.

ஆகவே சுப்ரமணிய ஐயரின் பென்ஷன் பணத்தில் அந்த நைவேத்ய அவலுக்கும் பூராசர்க்கரைக்கும் பணம் ஒதுக்கப்பட்டு வீட்டில் எப்போதும் ஸ்டாக் இருக்கும்.

இது மிகவும் சாதாரணமாக தோன்றினாலும், இவர் தினமும் பிள்ளையாருக்கு பூஜை செய்ய வரும்போது அக்கம்பக்கத்தில் குழந்தைகள் கூடிவிடும். பெரிய பிரமாதமான நைவேத்தியமாக இல்லாதபோதும் அந்த குழந்தைகள் “தாத்தா தாத்தா” என்று ஐயரை மொய்த்துக் கொண்டு அந்த அவல் சர்க்கரை பிரசாதத்தை வாங்க போட்டிப்போடும். அதனால் பத்து பன்னிரண்டு குழந்தைகளுக்கு விநியோகம் செய்ய தினமுமே கணிச்சமான அவலும் சர்க்கரையும் தேவைப்படும்.

வீட்டில் ஸ்டாக்கிலிருந்த அந்த பிள்ளையாருக்குரிய தான அவலையும், பூராசர்க்கரையையும் சுப்ரமணிய அய்யர், தன் பக்தியை கலந்து ஒரு பொட்டலமாக கட்டினார். அதை ஸ்ரீபெரியவாளுக்கு சமர்ப்பிக்க பெண் மாப்பிள்ளையிடம் கொடுத்தனுப்பினார்.

அவர்கள் கிளம்பியதும்தான் அந்த விஷயம் அவர் காதில் விழுந்தது.

“குழந்தை கணேசன் பொட்டலத்தை கொட்டி விட்டுட்டான். அவா தரையிலே விழுந்ததை திரட்டி எடுத்துண்டு போனா” வீட்டில் தன் மாட்டுப் பெண் யாரிடமோ கூறிக் கொண்டிருந்ததை குளித்து ஜபம் செய்ய உட்கார்ந்தவர் கேட்டதும் சினமுற்றார்.

“என்ன கீழே விழுந்ததையா திரட்டிண்டு போனா? அதையா பெரியவாளுக்கு எடுத்துண்டு போவா? உடனே டப்பாவிலேர்ந்து வேறே எடுத்து கொடுக்க வேண்டாமா... இப்படி பெரியவாளுக்கு அபசாரம் பண்ணலாமா... இப்போ என்ன செய்வேன்.. பெரியவா” என்று மனம் நொந்து அங்கலாய்த்தார்.

அந்த காலகட்டங்களில் போன், செல்போன் வசதியில்லாத போது இங்கே இவர் மனமுருகுவதை அறிவிக்க இயலவில்லை.

ஆனால் எல்லாமுமறிந்த தெய்வத்திற்கு இது எட்டாமலில்லை.

சுப்ரமணிய ஐயரின் பக்திக்கு ஆறுதலளிக்கவே ஸ்ரீபெரியவா அன்று தேனம்பாக்கத்தில் விநாயகர் வீற்றிருந்த மேடையின் மேல் காட்சி அளித்தார்.

பெண்ணும், மாப்பிள்ளையும் சென்றபோது தேனம்பாக்க தெய்வ தரிசனத்திற்காக பெரும் பக்த கூட்டம் காத்திருந்தது. ஸ்ரீ மஹா பெரியவாளின் முன் அந்த பக்தர்கள் சமர்ப்பித்த வகை வகையான பழங்கள், முந்திரி, திராட்சைகளென தட்டு தட்டுக்களாய் வைக்கப்பட்டிருந்தன.

இவர்கள் ஸ்ரீபெரியவாளை நெருங்க முடியாததோடு, அப்படியே நெருங்கி தரிசிக்கும்போது அங்கே வைக்கப் பட்டிருக்கும் உயர்தர வஸ்துக்களோடு இந்த அவலையும் சர்க்கரையையுமா சமர்ப்பிப்பது என்று பெரும் தயக்கமுற்றனர்.

அப்போது அங்கிருந்த பக்தர்களிடம் ஒரு சலசலப்பு எழுந்தது.

“யாராவது வைச்சிருக்காளா... யாராவது வைச்சிருக்காளா” என்று எதையோ அவர்கள் ஸ்ரீபெரியவா கேட்பதாக சொன்னது இவர்கள் காதில் இனிமையாக விழுந்தது. அது அவல்பொரியே!



இவர்கள் தங்களிடம் இருப்பதாக கைங்கர்ய அன்பரிடம் கூற ஸ்ரீபெரியவா நெருங்க இவர்களுக்கு வழிவிடப்பட்டது.

“ஸ்ரீபெரியவா கைத்தளம் நிரைக்கனி”..ன்னு பாட ஆரம்பிச்சா... அப்போ அப்பமோடு அவல் பொரின்னு வந்தபோது நிறுத்திட்டு இங்கே தட்டு தட்டா பழமா இருக்கு. வேற என்னவெல்லாமோ இருக்கு. ஆனா பிள்ளையார் முன்னால அவல் இல்லையே யாராவது கொண்டு வந்திருக்காளானன்னு கேட்டா நல்லவேளை நீங்க கொண்டு வந்திருக்கீங்க” என்று அந்த கைங்கர்ய அன்பர் அவர்களிமிருந்து அதை வாங்கி ஸ்ரீபெரியவா முன் வைத்தபோது அந்த அபூர்வ அனுக்ரஹத்தின் அர்த்தம் அவர்களுக்கு தெரியவில்லை. இதை ஊருக்கு சென்று கூறியபோது புரிந்தது.

எங்கோ தன் பக்தன் கீழே சிந்திய அவலை பெரியவாளுக்கு எடுத்துச் சென்றதால் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதற்கு ஆறுதல் அளிப்பதுபோல தானே வலியவந்து அவலை ஏற்ற காருண்யர், இந்த அரிய சம்பவத்தில் பக்தியுடன் அளிக்கப்படுவது அவலாய் இருந்தாலும் அதை குசேலரிடமிருந்து பெற்ற கிருஷ்ணபரமாத்மாவாய் ஏற்றுக்கொள்வதை காட்டிய அதே சமயம் தானும் அந்த விக்னவிநாயகரும் ஒன்றே என்பதை உணர்த்தியுள்ளவை, ஸ்ரீசுப்ரமணிய ஐயரின் பக்தி மூலம் உணர்த்தியுள்ளார்.

❖ ❖ ❖

# 4. கணபதி கவசம் கடவுளாம் உம்வசம்

**எ**ப்போதும் புதுக்கோட்டை ராதா மாமி கொண்டுவரும் மாலை, கிரீடம், பாதுகைகளை ஸ்ரீபெரியவா உடனே ஸ்வீகரித்தக் கொள்பவர்தான். அன்றோ மாமிக்கு பெரிதும் ஏமாற்றம் அளிக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்ட பொட்டலத்தில் என்ன இருக்கிறதென்பதையும் பார்க்காமலேயே பெரியவா அதை ஒதுக்கி வைத்துவிட கைங்கர்ய அன்பர் ஒருவர் அதை உள்ளே கொண்டு வைத்துவிட்டார்.

இதை கண்டதில் மாமிக்கு தான் ஏதும் தவறு செய்து விட்டோமோ, அந்த அருகம்புல் காலில் மிதிபட்ட இடத்திலிருந்து

எடுக்கப்பட்டவைகளாக இருக்குமோ... அதை அறிந்திட்ட ஞானியாய் ஸ்ரீபெரியவா அதை ஒதுக்கிவிட்டாரோ என்ற எண்ணமும் ஏக்கமுமாக நின்றாள்.

மிகவும் மனகலக்கத்தோடு மாமி ஸ்ரீமடத்திலேயே உட்கார்ந்திருக்க அப்போதுதான் மாமிக்கு ஆறுதலாக விட்லூர் பக்தை அங்கு வந்த சேர்ந்தாள். பக்தை பளபளக்கும் விநாயகர் வெள்ளி கவசத்தை ஸ்ரீபெரியவாளிடம் வைத்தார்.

விட்லூர் பகீரதி மாமி அந்த கவசத்தைப் பற்றி பெரியவாளிடம் விபரம் கூறி ஆசிர்வதிக்க வேண்டினார். அப்போதுதான் ஸ்ரீபெரியவா எனும் தெய்வத்துள் விக்னேஸ்வரரை பக்தர்கள் தரிசிக்கும் பாக்யம் ஏற்பட்டது.

அந்த கணபதி வெள்ளி கவசத்தை தன் திருகரங்களில் தாங்கி தன் மார்புடன் அணைத்து பிடித்துக் கொள்வதற்குமுன் கைங்கர்ய அன்பரிடம் ஸ்ரீபெரியவா எதையோ உத்தரவிட்டார்.

உள்ளே சென்று வந்தவர் கையில் காலையில் ராதாமாமி சமர்ப்பித்த பொட்டலம் இருந்தது. அப்போதே அந்த பக்தையின் முகம் மலரலாயிற்று.

பொட்டலத்தை பிரித்து அந்த அழகான அருகம்புல் மாலையை கைங்கர்ய அன்பர் எடுத்து பெரியவாளிடம் தர அதை பெரியவா அந்த வெள்ளி கவசத்திற்கு சார்த்த அந்த மாலை அளவெடுத்து தொடுத்ததுபோல் கச்சிதமாக கணபதி கவசத்தை அலங்கரித்தது.

அதிசயித்து பார்த்துக் கொண்டிருந்த பக்தர்களுக்கு ஸ்ரீபெரியவா அந்த பிள்ளையார் கவசத்தை தானே அணிந்து கொள்வதுபோல் தன் மார்பில் அணைத்து பிடித்து இப்படியும் அப்படியுமாக எல்லா பக்தர்களையும் பார்த்து ஒரு அபூர்வ காட்சியை அருளினார்.

தரிசித்துக் கொண்டிருந்த பக்தர்கள் எல்லோருக்கும் ஸ்ரீபெரியவாளெனும் திருஉருவில் விக்னேஸ்வரரை தரிசிக்கும் பாக்யம் அருளப்பட்டது.

இரு பக்தைகளுக்கும் அளவிலா ஆனந்தம்!

ஒரு பக்தை ஸ்ரீபெரியவாளுக்கு விக்னேஸ்வரருக்கு பிரியமான அருகம்புல் மாலை எடுத்துவர, அதே விக்னேஸ்வரரின் வெள்ளி கவசத்திற்கு ஸ்ரீபெரியவாளிடம் அனுக்ரஹம் பெற இன்னொரு பக்தையும் வர, இவ்விரு பக்தைகளுக்கும் எதிர்பாராத அனுக்ரஹமாக ‘நான்தான் கணேசன்’ என்பதுபோல் ஸ்ரீபெரியவா அருளிய விந்தை சம்பவம் அபூர்வமானதல்லவா!



❖ ❖ ❖

## 5. கணக்கு சொன்ன கணபதி பெரியவா!

**தா**ன் கணேசராக அருளுவதை ஈச்சங்குடி கணேசய்யர் மூலம் உணர்த்திய ஸ்ரீமஹாபெரிவாளின் மகிமையை காண்போம்.

“எனக்கு ஏதேனும் கைங்கர்யம் செய்யும் பாக்யம் கிடைக்க ஸ்ரீபெரியவா உத்தரவிடணும்” என்று ஸ்ரீ கணேசய்யர் என்ற பக்தர் மனபூர்வமான தொண்டு மனத்துடன் ஸ்ரீ மஹாபெரியவாளை கேட்டார்.

ஸ்ரீமஹாபெரியவா நினைத்திருந்தால் ஸ்ரீமடத்திற்கு அவர் சமர்பிக்க விரும்பிய பெரும்தொகையை ஏதாவதொரு ஸ்ரீடத்தின் கைங்கர்யத்துக்கு கேட்டு அந்த பக்தரின் உடல் உழைப்பையும் பெற்றிருக்கலாம்.

இப்படி பிரார்த்தித்தவரிடம், மற்ற பக்தர்களை அனுப்பிய பின் ஸ்ரீபெரியவா, “கும்பகோணத்திலே நிறைய பிள்ளையார் கோவில் இருக்கு. அரசமரத்தடி, ஆற்றங்கரை, தெரு ஓரம்னு மேல்கூரை இல்லாம இருக்கார். எல்லா பிள்ளையாருக்கும் எண்ணெய சார்த்தி, அபிஷேகம் செஞ்சி, சந்தனம் குங்குமமிட்டு... ஊதுவத்தி ஏத்தி வச்சி, தேங்காய் பழம் வெத்தலை பாக்கு நைவேத்யம் செஞ்சுடு. அதுபோதும்.”

இது ஒரு அபூர்வ உத்தரவாயிருந்ததால் கணேசய்யர் தயங்கினார்.

“எனக்கு இந்த பூஜை புனஸ்காரமெல்லாம் பழக்கமில்லை பெரியவா... ரொம்ப வருஷமா வடக்கிலேயே இருந்துட்டேன்” என்றார்.

“கும்பகோணத்திலே தியாகுன்னு ஒருத்தர் இருக்கார். அவர் ஒத்தாசை பண்ணுவார்” என்று அவருக்கு ஸ்ரீமடத்திலிருந்து கடிதமும் எழுதச் சொன்னார். கைங்கர்யம்

முடிந்ததும் திரு தியாகுவையும் கணேசய்யருடன் வருமாறும் எழுதச் சொன்னார்.

இதைப் படிக்கும் எந்த ஒரு கும்பகோணத்துகாரர்களுக்கும் இப்படி எத்தனை பிள்ளையார்கள் இருக்கிறதென்பது தெரியுமா என்பது சந்தேகமே.

அதேபோல்தான் கும்பகோணத்திலேயே வசித்து வந்த தியாகு அவர்களுக்கும் மூலை முடுக்குகளில்லாம் பிள்ளையார்கள் அத்தனையையும் தெரியவில்லை. மிக சிரத்தையுடன் கவனமாக கணேசய்யருடன் தேடி, தேடி எல்லா பிள்ளையாருக்கும் ஸ்ரீபெரியவா உத்தரவிட்டபடி எண்ணெய் சாற்றி, அபிஷேகம், நைவேத்தியம் செய்து முடித்துவிட்டார். கை, கால்கள் பின்னமான பிள்ளையார்களுக்கும் செய்தனர்.

ஸ்ரீபெரியாவ விபரம் கேட்பரென்பதால் எல்லா பிள்ளையார் களின் விபரம் மற்றும் எண்ணிக்கையை குறித்துக் கொண்டார்.

பூர்ணமாக முடித்துவிட்ட நம்பிக்கையில் இருவரும் ஸ்ரீமஹா பெரியவாளை தரிசிக்க கர்நூல் சென்றனர்.

ஸ்ரீபெரியவாளிடம் கிட்டத்தட்ட அந்த 168 பிள்ளை யார்களின் விபரத்தை இவர்கள் கூறியபோது இவர்களுக்கு பெருமையாய் இருந்தது இயல்பானதே.

அந்த 168 பிள்ளையார்களின் விபரத்தை அத்தனை சுலபமாக கிரகித்துக் கொள்வதே முடியாத ஒன்று. ஆனால் ஸ்ரீபெரியவாளோ அத்தனை பிள்ளையாரையும் தனக்கு தெரிந்தாற்போல் கேட்டுக் கொண்டதோடல்லாமல் இவர்களை திகைக்க வைக்கும் ஒரு கேள்வியையும் கேட்டார்.

“எல்லாம் சரி... இன்னும் ஆறு பிள்ளையார் இருக்கே? எப்படி விட்டு போச்சு?” என்ற ஸ்ரீபெரியவாளின் கேள்வியால் ஸ்தம்பித்து நின்றனர்.

மூலை முடுக்கு பிள்ளையார், தெரு ஓர பிள்ளையார், சிதிலமான பிள்ளையார் என்று பார்த்து பார்த்து தேடியதால் இதற்கு மேலும் பிள்ளையார்கள் இருக்கும் வாய்ப்பே இல்லாதபோது, ஸ்ரீபெரியவா இப்படி சரியாக ஆறு பிள்ளையார் விடுபட்டு விட்டதாக சொன்னபோது எதிரே ஸ்ரீபெரியவாளாய் காட்சி யருளும் தெய்வம் அந்த கணபதியே என்பதாக உணர்ந்தனர்.



அதோடு அந்த கணேச பெரியவா விடவில்லை. அந்த ஆறு பிள்ளையார்களின் விபரத்தையும் கூறினார்.

“சாக்கோட்டை பக்கம் ஒரு பிள்ளையார், சுவாமி மலை சாலையில் ஒன்று, குடியானவர்கள் தெரு பிள்ளையார், அரசலாற்றங்கரை பிள்ளையார்...”என ஆறு பிள்ளையார்கள் விடுபட்டதை மிக அதிசயத்தக்க வகையில் சொல்லி நின்றார்.

சரிவக்ஞரான ஸ்ரீபெரியவாளுக்கு மட்டுமே இது சாத்யம் என்பது ஒருபுறமிருக்க, தன்னுள் அந்த முழுமுதற் கடவுளாம் கணேசரும் உறைந்தருளுவது சத்தியம் என்பதையும் ஸ்ரீகணேசய்யர் மூலமாக உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

❖ ❖ ❖

# 6. தும்பையை ஏற்ற தும்பிக்கை பெரியவா!

**ஸ்ரீ**சேப்பு ராமமூர்த்தி எனும் சாத்வீகமான அன்பர் ஸ்ரீபெரியவாளுக்கு பிக்ஷை கைங்கர்யம் செய்யும் பாக்யம் பெற்றவர்.

ஒருமுறை இளையாத்தங்குடியில் அருள்வாசம் புரிந்திடும் போது ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா இவருக்கு சூட்சமமாக தான் கணேசரென்றும் ஈஸ்வரரென்றும் உணர்தியருளியுள்ளார்.

மாதுஸ்ரீ பொன்னம்மா பாட்டி ஸ்ரீபெரியவாளுக்கு புஷ்பகைங்கர்யம் செய்பவள். இளையாத்தங்குடியில் இன்னும் சில பக்தைகளோடு பூக்களை பறித்தும் தொடுத்தும் ஸ்ரீமடத்து பூஜைக்கு தினம் கொடுப்பவள்.

அப்படி ஒரு நாள் ஒரு முழ நீள உயரான குவளை நிறைய தும்பைப் பூவை பறித்து வந்தாள். ஒரு கையளவு தும்பை கிடைப்பதும் பறிப்பதுமே மிக கடினமான ஒன்று. இப்படி ஒரு நீண்ட குவளையில் தும்பையை எப்படி, எத்தனை நேரமோ தன் உடன் சேர்ந்த பக்தைகளுடன் பறித்திருந்தாள்.

அதை பூஜைக்காக பறிப்பதாக பாட்டி எண்ணவில்லை போலும்.

"பெரியவாளுக்காக பறிச்சுண்டு வந்தோம்" என்றாள்.

உடனே ஸ்ரீபெரியவா அங்கிருந்த அதிஷ்டானத்துள் இருக்கும் ஒரு அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டார். வேறு யாரும் பார்க்க இயலாத இடத்தின் ஜன்னல் வழியே தும்பையை பறித்த பக்தைகளோடு பொன்னம்மா பாட்டி தரிசித்துக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீ மஹாபெரியவா ஸ்ரீசேப்பு ராமமூர்த்தியை உள்ளே அழைத்தார்.

"இதை என்மேலே கொட்டு" என்று தும்பை பூ குடுவையை காண்பிக்க, ஸ்ரீராமமூர்த்திக்கு எதிர்பாராத பரவசம்.

அந்த குவளை தும்பை பூக்களையும் ஸ்ரீபெரியவாளுக்கு அபிஷேகமாக வார்த்தபோது, அவருக்கு சிலிர்த்தது. ஜன்னல் வழியே தரிசித்த பக்தைகள் பார்வையில் அங்கு விநாயகர் தெரிந்தார். அத்திருஉரு முழுவதும் தும்பையின் வெண்மை படர்ந்து அப்பூவை உகந்து ஏற்கும் தும்பிக்கையோனாகவும், ஈஸ்வரராகவும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரியவாளை காட்டியது.

❖ ❖ ❖

# 7. ஸ்ரீ ஐயப்பனாக ஸ்ரீ ஆதிசேஷனாக அன்பு பெரியவா!

**பூ**ர்வாஸ்ரமத்தில் ஸ்ரீகண்டன் எனும் கைங்கர்ய அன்பரும் ஸ்ரீபாலு எனும் கைங்கர்ய அன்பரும் பரமேஸ்வரரான ஸ்ரீபெரியவாளிடம் மிக நெருக்கமாகவும், கடுமையான கட்டுப்பாடுகளை தாங்கிக் கொண்டும் ஸ்ரீபெரியவா சேவை எனும் பாக்யத்தோடு குவியும் எல்லா பக்தர்களுக்கும் அத்தெய்வத்தின் அருளை பெற்று தரும் பாலமாகவும் திருப்பணி செய்த புண்ணியவான்கள்.

இந்த இருவருக்கும் தனித்தனியே அபூர்வ தரிசனமாக பேரனுக்ரஹம் கிட்டியுள்ளது.

ஸ்ரீமஹாபெரியவா கூப்பிட்ட குரலுக்கு உடனே சென்று வேண்டியதை செய்யும் கடமை உணர்ச்சியுடன் இருந்த



ஸ்ரீகண்டன் அவர்கள் ஒருநாள் விடியற்காலை மூன்று மணிக்கு ஸ்ரீபெரியவாளை மேனாவில் தரிசிக்க சென்றபோது அங்கே ஸ்ரீபெரியவாளை காணாதது அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் அங்கே தகதகவென தங்கத்தாலான ஐயப்பனாக திருகாட்சி கண்ணில் பட மெய்சிலிர்த்தார்.

அதைப் பார்த்த ஆனந்த அதிர்ச்சியை தாங்காமல் அப்படியே மயக்கமுற்று கீழே விழுந்தார்.

பின்னாலேயே வந்த ஸ்ரீபாலு மாமா இவரை எழுப்பி, "என்ன இப்படி மயக்கம் போட்டு விழுந்துட்டே" என்று கேட்க, தங்க ஐயப்பனாக ஸ்ரீபெரியவா அமர்ந்திருந்த மேனாவிற்குள் அதிசய தரிசனம் கிடைத்ததை ஸ்ரீகண்டன் சொன்னார்.

அப்போது ஸ்ரீபாலு ஸ்ரீபெரியவாளிடம் சுவாதினமாகவும், சற்று வேடிக்கையாகவும், "என்ன பெரியவா அவருக்கு மட்டும் தங்கமா, வெள்ளியா தரிசனம் எனக்கு இல்லையா?" என்றுள்ளார்.

அதற்கு அத்தெய்வம் பரம ரகசியத்தை தானும் மறைத்தவராக, "அவன்தான் எதைக் கேட்டாலும் வேண்டாம் வேண்டாம்னு சொல்றான்... என்னை விட்டுட்டு எங்கேயும் போறதில்லே... அதனாலதான் "என்று தான் தரிசனம் தந்ததை முழுமையாக ஒப்புக் கொள்ளாமல் மழுப்புவராய் அருளினார். அதன்பின் "நான் இங்கிருக்கிற மேனாவையோ ரூமையோ சாத்தியிருந்தா திறக்கறபோது ஜாக்ரதையா இருக்கணும்" என்ற அப்படி திறந்து பார்த்ததால்தான் காட்சியைக் கண்டு ஸ்ரீகண்டன் மயங்கி விழுந்த காரணமென சூட்சமமாக சொன்னார்.

"சரி பெரியவா" என்று அப்போது ஸ்ரீபாலு மாமா சொன்னாலும் ஸ்ரீபெரியவாளிடம் ஸ்ரீகண்டனுக்கு மட்டும் விசேஷ தரிசனமா என்று கேட்டதற்காகவோ என்னவோ இவருக்கும் அப்படி ஒரு சந்தர்ப்பம் அமையும்படி ஒரு மாதம் கழித்து ஒரு நாள் இவருக்கு ஸ்ரீபெரியவா சொன்னது மறந்துவிட்டது.

அன்று கதவை தட்டிவிட்டு போக மறந்துவராய் ஸ்ரீபெரியவா அறைக்குள் நுழைந்தவர் அங்கே ஆதிசேஷன் ஐந்து தலையுடன் ஒரு க்ஷணநேரம் பார்த்ததில் பயந்து இவரும் மயக்கம் வந்து விழுந்துவிட்டார்.

மேனாவிற்குள்ளேயோ, அறையிலேயோ ஏகாந்தமாக இருக்கும் பரபிரம்மம் எந்த சொரூபத்திலும் காட்சி தரவல்லது என்ற அனுபவத்தை பேரனுக்ரஹமாக ஸ்ரீபெரியவா இந்த இரண்டு கைங்கரிய அன்பர்களுக்கும் அருளியுள்ளதை 'தாயுமான மகான்' என்ற நூலில் ஸ்ரீ முத்துமணி (ஸ்ரீ கண்டன் அவர்களின் பூர்வாஸ்ரம மருமான்) சொல்ல திருமதி ரேவதிகுமார் எழுதியுள்ளார்.

❖ ❖ ❖

# 8. தக்ஷிணாமூர்த்தி பெரியவா!

**ஸ்ரீ**சைலத்தில் விடியற்காலை பொழுது, ஸ்ரீபெரியவா அந்த நாலு மணி நெருங்கும் அதிகாலையில் எழுந்துக் கொள்கிறார். ஸ்ரீபெரியவா படுத்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த ஸ்ரீநாராயணன் அவர்களுக்கு ஸ்ரீபெரியவா எழுந்துவிட்டாரென உள்ளுணர்வு ஏற்பட அவரும் அவருடைய நண்பரான சிம்சன் ஜானகிராமன் அவர்களும் எழுந்து விடுகின்றனர்.

இவர்கள் எழுந்ததும் தெய்வ செயலாக நிகழ அந்த நாலு மணி இருட்டில் காட்டு பகுதியான ஸ்ரீசைலத்தில் ஸ்ரீபெரியவா எங்கோ கிளம்ப இவர்கள் இருவரும் கூட செல்லும் பாக்யம் அருளப்பட்டவராயினர்.

"அந்த அரிக்கன் விளக்கை எடுத்துக்கோ" என்று ஸ்ரீபெரியவா சொல்ல அந்த மெல்லிய ஒளியில் ஸ்ரீபெரியவா எங்கே போகிறார் என அறியாதவர்களாய் இருவரும் தொடர்கின்றனர்.

அந்த காட்டு சாலையில் சுமார் நாலைந்து கிலோ மீட்டர் ஸ்ரீபெரியவா நடக்க இவர்கள் ஒன்றும் புரியாமல் தவிக்க ஒரு இடம் வந்ததும் சாலையை விட்டு அகன்று இருபது அடியோ, முப்பது அடியோ உள்ளே காட்டில் ஸ்ரீபெரியவா நுழைந்து நடக்க இருவரும் பயமும் தயக்கமுமாக தொடர்ந்து செல்கின்றனர்.

ஒரு மரத்தடியில் மாமுனிவர் நிற்கிறார்.



"இதுக்கு காலால விருட்சம்னு பேரு" என்று ஸ்ரீபெரியவா மௌனம் கலைய சொல்கிறார். அதன்பின் அத்தெய்வம் தந்த தகவல் இருவரும் எதிர்பாராத ஒன்றாய் அமைந்தது.

"இந்த விருட்சத்துக்கு கீழேதான் ஆதிசங்கரர் தவமிருந்தார்" என்று ஸ்ரீபெரியவா சொல்லியதோடு நில்லாமல், "இங்கே ரெண்டு சுனைகள் இருக்கு... ஒண்ணுக்கு பேரு பஞ்சதாரா... இந்த பக்கம் இருக்கிறது. பாலதாரா பஞ்சதாராவிலே தாரை தாரையாக தண்ணி கொட்டும்... பாலதாராவிலே அப்படியில்லாம கொஞ்சமா வரும். ஆனா குடிக்கறத்துக்கு அமிர்தமாக இருக்கும். இது ரெண்டும் ஆதிசங்கரர் தவம் செய்யறதுக்கு பங்கம் வராம கைலாசத்திலிருந்து வந்தது."

இப்படி எங்கோ ஒரு காட்டில் ஏதோ ஒரு மரத்தைத் தேடி அதன் விசேஷத்தை கூறுவதோடல்லாமல், ஆதிசங்கரர் காலத்தில் நடந்தவைகளான சம்பவங்களை தானே பார்த்தது போல் ஸ்ரீபெரியவா சொன்ன அதிசயத்தை வியந்து இருவரும் நின்றனர்.

அதோடு அந்த அபூர்வம் நிற்கவில்லை.

"நான் இந்த மரத்தடியிலே உட்கார்ந்து ஜபம் பண்ண போறேன். நானா கண்ணை தொறந்து பார்க்கற வரைக்கும் நீங்க ரெண்டு பேரும் யாரையும் எங்கிட்டே தரிசனத்துக்கு விடவேண்டாம்... வர்றவாளெல்லாம் தூரத்திலேயே நின்னு பார்த்துட்டு போகட்டும்" என்று சொல்லிவிட்டு மரத்தடியில் பத்மாசனம் போட்டு உட்கார்ந்து விட்டர். தன் கரங்களில் சின்முத்திரை தாங்கி தண்டத்தை மரத்தில் சாய்த்து வைத்துவிட்டு தன் இரு விழிமலர்களையும் மூடிக்கொண்டார்.

அந்த விடியற்காலை ஐந்தரை மணியிலிருந்து ஸ்ரீபுது பெரியவா தேடி ஒரு அன்பரை அனுப்பி அழைத்துவர சொன்ன மாலை ஐந்து மணிவரை அன்ன ஆகாரம் ஏதுமறியா யோக நிலையில் காவலாக நின்ற இந்த இருவருக்குமே எந்தவித பசியோ உபாதையோ தெரியாத அதிசயத்துடன் சாக்ஷாத் ஆதிசங்கரராய் தக்ஷிணாமூர்த்தியாய் அங்கே அந்த தவக்கோலம் காட்சி அருளியது. தரிசித்த இருவரின் பாக்யத்தை என்னென்னபது!

❖ ❖ ❖

# 9. ஆதிசங்கராய் ஒரு தரம் : பெரியவாளாய் இன்னொரு தரம்!

ஒருமுறை ஸ்ரீமஹாபெரியவாளின் பக்தையான செல்லம்மா பாட்டி மிக சிரத்தையாக ஸ்ரீசக்ரம் படத்தில் வரைந்து ஸ்ரீபெரியவாளிடம் சமர்ப்பித்தாள். சாஸ்திர அடிப்படையில் வரையப்பட்ட இரண்டடி நீள அகலமான அதை ஸ்ரீபெரியவா காமாக்ஷி அம்மன் கோயிலில் வைக்கச் சொல்லி உத்தர விட்டார்.

அந்த தினம் பங்குனி மாத பௌர்ணமி தினமாகும்.

பதினைந்து நாட்களானதும் திரும்பவும் பக்தை தரிசிக்க வந்தாள்.

கைங்கர்ய அன்பர்கள் பாட்டியிடம் அந்த ஸ்ரீசக்ரத்தை காமாக்ஷி கோயிலில் ஸ்ரீபெரியவா வைக்கச் சொன்னதை கூற பாட்டிக்கு மகிழ்ச்சி.

ஸ்ரீபெரியவாளோ பாட்டியிடம், “காமாக்ஷி அம்மன் கோயில்லே உன்னோட ஸ்ரீசக்ரத்தை பிரதிஷ்டை செஞ்சேன் தெரியுமோ உன்கிட்டே சொன்னாளோ” என்று பிரதிஷ்டை என விசேஷமாக குறிப்பிட்டார்.

செல்லம்மா பாட்டிக்கு இதைக் கேட்டதும் “ஸ்ரீ ஆதிசங்கரரின் நினைவு வந்தது.

“ஆமாம் பெரியவா கேள்விப்பட்டேன்” என்று சொன்னதோடு நிற்காமல் “அப்போ பகவத்பாதாளா ஒருதரம் இப்போ பெரியவாளா இன்னொரு தரம்” என்று ஸ்ரீ ஆதிசங்கரரின் மறுதிருஅவதாரமே ஸ்ரீபெரியவா என்பதான பொருள்பட கூறினார்.

அப்போது ஸ்ரீபெரியவாளின் திருமுகம் பிரகாசமானது. மிகவும் மெலிதான குரலில் அந்த தெய்வ ரகசியத்தை தன் ஆத்மார்த்த பக்தையின் காதில் விழும்படி,

“ஹூம்” என்று ஆமோதித்து அதை கேட்கும் பெரும்பேற்றை செல்லம்மா பாட்டிக்கு நல்கினார்.

ஸ்ரீபெரியவாளே ஆதிசங்கரர் என்பது செல்லம்மா பாட்டிக்கு வெளிகாட்டியருளப்பட்டுள்ள சம்பவம் இது!



ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை தினமான பங்குனி மாத பௌர்ணமி தோறும் அம்மன் கோயில் அன்னபூர்ணி மண்டபத்தில் காட்சி தரும் இந்த புனித ஸ்ரீசக்ரத்துக்கு ஒரு பெரியவா பக்தர் மலர் கொண்டு சமர்பித்து வழிபட்டுக் கொண்டிருக்கிறார்.

செல்லம்மா பாட்டியின் இன்னொரு அரிய அனுபவம் இது. அலகாபாத் திரிவேணி சங்கமத்தில் தெய்வமாம் ஸ்ரீபெரியவா ஸ்நானம் செய்யும் திருகாட்சியை இன்னும் சில பக்தர்களோடு பாட்டியும் தரிசித்துக் கொண்டிருந்தாள்.

அந்த அனந்தத்திற்கு தடையாக அவர்கள் கண்களில் அந்த முதலை தலை தூக்கி பார்த்தது. பதை பதைத்துப் போய் பக்தர்கள் ‘பெரியவா பெரியவா’ என்று உரக்க குரல் கொடுத்தனர்.

“பெரியவா வந்துடுங்கோ” என்று பக்தர்கள் கூச்சலிட, மகான் உடல் ரீதியிலும், மனரீதியிலும் எந்த பதட்டமோ, சஞ்சலமோ அடையாதவர்போல் நின்ற காட்சி அசாதாரணமாக இருந்தது.

முதலையும் தன்னை தரிசிக்க வந்ததுபோல் ஸ்ரீபெரியவா பக்தர்முன் நிற்பதுபோல் சலனம் ஏதுமின்றி நின்றார். இதை பார்த்து மிகவும் அச்சப்பட்ட பக்தர்கள் செய்வதறியாது விக்கித்து நின்றனர்.

பேரதிசயமாக அந்த முதலை ஸ்ரீபெரியவாளை பார்க்கவே வந்ததுபோல் அங்கிருந்து சாதுவாக அகன்றது. ‘ஸ்தித ப்ரக்ஞன்’ என்ற நிலைக்கு ஒரு உதாரண புருஷராய் ஸ்ரீபெரியவா இதைப்பற்றி ஏதும் பாதிப்பு அடையாதவராய் நின்ற கோலம் செல்லம்மா பாட்டிக்கு வியப்பளித்தது.

ஸ்ரீபெரியவா அங்கிருந்து வெளியே வந்ததும் ஆவலோடு பாட்டி கேட்டுவிட்டாள்.

ஒரு புன்னகையோடு ஸ்ரீபெரியவா சொன்ன பதிலில் ஒரு தெய்வ ரகசியமே புதைந்திருந்தது.

“பகவத்பாதாளையும் இப்படித்தான் முதலை ஒண்ணு கவ்விண்டது” என்று ஸ்ரீபெரியவா ஆரம்பித்து அந்த பாலகனை பெற்ற அன்னையாம் ஆரியாம்பாளிடம் தான் சந்யாசம் கொள்ள சம்மதித்தால் முதலை விட்டுவிடும் என்று பாலகன் கூற, அதன்படியே லோகமாதாவான ஆரியாம்பாள் உறுதியளிக்க

முதலை விட்டுவிட்டு அகன்ற கதையை ஸ்ரீபெரியவா சொன்னார்.

இதைக் கேட்டு நின்ற பக்தர்கள் யாவருக்கும் ஏற்கனவே ஆதிசங்கரரின் சந்யாச சம்பவம் தெரிந்திருக்க, ஸ்ரீபெரியவாளெனும் தெய்வம் தொடர்ந்து என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலோடு இருந்தனர்.

“இது ரெண்டாயிரம் வருஷத்துக்கு முனனாலே நடந்தது. அப்போ முதலையா வந்தது ஒரு கந்தர்வன். அவனுக்கு ஸ்ரீஆதிசங்கரரை பாலகனாய் தரிசிக்க மட்டுமே முடிந்ததிருந்தது. ஒரு சந்யாசி கோலத்தில் தரிசிச்சாதான் பாவ விமோசனோ என்னவோ, ரெண்டாயிரம் வருஷத்துக்கப்புறமா இங்கே அதனாலே அதே முதலையா வந்திருக்கானோ என்னவோ” என்று வேடிக்கையாக சொல்வதுபோல பக்தர்களை திசைதிருப்ப பெரியவா நாடகமாடினார்.

ஆனால் செல்லம்மா பாட்டி என்ற பரமபக்தைக்கு மட்டும் ஸ்ரீபெரியவா சூட்சமாக தெரிவித்த தெய்வரகசியம் புரிந்திருந்தது.

சாக்ஷாத் அந்த ஆதிசங்கரரே ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரியவாளின் திருகோலத்தில் தரிசனம் நல்குவதை பூர்ணமாக பாட்டி உணர்ந்து விட்டாள்.

❖ ❖ ❖

# 10. மீனாட்சி பெரியவா! மேன்மை பெரியவா!

**மு**ன்னுரை ஒன்றை எழுதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளேனும் தெய்வம் தன்னை பலவேறு தெய்வங்களாக காட்டியருளிய சம்பவங்களை தொகுத்துக் கொண்டிருந்தேன்.

இரண்டு வார காலமாக பல நூல்களிலிருந்தும், யூட்யூப் அன்பர் ஸ்ரீசிவராமன் அவர்களின் ‘பெரியவா புராணம்’ பேட்டிகளிலிருந்தும் இது சம்பந்தமான சம்பவங்களை எடுத்து எழுதிக் கெண்டிருந்தபோது, சேலம் ஸ்ரீரவிச்சந்திரன் அவர்கள் என்னை உஞ்சவிர்த்தி ஒன்றில் கலந்துக் கொள்ள அழைத்திருந்தார்.



அவர் என்னை அழைத்திருந்ததற்கான முக்கிய காரணம் என்னிடம் ஒரு அபூர்வ பெரியவா மகிமையை பகிர்ந்துக் கொள்ளத்தான் என்பது தெரிந்தது.

தை மாத அனுஷ ஜயந்திக்காக சேலத்தில் அவருடைய கிரஹத்திற்கு வந்திருந்த பொள்ளாச்சி ஜெயம் பாட்டி அவர்களின் மகன் கூறிய சம்பவம் என்ற பீடிகையுடன் ஆரம்பித்து, இந்த சம்பவத்தை இதுவரை யாரிடமும் பகிர்ந்து கொண்டதில்லை என்பதாகவும் அவர் மகன் கூறினாராம்.

இன்னுமோர் தகவலாக ஜெயம் பாட்டி தன் காலத்துக்கு பிறகே இதை வெளியே வேறு யாருக்கும் தெரிவிக்க வேண்டுமெனவும் சொன்னதாக ஸ்ரீரவிசந்திரன் அவர்கள் ஆரம்பித்தார்.

அப்போது மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்திற்காக ஸ்ரீமஹாபெரியவா விஜயம் செய்திருந்த சமயம் பொள்ளாச்சி ஜெயம் மாமியும் எப்போதுமே ஸ்ரீபெரியவா சன்னதியிலேயே மகானை தரிசித்துக் கொண்டே இருக்கும் ஆவலும் பக்தியுமாக அங்கும் போயிருந்தாள்.

ராமேஸ்வரம் மடம் என்ற இடத்தில் ஸ்ரீபெரியவா தங்கி இருக்க, கும்பாபிஷேகத்திற்கு ஸ்ரீபெரியவாளை அழைத்துவர திரு. பி.டி. ராஜன் தலைமையிலான கமிட்டியினர் நடமாடும் தெய்வத்தை தக்க மரியாதையோடு அழைத்துச் சென்றனர்.

மடத்தின் கைங்கர்ய அன்பர்களும், பக்தர்களும் பெண்டிரும் ஸ்ரீபெரியவாளுடன் கும்பாபிஷேக காட்சியை தரிசிக்க சென்றுவிட, இங்கே கடமை தவறாத பூஜைகட்டு விஷயங்களை கவனித்து வந்து மேலூர் மாமா எனும் அன்பரும், இரண்டு பாராகாரர்களும், மிக அத்யாவசியமாக இருக்க வேண்டியவர்களாக மடத்திற்கு காவலாக இருக்க, அப்படி அவசியம் ஏதுமில்லாமல் பொள்ளாச்சி மாமியும் கும்பாபிஷேகம் போகாமல் தங்கிவிட்டாள்.

அதற்கு மாமி ஸ்ரீபெரியவாளிடம் சொன்ன காரணத்தை பிறகு காண்போம்.

தன் திருக்கரங்களால் சாக்ஷாத் சுந்தரேச பெரியவா, மீனாட்சி அம்மன் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்வித்தருளி மடத்திற்கு திரும்பினார்.

மடத்தின் வாசலில் ஸ்ரீபெரியவாளுக்கு ஆரத்தி எடுக்க, நான், நீ என்ற போட்டி போட யாருமில்லாத சந்தர்ப்பமாக அமைந்ததை பேரனுக்ரஹமாக ஆனந்தித்து தான் ஒருவளாய் நடமாடும் தெய்வத்திற்கு பொள்ளாச்சி மாமி ஆரத்தி காண்பித்து அகமகிழ்ந்தாள்.

ஸ்ரீபெரியவா உள்ளே வந்தார்.

“ஏன் நீங்களெல்லாம் கும்பாபிஷேகத்துக்கு வரலையா?” என்று மேலூர் மாமாவிடமும் இரண்டு பாராகாரர்களிடமும் பொதுவாக கேட்டார்.

எப்படியும் மடத்தை பூட்டிக் கொண்டு போக முடியா தென்பதால் அவர்கள் மூவரும் அத்யாவசியமாக மடத்தில் இருந்தே ஆகவேண்டுமென்பதை அறிந்தவராயிருந்தும், அவர் களுக்கு கும்பாபிஷேகத்தை தரிசிக்க இயலவில்லையே என்ற ஏக்கம் இருந்தால் அதற்கு ஒரு ஒத்தடம் தருவதுபோல் இருக்கட்டுமென ஸ்ரீபெரியவா கேட்டிருக்கக் கூடும்.

மேலூர் மாமாவும் இதையேதான் கூறினார்.

“ஆமாம் நீ ஏன் வரலே” என்று ஸ்ரீபெரியவா மாமியிடம் திரும்பினார்.

“அப்படி கும்பாபிஷேகத்து வந்திருந்தா பெரியவாளுக்கு இப்போ ஒருத்தியா ஆரத்தி எடுக்கற சந்தர்ப்பம் கிடைத் திருக்காதே பெரியவா அதனாலேதான் வரலே” என்று மாமி தன் உண்மையான எண்ணத்தை வெளிப்படுத்தினாள்.

ஸ்ரீபெரியவா புன்சிரிப்போடு பூஜை மேடைக்கு சென்றார். பின் இவர்களுடன் சில கைங்கர்ய அன்பர்களும் உள்ளே சென்றனர்.

பூஜை அமைந்திருந்த மேடைக்கு சில படிகள் ஏற வேண்டியிருந்தன.

ஸ்ரீபெரியவா முதல் படியில் பாதத்தை பதித்தார். திரும்பி பின்னால் கீழே நிற்கும் மேலூர் மாமாவையும் பொள்ளாச்சி மாமியையும் பார்த்தார்.

“நீங்க ரெண்டு பேரும் கும்பாபிஷேகத்துக்கு வரமுடியலே... உங்களுக்கு அம்பாள் தரிசனம் கிடைக்கலே... ஹீம்... என்ன பண்றது?” என்று ஒரு ஏக்கத்தோடு இவர்களைப் பார்த்தார்.



தெய்வமே தங்கள் சார்பாக இப்படி ‘என்ன பண்றது’ என்ற வாக்கினால் வருடிக் கொடுத்தது இதமாகத்தான் இருவருக்கும் இருந்திருக்கும்.

இந்த ஆறுதலே போதுமானதுதான்.

ஆனாலும் தெய்வமாம் ஸ்ரீபெரியவாளின் கருணை அதோடு விடுவதாயில்லை.

காருண்யம் அடுத்த படியில் திருபாதங்களை எடுத்து வைத்தது. இரண்டாம் படியில் பாதம் பதித்தபின் இரண்டாம் முறையாக மகானின் திருவாக்கு இவர்களை திரும்பவும் தழுவியது.

“நீங்கள் ரெண்டு பேரும் கும்பாபிஷேகத்துக்கு வரமுடியலே. உங்களுக்கு அம்பாள தரிசிக்க முடியாம போச்சி... ஹீம்... என்ன பண்றது?” என்று ஸ்ரீபெரியவா மறுபடியும் சொன்னதில் ஏதோ ஒரு காரணம் நிச்சயம் இருப்பதாக தோன்றியது.

முதல் படியின் ‘என்ன பண்றது’ என்பதில் அவ்வளவுதான் நீங்கள் கொடுத்து வைத்தது. ஹீம் என்ன பண்ணலாம் விடுங்க என்று இவர்களை சமாதானம் செய்யும் தொனியில் வெளிப்பட்ட ஸ்ரீபெரியவாளின் வாக்கு, அடுத்த படியில் ‘என்ன பண்றது’ என்பதில் ‘இவர்களுக்கு இதற்கான ஈடாக நான் என்ன செய்வது’ என்று ஸ்ரீபெரியவா கவலைப்படுவதாக காட்டியது.

அடுத்த க்ஷணமே அந்த அபார கருணை அந்த ஈடில்லா தரிசனத்தை காட்டி அருளிவிட்டது.

சடாலென திரும்பிய ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளெனும் திருஉருவம் சாக்ஷாத் மீனாட்சியாய் ஜொலிக்க அந்த எதிர்பாராத தரிசனத்தால் பொள்ளாச்சி பக்தை சற்றே நிலை தடுமாறினாள்.

சுதாரித்துக் கொண்டவளாய் கண் எதிரே காட்சி தரும் மீனாட்சி அம்மையை மெய்சிலிர்க்க நமஸ்கரித்தாள்.

அப்போது பக்தையுடன் நமஸ்கரித்த மேலூர் மாமாவும் இதே போலொரு அனுக்ரஹ பாக்யம் அடைந்தவர்போல் நமஸ்கரித்து ஆனந்த கண்ணீருடன் எழுந்து,

“மீனாக்ஷி தாயே மீனாக்ஷி தாயே” என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

சகஜ நிலைக்கு வர சில நிமிடங்கள் ஆனதும் பொள்ளாச்சி பக்தைக்கு தான் கண்ட தரிசனம் பிரம்மையல்ல சத்தியம் என்பது. மேலூர் மாமாவும் இப்படி மீனாக்ஷி மீனாக்ஷி என்று ஸ்ரீபெரியவாளை பார்த்து பக்தி பெருக்கோடு கன்னத்தில் போட்டுக் கொண்டதிலிருந்து உறுதியாயிற்று. இருவரும் மெய்மறந்த நிலையில் நிற்க ஸ்ரீபெரியவா அறைக்குள் சென்று விட்டார்.

அப்போது மாமி மேலூர் மாமாவிடம், "என்ன மாமா நீங்க பாத்தேளா... பெரியவா மீனாட்சியாட்டமா தெரிஞ்சாளே" என்று சந்தேகம் தெளிய கேட்டாள்.

"மாமி நீங்களும் பாத்தேளா ரொம்ப ஆச்சர்யமான்னா இருக்கு" என்று அவர் பரவசத்தோடு ஸ்ரீபெரியவா மீனாட்சியாக காட்சி அருளியது சத்தியம் என தெளிவுபடுத்தி விட்டார்.

இப்படியும் ஒரு அனுக்ரஹமா என்று இருவரும் அந்த தரிசனத்தை நினைத்து நினைத்து அசைப்போட்டு அன்று முழுவதும் ஆனந்தமடைந்தனர்.

அதோடு நிற்காமல் அடுத்த நாளும் இது தொடர்ந்தது பொள்ளாச்சி பக்தையை ஸ்ரீபெரியவா அடுத்த நாள் கோயிலுக்கு செல்லுமாறு கூற பக்தையும் மீனாட்சி சன்னதி முன் போய் நின்றாள்.

அங்கே மாமி வரவிற்கே காத்திருந்தது போல சன்னதி யிலிருந்து குருக்கள் நேற்றைய அம்மன் அலங்காரங்களை அகற்றி பெரிய மூங்கில் தட்டில் கொண்டு வந்து வெளியே வைத்தார். மாமி அந்த நிர்மால்யம், நகை இத்யாதிகளை பார்த்தபோது ஒன்றும் தோன்றாதவளாய் அம்பாளுக்கு சாத்திய அந்த பச்சை கலரில் ஜொலித்த வைர ஊசி பட்டுப்புடவையைப் பார்த்ததும் விக்கித்து நின்றாள். இந்த புடவையை இதற்குமுன் எங்கோ பார்த்த மாதிரி தோன்ற அது நேற்றைய திருகாட்சியில் ஸ்ரீமீனாட்சி பெரியவா அணிந்திருந்த அதே புடவையாக ஞாபம் வந்ததில் இன்ப அதிர்ச்சியுற்றாள்.

அடடா என்னதொரு பாக்யம் என்று மனம் பூரிப்படைய ஸ்ரீமடத்திற்கு மேலூர் மாமாவை தேடி ஓடினாள்.

"மாமா! நேத்து பெரியவா காட்சி தந்தாளே அப்போ என்ன புடவை கட்டிண்டிருந்த ஞாபகமிருக்கா?" என்றாள்.



மேலூர் மாமா தினமுமே திரிபுரசுந்தரிக்கான பூஜைக்கு பாவாடை, நகைகளை கவனமாக தேர்வு செய்து கொடுத்து திருப்பி வாங்கும் பொருப்பான கைங்கர்யம் செய்து வந்தவராயிருந்ததால் அவர் கவனத்தில் தரிசனத்தில் காட்சி தந்த புடவை பதிந்திருந்தது.

"மாமி பச்சை கலர்லே வைர ஊசி பட்டுப்புடவை. ஆமாம் ஏன் கேட்கிறேள்?" என்று அவரிடமிருந்து உடனே பதில் வந்தது.

"மாமா! பெரியவா எப்படிப்பட்ட அனுக்ரஹம் செஞ்சிருக்காக தெரியுமா" என்று பொள்ளாச்சி பக்தை கோயிலில் கண்ட அதிசயத்தை மேலூர் மாமாவிடம் மட்டும் பகிர்ந்து கொண்டாள்.

பின் இப்படி யாருமே நம்ப மறுக்கும் பேரனுக்ரஹத்தை தன் மகனிடம் மட்டும் சொல்லி ஆனந்தித்த மாமி, அதை தன் வாழ்நாள் வரை வேறு யாரிடமும் கூற தயங்கி தவிர்த்தாள்.

இப்போது மாமியின் மகன் மூலம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் தெய்வம் மீனாக்ஷியாகவும் தரிசனம் தந்தது வெளிப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# 11. அம்பாளாய் ஆன குரு!

**ஸ்ரீ** மஹா பெரியவாளிடம் எல்லையில்லா பக்தி கொண்ட திரு நாராயணன் சென்னை பாண்ட்ஸ் கம்பெனியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர். அவர் ஒரு நவராத்திரி சமயம் ஸ்ரீபெரியவாளை கலவையில் தரிசிக்க வந்தார்.

ஸ்ரீ புதுப்பெரியவா பூஜை செய்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசிக்க பெரும் பக்த கூட்டம் அலை மோதியது. இவர் எதிரில் ஒரு கட்டிடத்தில் உட்கார்ந்திருந்தார். இவரிடம் ஒரு பெண்மணி வந்து, "எங்களுக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?" என்று அருகிலிருந்த ஒரு அயல்நாட்டப் பெண்ணைக் காட்டி "இவளுடைய விஸா நாளையோடு முடிவடைகிறது. சுவாமிகளை இப்போதே தரிசனம்

செய்தால்தான் உடனே சென்னை சென்று விசா கெடு முடிவதற்குள் இவள் தன் நாட்டிற்கு புறப்பட முடியும். பெரியவாளை தரிசனம் செய்ய தயவுசெய்து உதவுங்கள்" என்று தாழ்மையோடு கேட்டாள். அப்படியே ஏற்பாடானது.

அப்போது ஸ்ரீநாராயணனுக்கு ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசிக்கும்போது தேஜோமயமாக திருமேனி எங்கும் திருநீறு பூசி அந்த சாக்ஷாத் சிவபிரானே எதிரில் வந்து நிற்பதுபோல் ஒரு அபூர்வ காட்சியாய் தெரிந்தது.

இந்த தரிசனத்தை எதிர்கொள்ள இயலாமல் அப்படியே தன் நினைவின்றி ஸ்தம்பித்து சில நிமிடங்கள் நின்றுவிட்டார். அந்த இரண்டு பெண்மணிகள் கேட்டதற்காக அனுமதி பெற்று தரிசிக்க வந்ததெல்லாம் நினைவில் இல்லாமல் நின்றவரை

"நாராயணா" என்று பெரியவா குரல்தான் பிரஞையை தந்து சகஜ நிலைக்கு கொண்டு வந்தது.

"நாராயணா அந்த பெண்ணிற்கு என்கிட்டே ஏதாவது கேட்கணும்மா கேட்கச் சொல்லு" என்று ஸ்ரீபெரியவா கேட்டதும் அதை நாராயணன் அந்த அயல்நாட்டு பெண்ணிடம் கேட்டார்.

அப்போது அப்பெண்மணியும் ஏதோ அந்த தரிசனத்தால் நிலைதடுமாறியதுபோல் தெரிந்தாள். கேட்பதற்கு ஒன்றுமில்லை என்றாள்.

ஸ்ரீபெரியவா ஒரு ஆப்பிளை அப்பெண்மணிக்கு பிரசாதமாகத் தந்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார். அப்பெண் மணிகளுடன் திரும்பி அந்த வாசல் கேட்டை அடைவதற்குள் அயல்நாட்டு பெண் மயங்கி விழுந்து விட்டாள். பின் தண்ணீர் தெளித்ததில் எழுந்து வந்தாள்.

அந்த ஐரிஷ் பெண்மணிக்கு தான் ஒரு இந்திய பெண் என்பதாகவே உணர்வு இருக்குமாம். தன் சம்பளத்தில் சிறுக சேர்த்து இந்தியா வந்துள்ளதாக தெரிந்தது. அவள் கனவில் ஒரு தேவதைபோல் ஒரு நங்கை அடிக்கடி தோன்றுவதுண்டாம். இந்தியா வந்ததில் பல ஊர்களில் பல சந்யாசிகளை பார்த்தும் மனதில் பூர்ண திருப்தியில்லை. அடுத்த நாள் விசா கெடு முடிய இருந்த நிலையில் ஸ்ரீமஹாபெரியவா கனவில் வந்த தேவதைப்போல் இப்பெண்மணிக்கு தரிசனம் கொடுத்த அதிசயத்தை நாராயணனிடம் சொன்னாள்.



தனக்கு பரமேஸ்வரராகவும் அந்த பெண்மணிக்கு அம்பாளாகவும் ஒரே சமயத்தில் தரிசனம் நல்கிய ஸ்ரீபெரியவா அது பிரம்மையல்ல நிஜமே என்றும் புரியவைத்துள்ளார்.

நாராயணன் அன்று மாலை 3.00 மணிக்கு பெரியவாளை தரிசித்தபோது "அந்த பெண்ணு என்ன சொன்னா?" என்று கேட்க இவரும் சொன்னார்.

அடுத்த நாள் காலை விஸ்வரூப தரிசனத்தில் நாராயணனுக்கு தெரிய வேண்டும் என்பதற்காகவே ஸ்ரீபெரியவா பக்கத்தில் நின்ற ஆஞ்சநேய சுவாமிகள் என்பவரிடம் மூக-பஞ்ச-சதியில் ஒரு ஸ்லோகம் தெரியுமா என்று கேட்டுவிட்டு அந்த ஸ்லோகத்துக்கு விளக்கம் சொன்னாராம்.

"இந்த ஸ்லோகத்திலே அம்பாள் குருஸ்ரூபமா காட்சி தரான்னு மூகர் சொல்றார். அதை தான் அந்த பொண்ணு பார்த்திருக்கா" என்று பரம ரகசியத்தை மிக இயல்பான பாணியில் சொல்லிவிட்டு உள்ளே சென்றாராம், அம்பாளுமான ஸ்ரீபெரியவா.

❖ ❖ ❖

# 12. திரிபுரசுந்தரியாய் திரிகாலஞானேஸ்வரர்

**ஒ**ரு ஊரில் ஸ்ரீமஹாபெரியவா முகாமிட்டிருந்தபோது மூதாட்டியான அந்த பக்தைக்கு ஸ்ரீபெரியவாளை தரிசிக்க பேராவலானது. அதனால் ஸ்ரீமட முகாமுக்கு வீட்டிலிருந்து போக முடியாத சூழ்நிலை.

எப்படியோ ஒருநாள் கிளம்பிவிட்டாள். அது பூஜை முடிந்து பிற்பகல் நேரம். ஸ்ரீபெரியவா மேடையில் முக்கிய பிரமுகர்களோடு பேசிக் கொண்டிருந்தார். இந்த பெண்மணி கையில் ஒரு தட்டும், கல்பூரமாக தயங்கியபடி அந்த மேடையருகே சென்றாள்.

ஸ்ரீபெரியவாளுக்கு மங்கள ஹாரத்தி எடுக்க வேண்டு மென்ற ஆசையோடு அங்கே சென்றபோது, ஸ்ரீபெரியவா சடாலென்று தன் முகத்தை திருப்பிக் கொண்டார்.

இதுபோல் இரண்டாம் முறையும், மூன்றாம் முறையுமாக தொடர்ந்து ஸ்ரீபெரியவா முகத்தை காட்ட மறுப்பதுபோலவே அமைந்தது. பக்தை ஏமாற்றமும், பரபரப்புமாக எப்படியாவது ஹாரத்தி எடுத்தே தீருவதென்று ஸ்ரீபெரியவா கொஞ்சம் திரும்பும் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்து கற்பூரத்தை ஏற்றிவிட்டாள். ஆனால் இம்முறை முகத்தை திருப்ப அவசியமேயில்லாமல் ஸ்ரீபெரியவா எழுந்து உள்ளே சென்று விட்டார்.

பெண்மணிக்கு துக்கம் மேலிட்டது. “பிரபோ! நான் என்ன செய்வேன்?” என்று வருத்தத்துடன் தான் ஏற்றி ஹாரத்தியை பூஜையிலிருந்த திரிபுரசுந்தரி அம்மனுக்கு காட்டி ஒருவாறு மனம் சமாதானமடைந்து புறப்பட்டாள்.

ஸ்ரீமடத்து பந்தலை கடந்து சென்றவளை “மாமி! பெரியவா உத்தரவாரது வாங்கோ” என பின்னால் ஓடிவந்த ஒருவர் அழைத்தார்.

“என்னையா கூப்பிட்டா இருக்காது” என்றாள்.

“இல்லை ஆராத்தி எடுத்தாளே அவாளைன்னுதான் பெரியவா சொன்னா” என்று மாமியிடம் அவர் கூற, ஸ்ரீபெரியவா இப்போது அமர்ந்திருந்த இடத்திற்கு அந்த கைங்கரிய அன்பர் பக்தையை அழைத்துச் சென்றார்.

“ரொம்ப குறைபட்டுண்டயோ... இப்போ ஏத்து” என்று தெய்வமாம் பெரியவா சொன்னவுடன் மாமி ஆனந்தித்து உடனே ஆரத்தி எடுத்தாள்.

அப்போது மாமிக்கு அவள் பட்ட வருத்தத்திற்கு ஈடாக பெரிய வரமே கிட்டியது போலானது.

ஆராத்தி எதிரே காட்சி அளித்தது ஸ்ரீபெரியவாளாய் தெரியவில்லை. அந்த தீபஒளியில் மந்த ஹாச புன்னகையும் கைகளில் கரும்பு வில்லும், பாராம்குசமுமாக சாக்ஷாத் திரிபுரசுந்தரியே காட்சி தந்தாள்.

ஆரத்தி காட்டிய கைகள் நடுங்க, எதிரே காணும் திரிபுரசுந்தரி காட்சியால் பக்தைக்கு பரவசத்தில் மயங்கி விழும் நிலை உண்டாது. “அம்பியே! அம்பிகே!” என்று சுதாரித்துக் கொண்டு வணங்கி எழுந்தாள்.



மேடையில் திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்திரமௌலீஸ்வரர் அருகே தனக்கு ஆராத்தி ஏற்பதை ஸ்ரீபெரியவா விரும்பவில்லை போலும். இதை உணர்த்துவதோடு, தன்னையுமறியாமல் தானே திரிபுரசுந்தரி என்பதனையும் ஸ்ரீபெரியவா உணர்த்துவதுபோல் அங்கு பக்தையின் அரிய அனுபவம் அமைந்துவிட்டது.

இதை ஸ்ரீபெரியவாளின் பக்தை புதுக்கோட்டை ஸ்ரீமதி ராதா மாமி எழுதியுள்ள அனுபவம்.

❖ ❖ ❖

## 13. காமாட்சி பெரியவா!

**ஸ்ரீ**பெரியவாளை தவிர தெய்வமில்லை என்ற ஒருமிக்க பக்தி பிரதோஷ சிவநாயன்மாரைப்போல தனக்கு ஏற்பட வில்லையே என்று கடம்வித்வான் ஸ்ரீசுபாஷ் சந்திரன் ஏங்கினார்.

இவர் காமாட்சி அம்மன்மேல் பக்தி கொண்டிருந்தார். “ஸ்ரீபெரியவாதான்டா எல்லாம்” என்று பிரதோஷம் மாமா திடமாக சொல்லும்போது தனக்கு அந்த உறுதி வரவில்லையே என்று அன்று இரவு ஸ்ரீமடத்தில் உறங்கியபோது இவர் மனம் எண்ணியது.

ஸ்ரீபெரியவாதான் காமாட்சி என்பதை உணரும் வகையில் ஸ்ரீபெரியவாளே அருள வேண்டுமென்று பிரார்தித்துக் கொண்டே இந்த இரவை கழித்தார். விடியற்காலை விஸ்வரூப தரிசனத்தில் ஸ்ரீபெரியவாளைக் கண்டு களித்துக் கொண்டிருந்தவரின் காதில் “காமாக்ஷி காமாக்ஷி” என்று ஒரு மாதுவின் குரல் கேட்க ஏதோ காமாக்ஷி கோயிலிலிருந்து சுவாமி புறப்பாடு அந்த அதிகாலையில் வருகிறதோ என்று நினைத்து திரும்பிப் பார்த்தார்.

தம்பதி சமேதராய் வந்த இருவர் கையில் புஷ்பம், பழம் மற்றும் மங்கள திரவியங்கோடு பெரிய தட்டை ஏந்திவர அதில் அந்த பெண்மணி ஸ்ரீபெரியவாளை பார்த்து “காமாக்ஷி... காமாக்ஷி” என்று குரலெழுப்புவது தெரிந்தது.

“காமாக்ஷி பெரியவா இதை ஏத்துக்கணும்” என்று அந்த பக்தை மங்கள திரவிய மூங்கில் தட்டை வைத்து அதன்மேல் ஒரு கவரையும் வைத்தாள்.

ஸ்ரீபெரியவா சைகையால் அந்த கவரில் என்ன இருக்கிறது என்பதாக கேட்டார்.

“இதுலே இரண்டாயிரம் பணமிருக்கு. பெரியவா! ஆயிரம் காமாக்ஷிக்கு” என்று ஸ்ரீபெரியவாளுக்கு என்பதை சொல்லி “இன்னொரு ஆயிரம் காமாக்ஷி அம்மன் கோயிலுக்கு” என்று ஸ்ரீபெரியவாளை காமாக்ஷி என்று நம்பும் உறுதியாக அந்த கணவர் சொன்னார்.

ஸ்ரீமஹாபெரியவா ஒரு புன்சிரிப்போடு, “ஆயிரம் காமாக்ஷிக்கு அப்புறம் ஏன் ஆயிரம் காமாக்ஷி கோயிலுக்கு?” என்று தானும், காமாக்ஷியாய் தானே உரைந்தருளுவது காமாக்ஷி கோயிலில் என்பதை ஆமோதிப்பதைப் போல் அருளியது ஸ்ரீ சுபாஷ் சந்திரனை நோக்கி அதே புன்னகையை ஒரு அர்த்த புன்னகையாக்கி திருப்பினார்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளுள் காமாக்ஷியை தரிசித்துவிட்ட ஸ்ரீ சுபாஷ் சந்திரனுக்கு அதன்பின் எல்லா தெய்வமும் ஆனாய் நீயே என்ற நாயன்மாரின் ஒருமித்த பக்தி சுவை கிட்டியது.

❖ ❖ ❖

## 14. அப்பனும் நீயே! அம்பாளும் நீயே!

**ஸ்ரீ** பெரியவாளின் பக்தை ஸ்ரீமதி உமா மகேஸ்வரி ஒரு யூட்யூப் பேட்டியில் தந்துள்ள அறிய தகவல் இது. அடிக்கடி ஸ்ரீபெரியவா தரிசனத்திற்கு செல்லும் இவர் ஒருமுறை இப்படி கிளம்பும்போது தன் உறவினரான ஸ்ரீஉஷா மன்னியையும் கூப்பிடலாமென நினைத்தாள்.

உஷா மன்னிக்கு போன் செய்து கேட்டபோது அங்கே அந்த பெண்மணி அதை மிகவும் ஆச்சர்யமாக எதிர்கொள்பவளாக “ஹா...” என்று வியப்புற்றது தெரிந்தது.

“என்ன மன்னி அப்படி ஆச்சயப்படறீங்க? பெரியவாளை தரிசிக்கத்தானே கூப்பிட்டேன்” என்று உமா மகேஸ்வரி ஆவலோடு கேட்டாள்.

“அதை ஏன் கேட்கறே... நான் இப்பதான் ஸ்ரீபெரியவா படத்துக்கு முன்னாலே நின்று, ‘பெரியவா அந்த நடிகைக்கெல்லாம்



அப்படி அனுக்ரஹம் செஞ்சிருக்கீங்களே என்னை தரிசனத்துக்கு கூப்பிடக்கூடாதான்னு கேட்டுட்டு வர்றேன்... நீ போன் பண்றே... பெரியவா நான் சொன்னதை கேட்டு கூப்டா மாதிரி இருக்கு” என்ற ஒரு பீடிகையுடன் தொடர்ந்தாள்.

“இப்போ சித்த முன்னாடிதான் ஸ்ரீமடத்திலேர்ந்து ஒரு கைங்கர்யம் பண்றவர் வந்தார். அவர் நடிகை பானுமதிக்கு ஏற்பட்ட அனுபவத்தை சொல்லிவிட்டு போனார் ஆச்சயர்யமாக இருந்தது” என்று அந்த சம்பவத்தை சொன்னார்.

ஸ்ரீமதி பானுமதி என்ற பிரபல நடிகை கடவுள் பக்தி மிகுந்தவள். வெள்ளிக்கிழமை தோறும் அம்பாளுக்கு விசேஷமான பூஜை செய்பவள். இப்படி ஒரு வெள்ளிக்கிழமை பூஜை செய்யும்போது அம்பாள் படத்துள் ஒரு மகானின் திருஉருவம் தரிசனம் தந்தது.

முன்பின் பார்த்திராத திருஉரு அது.

முதல் வாரம் இது எந்த பாதிப்பையும் பானுமதிக்கு ஏற்படுத்தவில்லை. ஏதோ ஒரு பிரம்மை என விட்டுவிட்டாள்.

அடுத்த வாரமும் அதே காட்சி. தன்னை அழைப்பதுபோல் உணர்ந்தாள். இது மூன்றாவது வாரமும் தொடர்ந்த போது ஏதோ ஒரு பராசக்தியின் தெய்வீகமிது என்பதாக பானுமதி இப்படிப்பட்ட ஒரு திருமுகத்தை தேடலானாள்.

ஒருமுறை தன் சிநேகிதி வீட்டிற்கு சென்றபோது அங்கே ஒரு வார இதழ் அட்டையில் ஸ்ரீபெரியவாளின் திருஉருவ படம் இருந்ததைப் பார்த்தபோது பானுமதிக்கு வியப்பளித்தது.

“இந்த மகான் யார்?” என்று சிநேகிதியைக் கேட்க அவளும் “இவரை தெரியாதா” என்று ஸ்ரீபெரியவாளை சிறப்பித்து விவரித்தாள்.

உடனே பானுமதி காஞ்சி புறப்பட்டுவிட்டாள்.

அப்போது தேனம்பாக்கத்தில் வாசம் புரிந்திட்ட முனிவர் உள்ளேயிருந்து அந்த கிணற்றடிக்கு ஒரு பெஞ்ச் மீது வந்து பானுமதியின் வரவை எதிர்பார்த்தவர் போல் அமர்ந்தார். பெரிய காரில் வந்து இறங்கி பானுமதி தட்டில் பழம், பூ என மங்கள திரவியங்களோடு வந்தாள். சுபாவமாகவே சற்று விடுவிடுவென பேசும் தன்மையினால்

"வெள்ளிக்கிழமை, வெள்ளிக்கிழமை நான் பண்ற பூஜையிலே நீங்க அம்பாளாய் வந்து தரிசனம் தந்து என்னையும் வான்னு சொல்றீங்க ஏன்னு தெரியலே" என்று தட்டில் மங்கள திரவியங்களை சமர்ப்பித்தாள்.

உடனே ஸ்ரீபெரியவா எழுந்து நின்றார்.

இடுப்பை வளைத்து தன் ஒரு திருகரத்தில் தண்டத்தை ஏந்தி ஒயிலாக நின்றார்.

ஸ்ரீமதி பானுமதிக்கு மெய்சிலிர்த்தது.

கையில் கரும்பு வில்லாக தண்டம் காட்சிதர அங்கே திரிபுரசுந்தரியாய் பானுமதி சமர்ப்பித்த மலர்மாலையோடு ஸ்ரீபெரியவா சாக்ஷாத் அம்பளாக ஜொலித்தார். "காமாக்ஷியை பார்த்துட்டேன்" என்று சொல்லியபடி விழுந்து வணங்கினாள் பானுமதி. ஸ்ரீபெரியவா புன்னகையோடு ஆசி கூறி உள்ளே சென்றுவிட்டார்.

ஈர்த்து ஆட்கொண்ட பக்தைக்கு கழுத்திலிருந்து மாலையை ஸ்ரீபெரியவா பிரசாதமாக அருள அங்கு கூடிய மற்ற பக்தர்கள் அந்த பெரியவா பிரசாதமான மாலையை பிடுங்காத குறையாக பிய்த்துக் கொண்டுவிட்டனர்.

மீதியிருந்த நாரையே ஸ்ரீகாமாக்ஷி அம்மனின் பிரசாதமாக திருமதி பானுமதி ஆனந்தமாக எடுத்துச் சென்றாராம்.

வலிய இப்படி ஒரு பக்தையை ஈர்த்து திரிபுரசுந்தரியாய் காட்சி அருளிய பெரியவாளின் மகிமையை என்னென்பது!

❖ ❖ ❖

## 15. தேனம்பாக்கத்தில் நீ தேடும் காமாக்ஷி

**ஸ்ரீ** மஹாபெரியாவளை தரிசிக்க பெரும் பக்த கூட்டம் தேனம்பாக்கத்தில் குவிந்திருந்தது. அவர்களுக்கு கைங்கர்ய அன்பர் ஸ்ரீசந்திரா பிரசாதம் கொடுக்க அங்கே ஒரே கூச்சலும் குழப்பமுமாக அமைதியைக் கெடுத்தது.

ஸ்ரீமஹாபெரியவா அன்று அமைதியாக காணப்பட்டார். சுற்றிலும் ஒரு சப்தமாக இருந்தது. கூடவே நின்றுக் கொண்டிருந்த தாமரப்பாக்கம் ஸ்ரீதியாகராஜன் அவர்களை சைகை காட்டி தூரத்தே இருந்த சந்திராவைக் கூப்பிட்டு வரச் சொன்னார்.



வந்த ஸ்ரீசந்திராவிடம் "பக்தாள்ளாம் எங்கே எங்கே இருந்தோ கஷ்டப்பட்டுண்டு வரா. அவா என்னைப் பார்த்துட்டு போறபோது கொஞ்சம் அமைதியா அவாகிட்ட நான் பேசினா அவாளுக்கு ஆறுதலா இருக்கும்.. அங்கே கூச்சலும் குழப்புமா இருந்தா நல்லாவா இருக்கும்... நீ இங்கேயே அமைதியா நில்லு அவா பாட்டுக்க தரிசனம் பண்ணிட்டு போகட்டும்" என்று ஸ்ரீசந்திராவை பார்த்து சைகை செய்து பேசாமலிருக்கும்படி சொன்னார்.

தாமரைப்பாக்கம் அன்பர் இதை பார்த்துக் கொண்டு நின்றார். ஸ்ரீசந்திராவோ மிகவும் சுறுசுறுப்பாக எப்போதும் துருதுருவென ஏதாவது செய்துக் கொண்டே இருப்பவர். அவரால் வாய்மூடி கைகட்டி வெகு நேரம் இருக்க முடியவில்லை.

அதனால் அங்கிருந்து அகன்று செல்ல ஒரு சாக்கு தேடியவராக காமாக்ஷி அம்மன் கோயிலுக்கு போகப் போவதாய் தாமரைப்பாக்கம் அன்பரிடம் கூறினார்.

ஸ்ரீபெரியவாளிடம் இதை தாமரைப்பாக்கம் தெரிவித்தார். "சந்திரா காமாக்ஷி அம்மன் கோயிலுக்கு பிரதட்சனம் செய்ய போகணுமாம்" என்றார்.

உடனே பெரியவா "அங்க எதுக்கு போகணும்? இங்கே என்னையே சுத்தச் சொல்லு" என்று தானே காமாக்ஷி என்பதை அங்கிருந்த பக்தர்களின் பாக்யமாக தெரிவித் தருளினார்.

இதை ஸ்ரீதாமரைபாக்கம் தியாகராஜன் அவர்கள் பெசன்ட் நகர் ரத்தினகிரீஸ்வரர் கோயில் நிகழ்ச்சி ஒன்றில் கூறும்போது,

"ஸ்ரீஸ்ரீமஹா பெரியவா சாக்ஷாத் அம்பாள்னு காட்டிய சம்பவத்திலே இது நானே அனுபவிச்சது" என்றார்.

❖ ❖ ❖

## 16. அம்பாளை சூடிய பிறைசூடி!

பொள்ளாச்சி ஜெயம் மாமிக்கு ஸ்ரீபெரியவாளின் சிரஸில் அம்பாள் காட்சி தந்த சம்பவம் அபூர்வமானது. ஒரு சாதுர்மாஸ்ய விரதத்தின் போது மாமி ஸ்ரீபெரியவா இருந்த ஊரிலேயே தங்கியிருந்தாள்.

ஸ்ரீபெரியவாளை எப்போதுமே தரிசித்துக் கொண்டிருக்கும் அபார பக்தியோடு மாமி தினமும் நடக்கும் உபன்யாசத்தை ஸ்ரீபெரியவாள் அமர்ந்திருக்கும் இடத்திற்கு பின்னல் நின்றபடி கேட்பதுண்டு.

ஒருநாள் அந்த ஊர் பக்தர் ஒருவர் ஸ்ரீபெரியவாளுக்கு பழங்களினாலான ஒரு சால்வையை சமர்ப்பித்தார். மாதுளை முத்துக்கள் கருப்பு திராட்சை போன்றவைகளால் பின்னப்பட்ட நாரில் விசேஷமாக தயாரிக்கப்பட்ட அந்த சால்வை மிகவும் கனமாக இருந்தும் அதை தன் சிரஸில் போர்த்தியபடி ஸ்ரீபெரியவா அன்று உபன்யாசம் செய்தார்.

திரண்டிருந்த பக்தர்கள் பெரிய பந்தலில் அமர்ந்திருக்க மின்சார விளக்குகளால் எங்கும் பிரகாசமாக ஒளிவிட்டுக் கொண்டிருந்தது.

ஸ்ரீபெரியவாளின் அருள்வாக்குகளை பின்னால் நின்றபடி கேட்டுக் கொண்டிருந்த பக்தைக்கு திடீரென்று எல்லா விளக்குகளும் ஒளி இழந்தாற்போலானது. மின்சாரம் தடைபட்டது போன்று ஸ்ரீபெரியவா பேசிக் கொண்டிருந்ததும் காதில் விழவில்லை.

இப்படி ஒரு நிசப்த இருள் சூழலில் ஸ்ரீபெரியவா சிரஸில் போர்த்திக் கொண்டிருந்த பழ சால்வையில் ஒரு டார்ச் அடித்ததுபோல் சிறு வட்டமாக ஒளி தெரிந்தது.

அந்த சிறுவட்ட ஒளியில் ஏதோ மாயாஜாலமாக ஒரு கோடு கண், காது, மூக்கு, வாய் என வரைந்து ஒரு அழகான அம்பாளின் முகம் தரிசனம் தந்தது. தாமரை பூ நிறத்தில், சுருள் சுருளாக தலை முடியும், காதில் தோடு, மூக்குத்தி, புல்லாக்கு என ஆபரணங்கள் வரையப்பட்டு சிரித்த முகத்துடன் அம்பாள் காட்சி தந்தாள்.



என்ன இது ஜாலம் என மாமி சுதாரித்துக் கொள்வதற்குள் இரண்டு நிமிடத்தில் திரும்ப சுற்றிலும் விளக்குகள் மின்ன, ஸ்ரீபெரியவாளின் குரலமுதம் காதில் விழுந்தது.

இப்படி ஒரு அரிய தரிசனத்தால் இது என்ன பிரம்மையோ என மாமிக்கு சிறிதும் சந்தேகமில்லாமல் அந்த ஒரு நிமிட காட்சி மெய்சிலிர்க்க வைத்துவிட்டது. எதையும் பெரியவாளிடம் சொல்லிவிடும் மாமியின் சுபாவத்தால் உபன்யாசம் முடிந்ததும் இந்த அபூர்வ காட்சி பற்றி சொல்ல விழைந்தாள்.

ஆனால் அதற்குள் ஸ்ரீபெரியவா உள்ளே சென்று விட்டார். தன் ஆவலை கட்டுப்படுத்த இயலாதவளாய் உள்ளே சென்று பக்தை "பெரியவா சிரஸிலே அம்பாள் தரிசனம் ஆனாள்" என்று தான் பார்த்த அபூர்வ காட்சியை விவரித்தாள்.

ஸ்ரீபெரியவா மௌனமாக கேட்டுக் கொண்டார்.

பின் பக்தையிடம், "சரி நீ படுத்துக்றதுக்கு முன் அந்த சால்வையை போய் பார்த்துட்டு தூங்கப்போ" என்றார். உடனே ஓடி மேடையிலிருந்த அந்த பழ சால்வையை மாமி போய் பார்த்தாள். ஒரே ஆச்சர்யம். மாமி அம்பாளை தரிசித்ததை மெய்ப்பிப்பதுபோல் சால்வையில் ஒரு சிறு வட்டத்தில் பழங்கள் உதிர்ந்து பின்னப்பட்ட நார்மட்டும் வட்ட வடிவில் தெரிந்தது.

"நீ பார்த்தது நிஜம்தான் என்பதை ஸ்ரீபெரியவா புரிய வைத்ததுபோல் இந்த வியப்பளிக்கும் சம்பவம் பக்தைக்கு மட்டும் பாக்யமளித்துள்ளது!

❖ ❖ ❖

## 17. ஊச்சலில் ஆடிய அம்பிகை தரிசனம்

பொள்ளாச்சி மாமிக்கு கிடைத்த அந்த அற்புத காட்சியைப் போல் ஸ்ரீதியாகு தாத்தாவிற்கும் கிடைத்துள்ளது. பக்தைக்கு வலிய வந்து கிடைத்த தரிசனம் போலில்லாமல் இவர் விதியை மீறி திரை போட்டிருக்கையில் பார்த்ததால் அக்காட்சி ஒரு நாள் முழுவதும் இவர் பார்வையை மங்க வைத்த அதிசயமும நடந்தது.

அன்று பௌர்ணமி. மாலையில் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடு முடித்து அதன்பின் ஸ்நானம் செய்து பௌர்ணமி பூஜை கிட்டத்தட்ட நடு இரவிலும் முடியவில்லை.

நாலைந்து பக்தர்கள் மட்டும் அமர்ந்திருக்க, பாரா காரர்களும் தங்கள் முறை முடிந்து தூங்க சென்றுவிட்டனர். அந்த இரண்டரை மணி இரவில் படுதாக்களை பிடித்துக் கொண்டு மறைத்துக் கொண்டிருந்த ஸ்ரீதியாகு அவர்களுக்கு கொஞ்சம் சந்தேகமும் எழுந்தது.

ஸ்ரீபெரியவா பூஜை செய்யும் நேர்த்தியையும் அழகையும் இவர் ரசிப்பவர்தான். எத்தனை பூ வந்து குவிந்திருந்தாலும் அத்தனையையும் நேரம் பார்க்காமல் திரிபுரசுந்தரி அம்மனுக்கு போட்டு அழகு பார்ப்பாராம் ஸ்ரீபெரியவா. பார்த்து பார்த்து அம்பாளுக்கு அலங்காரம் செய்பவர் சில நேரங்களில் அம்பாளோடு பேசுவதாக பாவனை இருக்குமாம். சில நேரங்களில் ஸ்ரீபெரியவா உணர்ச்சி வசப்பட்டு ஆனந்த பிரவாகமாக கண்மலர்களில் பனி தோன்றுமாம். அப்போது துடைத்துக் கொள்ள மடியாக துண்டு வைக்கப்படுமாம்.

இப்படி பார்த்து, பார்த்து அனுபவித்து பூஜை செய்பவர் பெரியவா என்பதை தியாகு தாத்தா அறிந்தவர்தான். ஆனால் அன்றோ அந்த நடு இரவை தாண்டிய நேரத்தில் உள்ளே பூஜை அலங்காரமெல்லாம் எப்போதோ முடிந்திருக்க வேண்டுமே என்று நினைத்தார். தூக்கம் கண்ணை சுழற்றியது.

செய்யக்கூடாதென்ற போதிலும் பிடித்திருந்த உள்படுதா, வெளிபடுதா என்ற திரைகளின் இடையே பூஜை அறையை எட்டிப் பார்த்தார்.

இவர் பார்த்த அந்த சில நொடிகளில் அந்த ஆனந்த காட்சியைக் கண்டார். ஸ்ரீபெரியவா ஊஞ்சலில் அம்பாளை வைத்து ஆட்டுவது வழக்கம். தியாகு தாத்தா பார்த்த நொடிகளில் ஒரு ஊஞ்சலில் அழகான சிறுமி பாவாடை அணிந்து உட்கார்ந்திருக்க அந்த சின்னஞ்சிறு தெய்வீக பெண் குழந்தையின் கால்களை ஸ்ரீபெரியவா பிடித்து ஊஞ்சலை ஆட்டிய அபூர்வ காட்சியால் ஸ்தம்பித்துவிட்டார்.

ஆனால் இப்படி பார்க்கும்போது ஸ்ரீபெரியவாளிடமிருந்து வெள்ளிக் கிண்ணத்திலிருந்த தீர்த்தம் வீசப்பட்டு அது வேகமாக தன்னை தாக்க இவரால் அதற்குப்பின் தெளிவாக பார்க்க



இயலவில்லை. அடுத்த நாளும் இவருக்கு கண்பார்வை தெளிவாக இல்லாமல் தடுமாறுவதை பலர் அறிந்து விசாரித்தனர்.

அன்று மூன்று மணியளவில் இவரை ஸ்ரீபெரியவா அழைத்தார். இரண்டு கற்கண்டுகள் தந்து உட்கொள்ள சொன்னார். உடனே இவருக்கு பார்வை பளிச்சென்றாகிவிட்டது.

"இப்போ என்னை தெரியறதா?" என்று குறும்பாக கேட்டு ராத்திரி அந்த தெய்வ ரகசியமான காட்சியை பார்த்ததால் ஒருநாள் முழுவதும் கண் மங்கலாக தெரியும் சங்கடம் நேர்ந்துள்ளதை புரிய வைத்தார்.

எது எப்படியோ...சாக்ஷாத் அம்பாளான அந்த சிறுமியை ஸ்ரீபெரியவா ஊஞ்சலில் வைத்து ஆட்டிய காட்சி பெரும்பாக்யமாக ஸ்ரீதியாகு தாத்தாவிற்கு கிடைத்துள்ளது.

❖ ❖ ❖

## 18. கருணை வடிவில் காளிகாம்பாள்

**ஸ்ரீ**மஹாபெரியவாளை தரிசிக்க காஞ்சி சென்ற பெண்மணி ஸ்ரீமடத்து பக்கத்திலிருந்த பஸ் ஸ்டாப்பில் இறங்கிக் கொண்டாள். ஸ்ரீபெரியவாளை பக்தர்களின் கூட்டமில்லாமல் தரிசிக்க வேண்டுமென்ற பரபரப்போடு ஸ்ரீமடம் நுழையும்போது கூட கூட்டி வந்த தன் பத்து வயது மகளை தேடினாள்.

பஸ்ஸிலிருந்து இறங்கும்போது கையை பிடித்துக் கொண்டு இருந்த குழந்தையை எங்கு நழுவவிட்டோம் என்று கலவரத்துடன் வந்த பாதை இடங்களிலெல்லாம் தேடினாள். எங்கும் காணாமல் பீதி அடைந்தாள்.

தெய்வத்தைப் பார்க்க வந்தபோது இப்படி ஒரு சோதனையா என்று அத்தெய்வமாம் ஸ்ரீபெரியவாளிடமே ஓடி வந்து முறையிட்டு அழுதாள்.

சாக்ஷாத் சர்வேஸ்வரராய் அதை கேட்டுவிட்டு ஸ்ரீபெரியவா சற்றே திருகண் மலர்களை மூடி தியானம் செய்வது போலிருந்தார்.

பிறகு "காளிகாம்பாள் கோயிலுக்கு போ. 'குழந்தையை காணலே கண்டுபிடிச்சி தா தாயே' என்று எழுதி ஒரு ரூபா காணிக்கையோட கோயில் உண்டியல்லே போட்டுட்டு வந்துடு" என்று உத்தரவிட்டார்.

ஸ்ரீபெரியவா இப்படி சொல்லிவிட்டாரே என்றோ ஸ்ரீபெரியவா சொன்ன அதிலே ஏதோ ஒரு சூட்சமமிருக்கும் என்றோ அந்த பெண்மணி நினைத்திருக்கக் கூடும்.

ஆனால் உத்தரவின்படி கோயிலுக்கு போய் எழுதி உண்டியலில் ஒரு ரூபாயுடன் போட்டுவிட்டு வெளியே வரும்வரை மனதில் கலக்கமும் பயமும் தான் ஆட்டிக் கொண்டிருந்தன.

கோயில் வெளியே வந்த அந்த நிமிடம் தன் மகளின் அழுகுரலை கேட்டதும் எல்லாமே விலகி நிம்மதி பெருமூச்சு எழுந்தது. எங்கெங்கோ அம்மாவை தேடி அழுத குழந்தை அந்த காளிகாம்பாள் கோயில் வாசலுக்கு அந்த சமயத்தில் வந்து நின்றதுதான் தெய்வச் செயலோ.

குழந்தையை அணைத்தபடி ஸ்ரீமடத்திற்கு ஸ்ரீபெரிய வாளிடம் நன்றி சொல்ல வந்தாள்.

குழந்தையோடு வந்த நின்றவளிடம் ஸ்ரீபெரியவா “என்ன சீட்டு எழுதி போட்டதும் காளிகாம்பாள் குழந்தையை கண்டுபிடிச்சி கொடுத்துட்டாளா” என்றார்.

“பெரியவா சீட்டு எழுதி போட்டேன். ஆனா அந்த காளிகாம்பாள் மூலஸ்தானத்திலே என் கண்ணுக்கு பெரியவாதான் தெரிஞ்சீங்க... அதுமாதிரி இங்கே வந்து உங்களை தரிசிக்கிறபோது அந்த காளிகாம்பாள்தான் தெரியறா” என்று ஆனந்த கண்ணீர் பெருக கூறினாள்.

ஸ்ரீமஹாபெரியவா அதை ஒரு மெல்லிய புன்னகையோடு ‘காளியும் நானே’ என்பதாக அங்கீகரிப்பது போலிருந்தது.

❖ ❖ ❖

## 19. பாலாஜியை பாத்தாச்சி!

**ஸ்ரீ**பெரியவா செங்கல்பட்டில் இருந்தபோது ஒரு மாதமாக கடும் ஜுரம். எழுந்திருக்கக் கூட இயலாத நிலையில் அவரை தொட்டு பணிவிடை செய்யவே அமைந்ததுபோல் ஒரு சந்யாசி வந்து சேர்ந்தார்.



மகாராஷ்டிரா மாநிலத்தில் அரசாங்க வேலை பார்த்து வந்த இவர் மனமுவந்து துறவறம் பூண்டார். அவர் வடக்கிலிருந்து ராமேஸ்வரத்திற்கு வரும் வழியில் அவரது தண்டம் தொலைந்து விட, சாஸ்திரப்படி அதை வேறு ஒரு சந்யாசிடமிருந்துதான் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது விதியாதலால் ஸ்ரீபெரியவாளிடம் வரும்படியானது.

ஸ்ரீபெரியவாளும் ஒரு தண்டத்தை அவருக்கு அளித்தார். அதைப் பெற்றுக்கொண்டபின் ஸ்ரீபெரியவானெனும் சாக்ஷாத் ஈஸ்ரவரை உணர்ந்த நிலை ஏற்பட அத்தெய்வத்தையே குருவாக பாவித்து அவருடனேயே தங்கும் பாக்யமும் பெற்றவரானார்.

தினமும் ஸ்ரீபெரியவாளினில் மலர்பாதங்களை அர்ச்சித்து வழிபடுவார். பிறகு ஸ்ரீபெரியவா உடல்நிலை சுகமானதும் ஸ்ரீபெரியவா காசி யாத்திரை புறப்பட இவரும் விட்டுவிலக மனமில்லாமல் அந்த யாத்திரையில் கலந்து கொண்டார்.

யாத்திரை திருப்பதி வந்த சமயம் ஸ்ரீபெரியவா விடுவிடுவென நடப்பவராய் மலை ஏறி பெருமாளை தரிசித்து விட்டார். மகாராஷ்டிரா சந்யாசி தன் முதுமையால் மெதுவாகத்தான் பின்னே வந்தார்.

ஸ்ரீபெரியவா ஏழுமலையானை தரிசித்து வெளியே வந்தபோதுதான் இவர் அங்கு சென்றார்.

ஸ்ரீபெரியவா அவரை விட்டுவிட்டு தரிசனம் செய்து விட்டோமே என்று வருந்தியவர்போல் “அடடா! அவர் தரிசனம் பண்ணலயே” என்று நிர்வாகிகளிடம் “இவர் என்னோட வந்தவர். இவரையும் அழைச்சுண்டு போய் தரிசனம் பண்ணி வைச்சி அழைச்சுண்டு வாங்க” என்றார்.

அதன்படி அன்பர்கள் அந்த வடகத்தி சந்யாசியை அழைக்க, அப்போது அவர் உதிரித்த வார்த்தைகள் அங்கிருந்தோரை ஸ்தம்பிக்க வைத்தது.

“எனக்கு தரிசனம் ஆயாச்சு” என்றார் அவர்.

“என்ன தரிசனம் ஆச்சா... இப்பத்தானே ஏறி வரேள்” என்றனர் அன்பர்கள்.

“ஆமாம்... பாலாஜி தரிசனமே ஆச்சி... நான் நேரமாச்சேன்னு ஓடி வந்தேன்... அப்போ ஸ்ரீபெரியவா உள்ளே இருந்து

வந்தபோது சாக்ஷாத் பாலாஜியாகவே எனக்குன்னு தரிசனம் கொடுத்துட்டார். இனிமே உள்ளே போய் பார்க்கணும்னு தோணலே.”

இப்படி சொன்னதோடல்லாமல் கோயில் வாசலிலேயே ஸ்ரீபெரியவாளை அந்த வேங்கடாஜலபதியாய் தரிசித்த ஆனந்தத்தில் நமஸ்கரித்தார்.

❖ ❖ ❖

# 20. கோகுலத்து கண்ணனைப் போல் கோலம் பூண்ட பெரியவா!

**பா**ண்ட்ஸ் கம்பெனியில் வேலை செய்த ஸ்ரீநாராயணன் அவர்களிடமிருந்து ஸ்ரீபெரியவா பிக்ஷாவந்தனத்திற்காக பணமாக இல்லாமல் பொருளாக சேகரிக்க பாக்யம் அருளியிருந்தார். நிறுவனத்தின் சக நண்பர்களிடம் வசூலித்த தொகையோடு அதே தொகையை நிறுவனமும் மனமுவந்து தந்ததில் வந்த காலத்திலேயே ஒரு லட்சம் வரை இவர் சேர்க்க முடிந்தது.

மளிகை சாமான், காய்கறி பழங்களென ஆரம்பித்து பூஜைக்கு தேவையான சந்தனம், குங்குமம், ரவிக்கை, பாவாடை, ஊதுவத்தி, சாம்பிராணி இத்யாதிகளுடன், ஸ்ரீமடத்து பசுக்களுக்கு தீவனம், திருமாங்கல்யம் என ஸ்ரீடத்திற்கு தேவைப்படும் அனைத்து பொருட்களையும் ஒன்றுவிடாமல் அந்த பணத்தில் வாங்கி ஒரு லாரி நிறைய கொண்டு சேர்ப்பதை பாக்யமாக செய்து வந்தார்.

அப்படி ஒருமுறை கம்பெனி நண்பர்களின் குடும்பத்தின ரையும் ஸ்ரீபெரியவா தரிசனத்திற்கு அழைத்துச் சென்றார். அவர்கள் தங்கி விரும்பிய சமயம் உணவருந்தவும் தகுந்த ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

அன்று காலை பத்து மணியளவில் ஸ்ரீபெரியவா ஒரு மண்டபத்திற்கு வந்தார். பாண்ட்ஸ் அன்பர்களை ஒவ்வொருவராக விசாரித்து ஆசி வழங்கினார். அதன்பின் அவர்களை அந்த ஹாலின் ஒரு ஓரத்தில் இருக்க உத்தரவிட்டார்.



ஸ்ரீபெரியவா எதிர்பக்கத்திலிருந்த கதவிற்கு நேரே சிறிது தூரத்தில் ஹாலின் நடுநாயகமாக தண்டமேந்தி நின்றார். அதன்பின்தான் அந்த அதிசய உத்தரவு பிறந்தது.

ஸ்ரீநாராயணன் சமர்ப்பித்தவைகளை கொண்டுவரச் சென்னார். முதலில் 16, 17 மாட்டுத் தீவன மூட்டைகளை தன்னை சுற்றிலும் அடுக்கச் சொன்னார். அதன்மேல் ஒரு வரிசை அத்தனை காய்கறி, பழங்களையும் சுற்றி கொட்ட வைத்தார். அதன்மேலும் எல்லா பருப்பு, அரிசி மளிகை சாமான்களும் அந்த வட்டத்தின் மேல் அடுக்கப்பட்டன.

இது என்ன புதுமை என்று நாராயணன் அவர்களோடு தரிசிக்க வந்த அனைவரும் ஆவலோடு நோக்கினர்.

பின் நடுநாயகமாக ஸ்ரீபெரியவா நிற்க, சாமான்கள் வட்டமாய் கொட்டிக் கிடக்க ஸ்ரீமடத்திலிருந்த பசு தொழுவத்திலிருந்த அத்தனை பசுக்களும் கன்றுகளும் அவிழ்த்து விடப்பட்டு அந்த அறை வாசல் வழியே உள்ளே ஓடிவந்தன. இதுவும் ஸ்ரீபெரியவாளின் உத்தரவே.

மாட்டு தீவனமும், அகத்தி கீதையும், பழமும், காயுமென வட்டமாக குவிந்திருக்க அத்தனை பசுக்களும் கன்றுகளும் பெரும் குதூகலத்தோடு துள்ளி, துள்ளி ஸ்ரீபெரியவாளை சுற்றி சுற்றி வந்து களிப்படைந்த காட்சி அங்கிருந்த அனைவருக்கும் பெரும் ஆனந்தமும் வியப்பும் அளித்தது.

இப்படி ஒரு யாரும் எதிர்பார்க்காத அனுக்ரஹத்தை ஸ்ரீமஹாபெரியவா அந்த பாண்ட்ஸ் கம்பெனி அன்பர்களுக்காக பிரத்யேகமாக அருள விழைந்து அபூர்வமாக இருந்தது.

பசுக்களும் கன்றுகளும் எதை தின்பது என்ற நோக்கத்தி லல்லாமல் அந்த அரை மணிநேரம் ஸ்ரீபெரியவாளெனும் கோகுலத்து கிருஷ்ணனை சுற்றி சுற்றி ஆனந்தத்தோடு துள்ளி துள்ளி குதித்தது போலிருந்தது.

கோகுல கிருஷ்ணனாய் ஸ்ரீபெரியவா அருளிய அரிய சம்பவமிது.

❖ ❖ ❖

# 21. நீ பார்ப்பது பத்ரிநாராயணனே!

**ஒ**ரு மூதாட்டி தரிசனத்துக்கு வந்தாள்.

"உனக்கு என்ன வேணுமோ கேள்" என்று வரம்தர காத்திருந்த கடவுளாம் ஸ்ரீபெரியவா கருணையோடு கேட்டார். யார் எதை கேட்பார்களென தெய்வம் அறியாதவரா. எந்த லௌகீக சுகம்தரம் விஷயங்களில் அந்த பக்தைக்கு நாட்டமில்லை என்பது அவருக்குத் தெரியும்.

'நான் பத்ரிநாராயணனை தரிசனம் பண்ணனும்" என்றாள் பாட்டி.

இப்படி கேட்கும் பக்தர்களுக்கு வேறு யாருடைய உதவியோடோ துணையோடோ அவர்களை பத்ரிநாத்துக்கு அனுப்ப ஸ்ரீபெரியவா ஏற்பாடு செய்துவிட முடியும்.

அப்படி ஒரு ஒத்தாசையை பணமாகவோ, பக்கபலமாக அங்கு அழைதது்ச் செல்லவோ ஸ்ரீபெரியவா அருள்வார் என்ற யதார்த்துடன் தான் இந்த பாட்டி இப்படி ஒரு வரம் கேட்டும் இருப்பார்.

ஆனால் ஸ்ரீபெரியவா தன் திருமுகத்தில் ஒரு புன்னகை யோடு "அதுதான் உன் எதிரிலேயே பார்த்துண்டிருக்கியே" என்றார். இதில் வெளிப்படையாக ஒரு குறும்பு தெரிந்தாலும், தெய்வத்தின் திருவாக்கிலிருந்து வரும் எல்லாமுமே மெய்யாகும் என்பதை ஸ்ரீபெரியவாளின் தீவிர பக்தர்கள் உணரக் கூடும்.

ஆனால் இந்த மூதாட்டி புரியாமல் விழித்தாள்.

இதைப் பார்த்த ஸ்ரீபெரியவா "என்ன சந்தேகமா" என்று கேட்டார். பின் "எனக்கு மேலே பார்" என்றும் சொன்னார். மூதாட்டி குழம்பியபடி மகான் அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்தாள்.

அது ஒரு இலந்தை மரம்!

இலந்தை மரத்துக்கு பத்ரி எனும் பெயரும் உண்டாம். அதன்கீழ் வீற்றருளும் சங்கரராம் ஸ்ரீபெரியவா பத்ரிநாதர் என தன்னை காட்டிக் கொள்வது வெறும் விளையாட்டல்ல!

தன்னெதிலே நிற்கும் பக்தரின் இஷ்ட தெய்வமாய் மாறி தரிசனம் அருள்வது ஈஸ்வரரின் திருவிளையாடல்!

❖ ❖ ❖



# 22. நடமாடும் ஸ்ரீநரசிம்ம பெரியவா!

**அ**ந்த வைணவ பக்தரிடம் பிரதோஷம் மாமா ஸ்வதர்மத்தை விட்டு விலகாமல்தான் ஸ்ரீபெரியவாளிடம் பக்தி கொள வேண்டுமென்று வற்புறுத்தி கூறியிருந்தார்.

அதன்படி பிரதோஷம் மாமா அவரை திவாதச நாமம் தரிக்க வேண்டும் என்ற கட்டளையையும் இட்டிருந்தார். ஆனால் ஸ்ரீ மஹாபெரியவாளோ "நான்தானே த்வாதச நாமம் போட்டுக்கச் சொன்னேன்" என்று மாமா சொன்னதை தான் சொன்ன திருவாக்கு என கூறி 'தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை' என்ற நாயன்மாரை தன்னுள் ஐக்கியமாக்கி அருள்வதை உறுதி செய்து அருளினார். மாமாவின் கட்டளைப்படி அந்த வைணவ பக்தர் வைணவர்களுக்கு உரித்தான சம்பிரதாயங் களோடு ஸ்ரீராம நவமி, ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி, ஏகாதசி அன்றெல்லாம் நிச்சயம் தரிசிப்பதென தீர்மானமாக இருந்தார்.

எழுமூரில் பிரதோஷம் மாமா இருந்தபோது இந்த வைணவ பக்தர் தினமும் வருவதுபோல் வந்தார். இவரைப் பார்த்ததும் மாமா,

"ஏண்டா! இன்னிக்கு நரசிம்ம ஜயந்தி ஆச்சே. பெரியவாளை தரிசிக்க போகலையா?" என்று கேட்டார்.

"மாமா! எனக்கு நீங்க சொல்லித்தான் இன்னிக்கு நரசிம்ம ஜயந்தின்னு தெரியறது" என்றார்.

"சரி!சரி! உடனே கிளம்பி போ. பெரியவாளை தரிசனம் செஞ்சுட்டு வந்து சொல்லு" என்று கட்டளையிட்டார்.

அப்போது காலை நேரமோ, பகல் நேரமோ, சாயங்கால நேரமோ கூட அல்ல. இரவு பத்து மணி.

பெரியவாளை இச்சமயத்தில் போய் தரிசிக்கச் சொல்லும் அதீத பக்தராய் நாயன்மாரான மாமா இருக்க, இவர் எதைச் சொன்னாலும் தட்டாத உறுதியை கொண்ட வைணவ அன்பர் 'எப்படி சாத்யம்' என்றெல்லாம் எண்ணாமல் உடனே அந்த பத்து மணி இரவில் காஞ்சி புறப்பட்டுவிட்டார்.

அந்த நேரத்தில் கிடைத்த பஸ்ஸை பிடித்து ஒரு இடம் சென்று அங்கிருந்து லாரி ஒன்றில் காஞ்சி எல்லை வந்து பின் ஐந்து கிலோமீட்டர் நடந்து வந்து சேர்ந்தார்.

அடுத்த நாள் காலை மூன்று மணி ஆகி விட்டிருந்தது. ஸ்ரீமடம் அடைந்து உள்ளே ஓடினார்.

ஸ்ரீபெரியவா இருந்த மேனா இவர் வரவுக்காக காத்திருந்தது போல இவர் வந்தவுடன் திறந்தது. ஸ்ரீ மஹாபெரியவா இந்த வைணவ பக்தருக்காக நல்கிய தரிசனமும் ஸ்ரீநரசிம்மமூர்த்தி தரிசனமாகவே அமைந்ததுதான் விந்தை.

ஸ்ரீபெரியவாளும் எதிரே வைணவ அன்பரும் மட்டுமே இருக்க மற்ற எல்லா கைங்கர்ய அன்பர்களும் துயில் எழாத நிசப்தமான சூழ்நிலையாகவும் அமைந்தது.

ஸ்ரீபெரியவா தன் திருபாதங்களில் ஒன்றை பூமியிலும், மற்றொன்றை மடியிலும் வைத்துக் கொண்டு மேனாவின் விளிம்பில் அமர்ந்து இரண்டு திருகரங்களையும் மடியில் வைத்தபடி சாக்ஷாத் ஸ்ரீநரசிம்ம சுவாமி எப்படி வதம் செய்தாரோ அதே போன்ற காட்சியை காட்டினார்.

ஒரு அர்த்த புன்னகையோடு பெரியவா அந்த வைணவ அன்பரை நோக்கினார்.

"மஹா பிரபோ! நரசிம்ம பெரியவா" என்று வைணவ அன்பர் நமஸ்கரித்தார்.

முந்தைய நாள் ஸ்ரீநரசிம்ம ஜயந்தி! ஸ்ரீநரசிம்ம மூர்த்தியின் உக்கிரம் தணிந்த அடுத்த நாளான அன்றோ பெரியவாளெனும் நடமாடும் நரசிம்ம பெரியவா ஜயந்தியாய் அவருக்கு அருளப் பட்டது!

❖ ❖ ❖

## 23. நான்தான் நாராயண மூர்த்தி

ஒருமுறை ஸ்ரீபெரியவா காமாக்ஷி அம்மன் கோயிலை நோக்கி அபிஷேகத்தை காண நடந்தார். கூடவே ஸ்ரீ ஏகாம்பரம் அவர்களும் பூர்வாஸ்ரம ஸ்ரீவேதபுரி அவர்களும் சென்றனர்.

காமாக்ஷி கோயிலுக்குள் விக்னேஸ்வரர் சன்னதிக்கருகில் வந்த மகான் "பழக்கூடையை கொண்டு வா" என உத்தரவிட்டார். பழக்கூடையை எடுத்துவர மறந்துவிட்டவராய் ஸ்ரீவேதபுரி அவர்கள் அதை கொண்டுவர ஓடினார்.



அப்போது ஸ்ரீபெரியவாளுடன் ஸ்ரீஏகாம்பரம் மட்டும நிற்க அவருக்கு ஏகாந்தமாக ஒரு அபூர்வ தரிசனம் கிட்டியது.

ஸ்ரீமஹாபெரியவா "நான்தான் நாராயண மூர்த்தி" என்று தன் திருகரத்தை மார்புக்கு முன்பாக வைத்தபடி முதலில் கூறியபோது 'என்ன சொல்கிறார் பெரியவா... நமக்குதான் காதில் சரியாக விழவில்லையோ' என்று ஸ்ரீஏகாம்பரம் யோசித்துக் கொண்டிருந்த துளி நொடிகளில் ஸ்ரீபெரியவா "நான்தான் நாராயணன்" என்று மறுமுறை ஓங்கி உரைத்து அதை உறுதி செய்தார்.

ஸ்ரீஏகாம்பரம் அவர்களுக்கு அந்த சமயம் என்ன செய்வதென்றே புரியவில்லை. இப்படி தெய்வமே தன்னை காட்டிக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் தான் கேட்கும் பாக்யம் அடைந்த ஆனந்தத்தில் திளைத்தார்.

"நான்தான் நாராயணன். என் தங்கை காமாக்ஷியின் அபிஷேகத்தைப் பார்க்கப் போகிறேன்" என்பதுபோல் சாக்ஷாக் ஸ்ரீமன் நாராயணரே சன்னதிக்கு விரைந்ததுபோல் உணர்ந்ததாக ஸ்ரீ ஏகாம்பரம் சொல்கிறார்.

## 24. ஸ்ரீசக்ரபாணியாய் ஸ்ரீசங்கர பெரியவா!

சென்னை ஸ்ரீ ஆர்.ஜி. வெங்கடாஜலம் ஒரு மாலை வேலை ஸ்ரீபெரியவாளை தரிசிக்க காஞ்சி ஸ்ரீமடத்திற்கு சென்றார். பக்தர்கள் குறைவாக இருக்க பெரியவா சற்று ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

இவரை பார்த்ததும் "எங்கேர்ந்து வரே?" என கேட்டார்.

"திருவையாவூர் ஏழு மலையான் கோயிலில் சிரவணதீபம் அங்கே போயிட்டு வர்றேன் பெரியவா" என்றார்.

"ஸ்ரீபெரியவா என்னுள் இருந்த ஆதங்கத்தை நான் வெளியே கொட்டி தீர்க்க வேண்டுமென நினைத்தவர் போல் ஒரு பார்வையில் ஊடுருவுவது போல் உணர்ந்தேன். நான் நினைத்ததை சொல்லிவிட வேண்டும் என்று ஒரு உந்துதலை அந்த பார்வை உண்டாக்கிவிட்டது" என்கிறார் இவர்.

ஸ்ரீபெரியவாளிடம் “எங்க குடும்பத்திலே ரொம்ப நாளா சிரவண தீபம், பூஜை எல்லாம் நடந்தது. இப்போ எல்லாரும் பிரிஞ்சி போயிட்டதாலே நடத்த முடியலே... இது ரொம்பவும் மனசுக்கு ஆதங்கமாயும் ஏதோ குத்தம் செய்யற மாதிரியா கஷ்டமா இருக்கு... இதனாலே ஆத்திலேயே ஏதோ வெளிச்சமே இல்லாத மாதிரி தோன்றது” என்று வருத்தத்தை சொல்லி விட்டார்.

ஸ்ரீபெரியவா உடனே கைங்கர்ய அன்பரிடம் ஏதோ சொன்னார். சற்று நேரத்தில் அவர் அகல்விளக்கில் நெய் ஊற்றி, திரியுடன் கொண்டுவந்து ஸ்ரீபெரியவாளின் எதிரில் வைத்து தீபமேற்றினார்.

கருணை திருஉருவமாய் ஸ்ரீமஹாபெரியவா இந்த எளிய பக்தரின் கோரிக்கைக்காக இப்படி தீபமேற்றி கொண்டு வைக்கச் சொன்னபோது இவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவு இல்லை.

ஆனால் மேலும் ஸ்ரீபெரியவா செய்ததில் திகைத்துப் போனார். ஓய்வில் இருந்த மகான் எழுந்து மெதுவாக தண்டத்தை தாங்கிய திருக்கோலத்துடன் அந்த நெய்தீப விளக்கை வலம் வந்தார். பின் அதை வணங்கினார்.

அருள் அமுதம் வடியும் திருமுகத்தை திருப்பி இவரைப் பார்த்தார்.

“சேவிச்சிக்கோ... சிரவணதீபத்தை... இனிமே குடும்பத்திலே எப்பவும் வெளிச்சமாகவே இருக்கும் கவலைப் படாதே” என்று அந்த காருண்யர் சொன்னபோது கரைந்து போனார்.

பாரம்பரிய குடும்ப வழக்கத்தை அசிரத்தை காரணமாக விட்டுவிடக் கூடாது. நம்மால் முடிந்தவரை எளிமையாகவாவது விடாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உணர்த்துவது போல் ஸ்ரீபெரியவா அந்த எளிமையான நெய்விளக்கே சிரவணதீபம் என்று காட்டி உணர்த்தியதுபோல் இவருக்கு புரிந்தது.

விழிகளில் ஆனந்த பெருக்கோடு நோக்கினார் ஸ்ரீபெரியவா. சாக்ஷாத் சக்ரபாணி பெருமாளைப் போல் தரிசனம் நல்கியது போலிருந்தது.

❖ ❖ ❖



# 25. நாதராய் குருநாதர்!

ஈச்சங்குடியில் ஸ்ரீ மஹாபெரியவாளை ஈன்றிட்ட அன்னை தெய்வமாம் மகாலட்சுமி தாயாரின் அகத்தில் அதை பராமரிக்கும் அன்பர் கேட்ட சம்பவம் இது.

அந்த அகத்திற்கு ஒரு ஸ்ரீ வெங்கடேஸ்வரா நந்தா என்ற சன்யாசி வந்தார். பெரும் பக்தி கொண்டவராய் ஸ்ரீமஹாபெரியவா திருபாதுகை, விக்ரகம் எல்லாவற்றையும் வணங்கினார்.

அவரிடம் கேட்ட அரிய சம்பவத்தை அந்த அன்பர் கூறுகிறார்.

1966 இல் அவர் முதல் முதலில் ஸ்ரீமஹாபெரியவாளை தரிசித்தபோதே அவர் மனதை அத்தெய்வம் ஈர்த்ததோடல்லாமல் தானும் துறவறம் பூண்டிட வேண்டுமென உந்துதலும் ஏற்படலானது.

அவர் மாத்துவ வகுப்பைச் சேர்ந்தவர்.

இப்படி மனதில் அரிக்க மூன்று மாதங்களில் தானே வலிய மொட்டை அடித்து காஷாயம் உடுத்தி ஸ்ரீபெரியவாளிடமே வந்துவிட்டார். ஸ்ரீபெரியவாளும் எல்லா விதிகளையும் அறிந்திருந்த ஞானியாய் அவருக்கு வெங்கடாஜலபதிதான் குலதெய்வம் என்பதால் வெங்கடேஸ்வரா நந்தா என்று சன்யாச திருநாமம் சூட்டினார்.

“சுத்திண்டே இரு” என்று ஸ்ரீபெரியவா இட்ட அபூர்வ கட்டளைபடி இவர் பலமுறை இந்திய தேசமெங்கும் சுற்றியபடியே இருப்பதாக கூறினார்.

மேலும் பலமுறை பத்ரிநாத் போய்விட்டு வந்ததாக கூறியவர் முதல்முறை பத்ரிநாத்தில் தான் தரிசித்த அபூர்வத்தைச் சொன்னார்.

அங்கு பத்ரிநாராயணன் சன்னதிக்கு சென்று தரிசித்தபோது இவரால் நம்ப இயலாத காட்சியாய் அங்கே ஸ்ரீ மஹாபெரியவா அச்சு அசல் பத்ரிநாதராய் காட்சி அளித்தாராம். ஸ்ரீபத்ரிநாதர் வடிவிலேயே ஸ்ரீபெரியவா புகுந்து திருகாட்சி அருளி இந்த துறவிக்கு பெரும்பாக்யம் அருளியுள்ளார்.

❖ ❖ ❖

# 26. வேணுகோபாலன் வேறெங்குமில்லை

**கா**ஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயிலில் கைங்கர்யம் செய்த அன்பர் ஸ்ரீ சீமா பட்டர். வைணவராயிருந்தும் ஈஸ்வர பெரியவாளிடம் ஈடுபாடு கொண்டவர்.

இந்த வைணவரை ஸ்ரீபெரியவா ஆட்கொண்ட விதம் அபூர்வமானது.

வரதராஜர் கோயிலின் பிரம்மோத்ஸவம் அன்று ஆறாம் நாள் வரதராஜ பெருமானுக்கு ஸ்ரீவேணுகோபாலனாக அலங்காரம் செய்யப்பட்டு அழகாக ஜொலித்தார்.

வழக்கம்போல் வரதராஜர் சுவாமி புறப்பாடு ஸ்ரீமடம் வரை சென்று அங்கே சிறிது நேரம் பக்தர்களுக்கு தரிசனம் தர நிற்பார். ஸ்ரீ சங்கரமடத்தின் எதிரில் ஸ்ரீ வேணுகோபால சுவாமி எழுந்தருளி பக்தர்கள் தரிசித்துக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீமடத்தின் வாசலுக்கு ஸ்ரீபெரியவா வந்து நின்று பரவசத்துடன் பெருமாளை பார்த்து களித்துக் கொண்டிருக்க, ஸ்ரீ சீமா பட்டருக்கே ஒரு க்ஷண நேரம் அந்த தெய்வீக காட்சி தென்பட ஸ்தம்பித்து நின்றார்.

எதிரே ஸ்ரீமடத்து வாசலில் நின்ற ஸ்ரீபெரியவாளை திடீரென்று சீமா பட்டரின் கண்ணிற்கு காணாமல் மறைந்தது போலிருந்தது. அதையும் மீறிய அபூர்வமாக அங்கே அடுத்த க்ஷணமே சாக்ஷாத் வேணுகோபால சுவாமியே நின்று கொண்டிருப்பதை நிஜமாகவே பார்ப்பது போலிருந்தது.

அது பிரம்மையல்ல உண்மை என்பது மறுபடியும் ஸ்ரீ பெரியவாளின் திருஉருவம் அங்கே காட்சி தந்தபோது உறுதியானது.

அந்த க்ஷணநேர அற்புதத்தை தாங்காமல் பட்டர் திணறி போனார். இந்த அதிசயம் நிஜமே என்ற உறுதி ஏற்பட்டிருந்ததால் தான் 'படிப்பவர்கள் நம்ப வேண்டுமே' என்ற தயக்கமில்லாமல் இதை நூலின் வாயிலாக பகிர்ந்துள்ளார்.

வரதராஜ பெருமாய் கோயில் பட்டருக்கு அந்த நொடிப் பொழுதில் தான் ஸ்ரீவேணுகோபாலலான வரதராஜனே என்பதை ஸ்ரீபெரியவா உணர்த்தி விட்டார்.

❖ ❖ ❖



# 27. திருவடி தந்த தசாவதார தரிசனம்

**ஸ்ரீ** மஹாபெரியவாளின் திருஉருவமே பலருக்கு பல தெய்வங்களாக காட்சி அளித்திருக்க ஸ்ரீமதி சாந்தா ராமதுரை என்ற பக்தைக்கு அத்தெய்வத்தின் பாத கமலங்களே அரிய தரிசனத்தை ஈந்துள்ள விந்தை அனுபவம் இது.

ஸ்ரீமதி சாந்தா ஸ்ரீபெரியவாளின் மேலிருந்த பக்தியினால் மாதம்தோறும் கணவருடன் காஞ்சி செல்வார். வைணவர்களாக இருந்தும் ஸ்ரீமஹாபெரியாவளிடம் இவர்களின் முருகபக்தி ஈர்த்து சென்றுள்ளது.

"ஐயங்காராய் இருந்து ஐயர் சாமிகிட்டே எப்படி வந்தே" என்று ஸ்ரீபெரியவாளே வேடிக்கையாக கேட்பதுண்டாம்.

ஸ்ரீமதி சாந்தா மாமி எப்போது தரிசிக்க போனாலும் ஸ்ரீபெரியவா சன்னதியில் அஷ்டபதி பாடுவாராம். ஒருமுறை பெசன்ட் நகரிலிருந்து புறப்பட்டு காஞ்சிபுரம் இவர் சென்றபோது மணி மதியம் பன்னிரண்டாகி விட்டது.

இவர் ஸ்ரீமடத்திற்குள் நுழைந்தபோது "இப்போதுதான் பெரியவா உள்ளே போறார்" என்று அங்கிருந்தவர்கள் சொன்னபோது இவருக்கு ஏமாற்றமானது.

அன்று ஆவணி மூலம். ஏகாதசி தினம். ஸ்ரீபெரியவா மௌனம் என்று வேறு சொன்னார்கள். பெரும் ஏமாற்றத்தை அடக்க முடியாமல் சாந்தா மாமிக்கு அழுகையே வந்துவிட்டது.

பின் மனதை தேற்றிக் கொண்டு 'வந்ததுதான் வந்தோம். அஷ்டபதி பாடிவிட்டு சன்னதியிலிருந்து திரும்பலாமென எண்ணி மனம் உருக பாடலானாள்.

எந்த ஒரு நம்பிக்கையுமில்லாமல் பாடிக் கொண்டிருக்க பத்தொன்போதாவது அஷ்டபதி பாடும்போது ஸ்ரீபெரியவாளெனும் காருண்யர் இந்த பக்தைக்காகவே வருவதுபோல் வெளியே வந்ததோடல்லாமல் "எல்லா அஷ்டபதியையும் முடிச்சிட்டு போ" என்று மாமியிடம் தன் மௌனத்தை கடந்தவராய் அருள் புரிந்தார்.

ஸ்ரீபெரியவா பக்தையை "உட்காரு" என்று கூறியபடி தானும் கிருஷ்ணரைப் போல் இரு கால்களையும் பின்னி அமர்ந்தபடி மாமி பாடியதை கேட்கத் தொடங்கினார்.

அப்போது இலங்கையிலிருந்து யாரோ ஒரு பெரிய புள்ளி தட்டு நிறைய மங்கள திரவியங்களையும் ஒரு பெரிய பந்தாக கதம்ப சரத்தையும் கொண்டு வந்து சமர்பிக்க ஸ்ரீபெரியவா அந்த கதம்ப சரத்தை மேனியிலிருந்து திருப்பாதம் வரை சாற்றியபடி பக்தை பாடுவதை கேட்டுக் கொண்டிருந்தார்.

ஸ்ரீமதி சாந்தாவிற்கு ஸ்ரீபெரியவா தந்த இன்ப அதிர்ச்சியை ஜீரணிக்க இயலாமலும், பக்கத்தில் ஸ்ரீகிருஷ்ணரைப்போல் வீற்றிருக்கும் பெரியவாளின் திருமுகத்தை பார்க்கும் திடமில்லாமலும், அத் தெய்வத்தின் திருபாதங்களையே பார்த்தபடி பாடினாள்.

அப்போதுதான் அந்த பேரனுக்ரஹ வசப்படும் பாக்யம் கிட்டியது. ஸ்ரீபெரியவாளின் பாத கமலங்களை நோக்கியபடி பாடிய பக்தைக்கு அந்த கமலங்களில் ஸ்ரீமந் நாராயணனின் பத்து திருஅவதார காட்சிகளும் ஒன்றன்பின் ஒன்றாக காணும் பேரதிசயம் நிகழ்ந்தது.

சாக்ஷாத் பத்து திருஅவதாரங்களும் ஸ்ரீபெரியவாளின் பொற் பாதங்களில் கண்ட அனந்த களிப்பில் பக்தையின் கண்களில் ஆனந்தம் பெருகி வழிய அஷ்டபதிகளை முடித்தாள்.

தனக்கு ஏதோ பிரமைபோலும் என்று மாமிக்கு அவநம்பிக்கை ஏற்படாமலிருக்க அருளுவதுபோல் ஸ்ரீபெரியவா,

"நீ என்ன பாத்தே... என்ன தெரிஞ்சுது?" என்றும் கேட்டு அந்த லீலையை உறுதி செய்தார்.

"பெரியவா பாதத்திலே பத்து அவதாரமும் தரிசனமாச்சு" என்று பக்தை உணர்ச்சி மேலிட கூறினார்.

அதை ஆமோதிப்பதுபோல் ஒரு புன்சிரிப்பை வதனத்தில் பரவவிட்டு அந்த கிருஷ்ண பரமாத்வாகவே ஸ்ரீ மஹாபெரியவா "க்ஷேமமா போயிட்டு வா" என்று பக்தையிடம் அந்த கதம்ப மலர் பந்தை அளித்தருளினார்.

எப்பேற்பட்ட பாக்யமிது?

❖ ❖ ❖



# 28. திரிமூர்த்தியாய் ஸ்ரீபெரியவா!

பொள்ளாச்சி ஜெயம் என்ற பக்தை ஸ்ரீபெரியவாளை திருவானைக் காவலில் தரிசித்துவிட்டு உடனே தஞ்சாவூருக்கு திரும்ப வேண்டும் என எண்ணினர்.

அடுத்த நாள் சோமவார அமாவாசையானதால் அரச மரத்தை வலம் வருவதென்ற வழக்கத்தை விட்டுவிடாமல் செய்ய ஆசை கொண்டிருந்தார். ஸ்ரீபெரியவாளிடம் மாமியும் கணவரும் உத்தரவு கேட்டு புறப்பட நெருங்கிய போதெல்லாம் மற்ற பக்தர்களுக்கு போய்விட்டு வர அனுக்ரஹம் செய்யும்போது இவர்களின் முறை வரும்போது மட்டும் எழுந்து உள்ளே சென்றுவிடும் திருவிளையாடலை புரிந்துக் கொண்டிருந்தார்.

இதனால் பெருத்த ஏமாற்றத்துடன் அன்று இரவு அங்கேயே தங்க வேண்டிய நேர்ந்தது. இந்த சோமவார அமாவாசைக்கு அஸ்வத்த பிரதட்சனம் தங்களுக்கு கொடுத்து வைக்கவில்லை என மனதை தேற்றிக் கொண்டனர்.

ஆனால் அடுத்த நாள் இந்த பக்தை எத்தனை கொடுத்து வைத்தவள் என பெருமைபடும் வகையில் ஸ்ரீபெரியவா அனுக்ரஹிக்க திட்டமிட்டிருந்தார்.

மறுநாள் அதிகாலை விஸ்வரூப தரிசனம் நல்கிய ஸ்ரீபெரியவா கைங்கர்ய அன்பர்களிடம் "நான் ஜபம் செய்ய மேனவுக்குள் போறேன். முக்கால் மணி ஆனதும் இந்த மேனாவோட என்னை கொள்ளிட கரைக்கு கொண்டு போய் வைச்சுடுங்கோ" என்று ஒரு மணி ஜபத்திற்கு மேனாவிற்குள் சென்று மூடிக்கொண்டார்.

இப்படி ஒரு என்றுமில்லாத கட்டளையால் கைங்கர்ய அன்பர்கள் புரியாமல் தவிக்க, ஸ்ரீபெரியவா இப்பையாவது உத்தரவு கொடுத்துவிட்டு மேனாவிற்குள் போயிருக்கலாமே. இப்போது என்ன செய்யலாம் என்று மாமியும் கணவரும் யோசித்தனர்.

அவர்களுக்கு ஸ்ரீபெரியவாளையே வலம் வரலாமே என்று தோன்றியது. அப்படி செய்யும்போது ஸ்ரீபெரியவாள் ஏற்கனவே உத்தவிட்டதன்படி மேனாவை கொள்ளிடகரைக்கு கொண்டு சென்றனர்.

இவர்களும் மேனாவுடன் சென்று கொள்ளிடத்தில் ஸ்நானம் செய்தனர். மேனாவை திறந்து பெரியவா அனுஷ்டாங்களை முடித்து ஜெயம் மாமியைப் பார்த்து,

“எத்தனை பிரதட்சணம் செஞ்சே?” என்றபோது பக்தைக்கு ஆச்சர்யமாயிருந்தது. மோனவிற்குள் இருந்த பெரியவாளுக்கு வலம் வந்தது எப்படி தெரிந்தது என எண்ணினார்.

திகைப்பு அடங்கியதும் “தொண்ணூறு பெரியவா” என்றாள்.

“பாக்கி பிரதட்சணத்தையும் முடிச்சுடு” என்று தானே வலிய கேட்டு வாங்கிக் கொள்வதுபோல் அனுக்ரஹித்தார். பிரதட்சணம் முடிந்ததும் “என்ன ஸ்லோகம் சொல்லிண்டு சுத்தினே” என கேட்டார். மாமியும் அந்த ஸ்லோகத்தை சொன்னாள். மூலம் பிரம்மாகவும், மத்தியில் விஷ்ணுவாகவும், முடியில் சிவனுமாக மும்மூர்த்திகளை கொண்ட விருஷங்களின் ராஜாவே உன்னை வணங்குகிறோம் என்ற அர்த்தம் பொதிந்த ஸ்லோகத்தை பக்தை சொன்னாள்.

“அந்த ஸ்லோகத்திலும் திருமூர்த்தி... இங்கேயும் அதுதானே” என்று தன் திருவாக்கினால் தன்னுள் திரிமூர்த்திகளும் அடக்கம் என்பதை வெளிப்படுத்தி அருளினார் அத்தெய்வம்.

❖ ❖ ❖

## 29. ஸ்ரீசுவாமிநாத பெரியவா!

**ஸ்ரீ**ஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளை எல்லா தெய்வங்களோடு ஒப்பிட்டு பார்த்து மகிழ்வதுண்டு. இந்நூலில் ஸ்ரீ மஹா பெரியவாளே தன்முன் நிற்கும் பக்தர்களுக்கு வெவ்வேறு தெய்வங்களாக காட்சியருளிய மகிமைகளை தொகுத்து வழங்கியுள்ளேன்.

இருப்பினும் பூர்வாஸ்ரமத்தில் ஸ்ரீசுவாமிநாதன் என்ற திருநாமம் அமைந்த ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளை திரு.ரா. கணபதி அந்த சுப்ரமணிய சுவாமியோடு ஒப்பிட்டு எழுதி யிருப்பதை பக்தர்களுக்கு பகிர வேண்டும் என புத்தகம் எழுதிய சந்தர்ப்பத்தில் ஒரு உந்துதல் ஏற்பட இது சம்பந்தமாக தகவலும் கிடைத்தது.



ஸ்ரீமுருக பெருமானாக ஸ்ரீ பெரியவா தன்னை காட்டிக்கொண்ட சம்பவம் இரண்டே இரண்டுதான் கிடைத்ததில் நான் பிரார்த்தனை ஸ்ரீகணேஷ் என்ற அன்பரை தொடர்பு கொண்டு அப்படி பக்தரின் அனுபவம் ஏதாவது இருந்தால் தெரிவிக்கச் சொன்னேன்.

செல்போனில் அவருடன் பேசிக் கொண்டிருந்தபோதே என் மூத்த சகோதரி ஸ்ரீமதி சாயிகுமாரி எனக்கு இடையில் போன் செய்தாள். இவரிடம் பேசியபின் என் தமக்கையிடம் போனில் பேசியபோது திருசெந்தூர் முருகனைப் பற்றிய திருபுகழில் மஹாலட்சுமி பெற்ற மைந்தனாக ஸ்ரீஅருணகிரிநாதர் சொல்வதாக இருப்பதைக் கூறினாள். எனக்கு ஒரே ஆச்சர்யம். இது விஷயமாக நான் தமக்கையிடம் ஏதும் கூறவில்லை. கேட்டதுமில்லை. ஆனால் நான் ஸ்ரீகணேஷிடம் எது சம்பந்தமாக பேசினேனோ அதையே அதே சமயம் என் சகோதரி எங்கோ கேட்ட தகவலாக என்னிடம் கூற நினைத்ததும் ஸ்ரீபெரியவா அருளன்றி வேறு எதுவாக இருக்க முடியும்.

அதன்பின் ஸ்ரீகணேஷ் அவர்களும் ஸ்ரீ.ரா. கணபதி எழுதிய புத்தகத்திலிருந்து அதே திருப்புகழ், மகாலட்சுமி சங்கதியை எனக்கு அனுப்பியதால் இதை பக்தர்கள் அறிய வேண்டுமென்பது ஸ்ரீபெரியவாளின் அக்கறை என தோன்றியது.

ஆகவே ஸ்ரீரா. கணபதி ஒப்பிட்டுள்ளதை இங்கு தருகிறேன்.

“தந்தையார் ஸ்ரீஸீப்ரமணிய சாஸ்திரிகள் (ஸ்ரீபெரியவா பூர்வாஸ்ரம தந்தை) தன் மூத்த புத்திரனுக்கு ஸ்ரீகணபதி என்ற திருநாமம் சூட்டியிருந்தார். இரண்டாம் புத்திரனாக பிறந்த ஸத்குருநாதனுக்கு தங்களின் குலதெய்வமான ஸ்ரீசுவாமிநாதன் என்ற பெயரை சூட்டியுள்ளார். அதனால் அதிசய பொருந்தமாக விநாயக-முருக ஸோதரரைக் குறிப்பதுபோல கணபதி-சுவாமிநாதனாக மூத்த இளைய புத்திரர்களின் பெயர்கள் அமைந்துள்ளன.

‘சிவகொழுந்தென கணபதியுடன் வரும் இளையோனே’ என்று திருப்புகழ் மொழியால் நம் ஸ்வாமிநாதனையும் அழைக்கலாம்.

இன்னொரு எதிர்பாராப் பொருத்தமும்கூட உண்டு. முருகனை லக்ஷ்மியின் குமாரன் என்று எங்கேயும் சொல்வ

துண்டோ? ஆனாலும் எதனாலோ "திருவேரப்பதியில் வளர் ஸ்வாமிநாத குருவே" என்று திருபுகழ் ஒன்றில் ஸ்ரீஅருணகிரிநாதர்

**'ராஜத லக்ஷண லக்ஷீமி பெற்றருள் பெருமானே'**

என்றும், இன்னொன்றில்

**'ராஜத லக்ஷண லக்ஷிமி பெற்றருள் தம்பிரானே'**

என்றும் அழைக்கிறார். உமா மகேஸ்வரியை எக்காரணத்தினாலே லக்ஷ்மி நாமத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

நமது குருநாதரின் தாயார் நாமம் மஹாலக்ஷ்மி என்பதால் நம் பெரியவாளும் லக்ஷ்மி பெற்றருள் பெருமானே யாகும்.

❖ ❖ ❖

## 30. முருகனை தரிசிச்சாச்சி!

**ஸ்ரீ**மதி சாரதாமணி தன் தந்தையாம் ஸ்ரீ பெரியசாமி தூரன் அவர்களின் அனுபவமாக இதை கூறுகின்றார்.

ஸ்ரீபெரியசாமி தூரன் ஸ்ரீபெரியவாளை தரிசித்ததுண்டு. ஆனால் அடிக்கடி தரிசனம் என்பதெல்லாம் இல்லை. ஸ்ரீபெரியவாளுக்கும் தனக்கும் அத்தனை பரிச்சயம் இல்லை என்பது இவருக்கு தெரியும்.

ஆல் இண்டியா ரேடியோவில் பணிபுரிந்த இவர் பல பக்தி பாடல்களை இயற்றியவர். பாலகர்களுக்காக இலக்கிய சேவை செய்தவர். அவர் கால் வலியால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். வெவ்வேறு வைத்தியம் செய்தும் பலனில்லாமல் போக பெரிய மகான்களை அடிக்கடி தரிசிக்க செல்வதுண்டு.

அப்படி ஒருமுறை தன் மகளான ஸ்ரீமதி சாரதாமணி மற்றும் மாப்பிள்ளையுடன் திருவண்ணாமலைக்கு யோகி சுரத் குமார் என்ற மகானை தரிசிக்கச் சென்றார்.

அப்போது தன் கால் வலியைப் பற்றி பெரிது பண்ணி கேட்க விரும்பாததால் அதைவிட மேன்மையான ஒன்றை அந்த மகானிடம் கேட்க அவர் மனம் விழைந்தது.

"சாமி! எனக்கு முருகனை தரிசிக்க ஆசை" என்றார்.



விசிறி சாமியார் என்று அழைக்கப்படும் அந்த மகானின் திருவாக்கில் அப்போது,

"Murugan is there in Kanchipuram without the Consorts" என்று தடாலடியான பதில் வந்தது.

முருகன் காஞ்சிபுரத்தில் இருக்கிறார். போய் தரிசிக்கலாம் என்று ஸ்ரீ மஹாபெரியவாளை குறிப்பிட்டு அந்த மகான் கூறியபோது விந்தையாக இருந்தது.

பின் அதன்படி இவர்கள் மூவரும் காஞ்சி முனிவரை தரிசிக்க சென்றனர். தேனம்பாக்கத்தில் அருளிக் கொண்டிருந்த ஸ்ரீபெரியவா அன்று மௌனமென்று கூறினர்.

சரி! நாம் கொடுத்து வைத்தது இத்தனை தான் என்று இவர்கள் நிற்க, யாரோ ஒரு கைங்கர்ய அன்பர் இவர்கள் வந்திருப்பதை ஸ்ரீபெரியவாளிடம் சொல்லியுள்ளார்.

உடனே ஸ்ரீ மஹாபெரியவா தன் தீவிர மௌன விரதத்தையும் தவிர்த்த தயாளத்துடன் உடனே வெளியே ஒரு குழந்தையின் ஆர்வத்தோடு குதித்து, குதித்து வந்தாராம்.

இப்படி ஒரு அபூர்வ அனுக்ரஹத்தை நல்கிய அதே சமயம் விசிறி சாமிகளின் வாக்கை மெய்ப்பிப்பதுபோல் குமாரசாமியாக ஸ்ரீபெரியசாமி தூரனுக்கு ஸ்ரீபெரியவா திருகாட்சி அருளியுள்ளார்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளை அந்த குமாரசுவாமியாம் முருகனாகவே கண்ட களிப்பில் பெரியசாமி தூரன் வணங்கி நின்றார்.

இவரை மேலும் அதிசயிக்கச் செய்யும் வகையில் ஸ்ரீபெரியவா,

"உன் கால் எப்படி இருக்கு? உனக்கு என்ன வேணும்" என்று கருணையோடு கேட்டுள்ளார். பதினோரு வருடங்களுக்கு பின் வந்திருக்கும் பக்தனைப் பற்றி தான் முற்றிலும் அறிந்துள்ளதை கால்வலியைப் பற்றி கேட்டதன் மூலம் ஸ்ரீபெரியவா உணர்த்தி யுள்ளார்.

ஸ்ரீ பெரியசாமி தூரன் உணர்ச்சி பெருக்கோடு,

"முருகனை தரிசிக்க வந்தேன் சேவிச்சுட்டேன்... எனக்கு வேற ஒண்ணும் வேண்டாம்" என்று வணங்கினார்.

இந்த முருக பக்தருக்கு முருகராகவே காட்சி தந்திட்ட ஸ்ரீபெரியவா அதை ஊர்ஜிதமாக்குவதைப்போல ஸ்ரீமதி சாரதாமணியிடம்,

“உன் அப்பா எழுதின ‘கொஞ்சி கொஞ்சி வா குகனே’ பாடு” என்று கேட்க சாரதாமணியும் பாடியுள்ளார்.

நம் ஸ்ரீபெரியவா சுவாமிநாத பெரியவா அல்லவா!

❖ ❖ ❖

## 31. மயிலேறும் ஸ்ரீபெரியவா!

**ஸ்ரீ** சுவாமிநாதன் என்ற பூர்வாஸ்ரம திருநாமம் கொண்டு உதித்திட்ட நம் பெரியவா அந்த சுவாமிநாத ஆறுமுகனாக பக்தைக்கு காட்சி தந்த சம்பவம் இது.

ஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரின் தர்மபத்தினியாம் மாதுஸ்ரீ வேதாம்பாள் மாமிக்குதான் அப்படி ஒரு அற்புத தரிசனம் கிட்டியது. இதில் அதிசயம் என்னவென்றால் இப்படி தரிசனம் நல்கப் போவதை அந்த தெய்வம் முன்கூட்டியே மாமியின் கனவில் இருமுறை வந்து காட்சி தந்து ஈர்த்து அளித்திட்ட பாக்யம் என்பதே.

மாமி ஒரு இனம்புரியாத உடல் கோளாறில் அவஸ்தைப் பட்டபோது மருத்துவர்கள் அதை கேன்ஸர் என்பதாக கூறி பெரும் கவலையை அளித்துவிட்டனர்.

நாயன்மாரின் தர்மபத்தினி அன்றோ! அந்த வைத்திய நாதராம் ஸ்ரீபெரியவாளை பூர்ணமாக சரணடைந்து வேண்டிக் கொண்டதில் அன்று ஒரு சொப்பனத்தில் ஸ்ரீ மஹாபெரியவா சுப்ரமணிய சுவாமியாக காட்சி தந்தார்.

மாமி அதுவரை சென்றிடாத ஸ்ரீமடத்தின் மேடையில் அங்கே ஆளுயர குத்துவிளக்கு பிரகாசிக்க வண்ண மயில்மேல் ஸ்ரீ மஹாபெரியவா அமர்ந்திருக்கிறார். சுப்ரமணிய சுவாமியாக காட்சி தந்த ஸ்ரீபெரியவாளிடம் மாமி தன் உடல் உபாதையை கூறி அழுகிறாள். அந்த கருணை தெய்வம் தான் தரித்திருந்த ஒரு சால்வையை மாமியின் மேல் போர்த்து போலான கனவுதான் அது.



இருந்தாலும் கனவில் நடப்பது போலல்லாமல் மாமியின் தேகத்தில் மெய்யாகவே ஒரு சால்வை போர்த்தப்படுவது போன்று உடலில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. இந்த அதிர்வு ஏற்பட்டதால் ஒரு மாயம் நிகழ்ந்ததுபோல் உடல் உபாதை அகன்றது போலானது. அன்று விடியற்காலையிலேயே உடலிலிருந்து ஒரு கட்டி வெளிப்பட்டு மாமி குணமான அதிசயம் நிகழ்ந்தது.

கனவில் சுப்ரமணியராய் அருளிய ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசித்து நன்றி தெரிவிக்க மாமியின் மனம் பாடுபட்டது. அடுத்த நாளே சேலத்திலிருந்து காஞ்சிக்கு கிளம்ப தன் கணவராம் நாயன்மாரை கேட்டாள். மாமியின் உடல்நிலை இத்தனை பலகீனமாக இருக்கும்போது எப்படி தனியே அனுப்புவது என்று பிரதோஷ நாயன்மார் தயங்கினார். தன் ரஷி போன்ற இரு குழந்தைகளை கவனித்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தமும் காரணம்.

உடனே செல்ல முடியவில்லையே என்ற ஆதங்கத்தோடு அந்த நாள் கழிகிறது.

அடுத்த நாள் காலை மறுபடியும் கணவரிடம் கேட்க, அவர் அனுப்ப இயலாத நியாயமான காரணத்தை சொல்கிறார். அந்த அதிகாலையில் சற்றே கண் அயர்கிறாள்.

திரும்ப கனவில் தோன்றிய ஸ்ரீபெரியவா ஒரு கல் மண்டபத்தில் அமர்ந்திருக்க இடுப்பில் ஒரு வஸ்திரம் மட்டும் மறைக்க பழநி ஆண்டியாய் காட்சி தருகிறார்.

இந்த முருகனது அம்சத்தை ஸ்திரமாக உணர வைப்பதுபோல் எப்போதும் பெரியவா சன்னதியில் தேவாரம் பாடும் மாமியின் வழக்கத்தை மாற்றி திருபுகழ் பாடும் உந்துதலும் அருளியது போலானது.

மாமி நா மணக்க திருப்புகழ் பாடுகிறாள்.

**ஏறுமயில் ஏறிவிளையாடும் முகம் ஒன்று**
**ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று**
**கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்று**

இப்படி ‘வினை தீர்க்கும் முகம் ஒன்று’ என்ற வரிகள் வெளிபட்டவுடன் “போயிட்டு வா” என்று ஸ்ரீபெரியவா சைகை காட்டி மறைகிறார்.

இப்படி இரண்டு முறை ஸ்ரீபெரியவா கனவில் தோன்றியதை தெரிவித்தபோது நாயன்மார் இதை பெரியவாளின் ஆக்ஞையாக ஏற்று மாமியை காஞ்சி செல்ல அந்த இரவு ரயிலில் ஏற்றி அனுப்புகிறார்.

சோதனையாக அந்த ரயில் ஏதோ கோளாறினால் தாமதமாக செங்கல்பட்டு வந்து சேர்ந்தது. ரயிலில் செங்கல்பட்டு வரை வந்து பேருந்தில் காஞ்சி வந்து ஸ்ரீமடத்தை தேடி சென்ற மாமிக்கு மேலும் சோதனையாய் ஸ்ரீபெரியவா அங்கில்லாமல் வேறு எங்கோ புறப்பட்டுவிட்டதாக தகவல் கிடைத்தது.

ஸ்ரீபெரியவா தரிசனத்திற்கு பின்தான் ஆகாரம் என்ற உறுதியுடன் இருந்த மாமியை இந்த தடங்கலெல்லாம் சோதிக்கவே அமைந்தது போலானது.

மனம் தளராமல் ஸ்ரீபெரியவா ஆற்காடு நோக்கி செல்வதாக அறிந்து ஆற்காடு பஸ்ஸில் ஏறி மாமி பயணித்தாள். பஸ் சென்ற வழி எங்கும் மாமி ஏதாவது தடயம் தெரிகிறதா என்று பார்த்துக் கொண்டே வர, ஒரு இடத்தில் ஸ்ரீபெரியவா இருக்கும் அடையாளங்கள் தென்பட அங்கேயே மாமி இறங்கி கொண்டாள்.

இப்போது மனதிலும் உடலிலும் ஒரு தெம்பு ஏற்பட, ஸ்ரீபெரியவா அருளும் இடத்தை அடைந்த மாமிக்கு முந்திய நாள் அதிகாலை கனவில் கண்டது போலவே ஒரு கல் மண்டபத்தில் ஸ்ரீபெரியவா காட்சி தந்த அதிசயம் காண நேர்ந்தது.

கல் மண்டபத்தில் கந்தசாமியாக காஷய துண்டு மட்டும் இடுப்பில் கட்டி ஸ்ரீபெரியவா காட்சி தந்ததோடு, ஒரு குறும்பு புன்னகையோடு 'கனவில் கண்டது நிஜமே' என்பதை உறுதி செய்வதுபோல்

"உன் மாமனார் போட்ட பாட்டைப் பாடு" என்று அச்சு அசலாக அந்த கனவை நிஜமாக்காமல் சற்றே ஒரு வித்யாசமாக்க பாட்டை மட்டும் மாற்றி மாயம் செய்துவிட்டார்.

மாமி தன் மாமனாரான ஸ்ரீவைத்தியநாத சர்மாவின் கவிதையான

**"திங்களஞ் சடை சிவபிரான் உருத்**
**தெரியவே விளங்கு அரியதோர் மகான்"**

என பாடுகிறாள்.



அந்த திங்களஞ் சடை சிவபிரான் திருஉருவில் அரியதோர் ஆறுமுகனை காட்டிய ஸ்ரீபெரியவா பூர்ணமான ஆசிர்வாதத்தோடு அனுக்ரஹித்து அருளியுள்ளார்.

❖ ❖ ❖

# 32. நான்முகனாய் நான்மறையோன்

**ஆ**க்கும் கடவுளான பிரம்மாவாக ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளை தரிசித்த ஆனந்தம் பற்றி ஸ்ரீபெரியவா பக்தர் எஸ்.வெங்கடராமனின் அனுபவம் இது.

திரு வெங்கடராமனின் தம்பி சந்தானத்திற்கு விவாகமாகி ஏழு ஆண்டுகளாயும் புத்திரபேறு இல்லை. கல்யாணமான மூன்றாவது வருடத்திலிருந்தே சந்தானத்தின் மனைவி சுசிலாவை மாமியார் குத்தி காண்பித்து வேதனைபடுத்தினாள்.

அப்போது வீட்டிற்கு வந்த ஒரு முதியவர் ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசித்து ஆசி பெற்றால் வழி கிடைக்கலா மென்று கூற, வெங்கடராமன் தன் தம்பி தம்பதியினரை ஸ்ரீபெரியவாளிடம் அழைத்துச் சென்றார்.

வெங்கடராமன் குறையை சொன்னபோது, "நான் மந்திரவாதி இல்லே. ஆரூடம் சொல்லவும் தெரியாது. டாக்டரும் இல்லே. தெய்வமும் இல்லே. பிரம்மா எழுதி வைச்சது போலத்தான் எல்லாம் நடக்கிறது என்கிறது சாஸ்திரம்... அலைஞ்சதெல்லாம் போதும் சிவா, ராமான்னு சொல்லிண்டிருங்கோ" என்று ஸ்ரீபெரியவா அருளியபோது தம்பதிகள் ஏமாற்றமடைந்தனர்.

எவ்வளவோ பக்தர்கள் புத்ரபாக்யத்திற்காக மகானை வேண்டி வந்தபோது ஏதோ ஒரு பழத்தை ஸ்பரிசித்து கொடுத்து அப்படி ஒரு வரமருளிய சம்பவங்களிருக்க தங்கள் விஷயத்தில் இப்படி கூறிவிட்டாரே என்றிருந்தது.

மும்மூர்த்திகளாக தாமே திகழும் பெரியவாளுக்கு ஒரு அம்சமான பிரம்மா எழுதியதை தெரியாமல் போகுமோ? நாற்பதை கடந்திருந்த சந்தானத்திற்கு இனி புத்ரபாக்யம் இல்லை என்பது ஸ்ரீபெரியவாளெனும் பிரம்மாவிற்கு தெரிந்தே இருந்ததால்தான் சிவா ராமான்னு இருக்க அருளப்பட்டிருந்தது.

இந்த அருள்வாக்கை புரிந்து கொள்ளாதவர்களாய் இவர்கள் ஆதரவற்றோர் இல்லத்திலிருந்து முறைப்படி ஒரு அழகான ஆண் குழந்தையை சிவீகாரம் எடுத்துக் கொண்டனர்.

குழந்தை காஷ்யப் அழகாக கொழு கொழுவென்றிருந்தான். ஆனால் ஆண்டு நிறைவு முடிந்ததும் புது புது வியாதிகள் வரலாயின. மருந்து மாத்திரை என்று குழந்தை குச்சியாக மெலிந்து போனான்.

இப்படி குழந்தை அவஸ்தைப்படுவதை பார்க்க வேதனையா யிருந்தது. குழந்தை இல்லாமலிருந்த வேதனையைக் காட்டிலும் இப்படி குழந்தை படும் அல்லல்களை பார்ப்பது மிகவும் வேதனையளித்தது.

'சிவா, ராமா ன்னு சொல்லிண்டிருங்கோ' என்று சொன்ன தெய்வத்தை ஞாபகம் வந்தது.

இதற்கும் அங்குதான் ஓடினர்.

ஸ்ரீபெரியவாளிடம் சுசீலா "குழந்தைக்கு நாலு வயதாறது. நடக்கவே வரலே" என்று எல்லா வேதனையையும் முறையிட்டு அழுதாள்.

ஸ்ரீபெரியவா ஏனோ ஏதும் சொல்லாமல் ஓய்விற்கு போய் விட்டார். "அப்புறம் வாங்கோ" என சிப்பந்திகள் கூற அன்று அங்கேயே தங்கினர்.

மறுநாள் காலை இரண்டு மணி நின்றும் எதுவும் பேசவில்லை. பின் மாலை திரும்பவும் குழந்தையை தூக்கிக் கொண்டு நெருங்க, ஸ்ரீபெரியவா அப்போது மனமிரங்கியது போல் "குழந்தையை கீழே போடு" என்றார்.

"இந்த குழந்தைக்கு உடம்பு சரியில்லை... உனக்கு மனசு சரியில்லே.. குழந்தையும் பொழச்சாகணும்... நீயும் நிம்மதியா இருக்கணும்... குழந்தைக்கும் உங்களுக்கும் ஒத்துக்கலே" என்று கூறிய ஸ்ரீபெரியவா அந்த குழந்தையின் விதியை எழுதிய பிரம்மாவாக அந்த பக்த கூட்டத்திலிருந்து மற்றொரு தம்பதியினரை அழைத்தார்.

"இவாளுக்கு இங்கு குழந்தையை ஸ்வீகாரமா கொடுத்துடேன்" என்றார். இப்படி ஒரு உத்தரவு திடுதெப்பென்று எதிர்பார்க்காததால் சற்றே தயங்கினாலும் ஸ்ரீபெரியவா உத்தரவை



இன்னொரு முறை மீறி செயல்பட பயந்தவர்களாக காஷ்யப் பை அந்த பணக்கார தம்பதிகளிடம் ஒப்படைத்து ஊர் திரும்பினர்.

மாமியார் கோபிக்காமல் ஸ்ரீபெரியவா சங்கதி பிராப்தி இல்லை என்பதை ஏற்கனவே உணர்த்தியுள்ளதை தெரிவித்து இவர்களை சமாதானம் செய்தாள்

இவை அனைத்தும் பழைய கதை.

இப்போது சந்தானம் தம்பதியினர் அறுபதாம் கல்யாணம் முடிந்து ஸ்ரீபெரியவாளிடம் ஆசிபெற வந்துள்ளனர்.

அப்போது ஒரு பத்து பன்னிரண்டு வயதிருக்கும் பையன் உபநயனம் முடிந்த கோலத்தில் ஸ்ரீபெரியவாளிடம் ஆசிபெற வரிசையில் இவர்களுக்கு முன்னால் நின்றான்.

சுசீலாவிற்கு அந்த பையனைப் பார்த்ததும் மனதில் ஒரு பாச உணர்வு சுரந்தது.

அப்போது "டேய்! பரத்வாஜ்" என்று குரல் கேட்க அந்த பையனை கூப்பிட்டவரை சுசீலா நோக்கினாள். உடனே தன் கணவரிடம் "உங்களுக்கு அவாள யார்னு தெரியறதா பாருங்கோ... அந்த மாமி முகம் நல்லா ஞாபகம் இருக்கும்... குந்து மணியாட்டம் முகத்திலே மச்சம் அன்னிக்கு பார்த்தது... அவாளேதான் நம்ப குழந்தை காஷ்யப்பை தத்து எடுத்துண்டவா" என்றாள்.

"அப்போ இந்த உபநயனம் ஆன பையன் காஷியப்பா... அடையாளம் தெரியாம நல்லா ஆயிட்டானே" என்று சந்தானத்துக்கும் ஆச்சர்யம். ஆமாம் காஷியப் இப்போது 'பரத்வாஜ்' ஆக வளர்ந்துள்ளான்.

ஆவலோடு அவர்களை கேட்ட அந்த அம்மையாருக்கு ஞாபகம் வரவில்லையோ இல்லை இவர்கள் பரத்வாஜ்ஜை பார்ப்பதை தவிர்க்க நினைத்தார்களோ தெரியவில்லை... அகன்று சென்றனர்.

சுசீலாவிற்கு பெரும் வியப்பு. இப்படி ஒரு கதைபோல பல வருடத்திற்கு பின் அதே தம்பதியினர் அங்கு வர இயலுமா. தங்களின் 60ம் கல்யாணத்தின் போதே குழந்தைக்கு உபநயனம் நடந்து பெரியவா ஆசிபெற ஒரே சமயம் வரும் அதிசயம் நேருமா.

இப்படி கதை எழுதி நடத்தும் ஸ்ரீ மஹாபெரியவாளை பூர்ணமாக நமஸ்கரித்து சுசீலா எழுந்தபோதுதான் அந்த பக்தைக்கு அரிய காட்சி பாக்யமாக கிட்டியதுதாம்.

ஸ்ரீபெரியவா பிரம்மாவைப்போல் நாலு திருமுகங்களோடு காட்சி தந்தருளினாராம்!

❖ ❖ ❖

# 33. "அருணாசல பெரியவாளும் அறுபத்து நாலாம் நாயன்மாரும்"

**சா**க்ஷாத் சர்வேஸ்வரரான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா சதாரா நகரத்தில் தன் அனுக்ரஹத்தை பொழிந்தருளிய காலகட்டம் அது. அப்படிப்பட்ட தருணத்தில் ஸ்ரீ பாலசந்திர கனபாடிகள் தனக்கு கிட்டிய அபார பாக்யமாக ஒரு அபூர்வ சம்பவத்தை வியந்து சொல்கிறார். பெரியவாளின் அருகாமையில் இவர் தன் இளம் வயதில் சதாராவில் கைங்கர்யம் செய்யும் பாக்யம் பெற்றிருந்தார்.

அன்று ஒரு பிரதோஷ தினம். தானே சர்வேஸ்வரராக இருந்தும் அதை மறைக்கும் எத்தனத்தில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா அந்த மாலைப்பொழுதில் சிவபூஜையை செய்து முடித்திருந்தார். அன்று பூஜையின்போது ருத்ர திரிசதியை சொல்லும் பெரும் பாய்கம் ஸ்ரீ பாலசந்திர கனபாடிகளுக்குக் கிடைத்திருந்தது.

எல்லாம் முடிந்ததம் எல்லோருடைய எதிர்பார்ப்பும் ஒரு பக்தரின் வருகைக்காக காத்திருப்பது போலிருந்தது. நடமாடும் தெய்வமாம் ஸ்ரீ மயாபெரியவா எங்கு சென்றாலும் அங்கெல்லாம் பிரதோஷ வேளையில் அந்த பக்தர் தரிசிக்க வருவது எந்த நிலையிலும் தவறியதில்லை என்று அவர்கள் அறிந்திருந்தனர்.

"அருணாசல சிவா! அருணாசல சிவா!" என்ற சிவநாமம் கணீரென்று ஒலிக்க அப்பக்தர் அருகில் வந்துவிட்டாரென்பது தெரிந்தது. அட்சர ரமண மாலையை ஓங்கிய குரலால் பக்தி மேலிட அந்த பக்தர் கூறிவந்தபோது அங்கிருந்தோர்க்கெல்லாம் தாங்களும் பரமேஸ்வர சன்னதியில் இருப்பதுபோல் ஒரு ஆனந்த உணர்வு மேலிட்டது.



பூர்ண சிரத்தையோடும், திடமான நம்பிக்கையோடும், அசஞ்சல பக்தியோடும், கைலாசத்துக்கே வந்து சாக்ஷாத் சர்வேஸ்வரரையே தரிசிப்பது போலான பேரானந்த அனுபவத்தோடு அந்த பக்தர் ஸ்ரீ மஹாபெரியவாளிடம் வந்து நின்றார்.

விருப்பு, வெறுப்பு என்ற பேதமில்லாத முற்றும் துறந்த முனிவரின் வேடத்திலும் பரமேஸ்வர பெரியவாளுக்கு இந்த பக்தரிடத்தில் மட்டும் ஒரு பிரத்யேகமான அருள் சுரப்பது போலிருந்தது.

"அவருக்கு என்ன வேணும்னு கேளு" தாயினும் மேலான அன்புடன் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா ஸ்ரீ பாலசந்திர கனபாடிகளிடம் அந்த பக்தரை சுட்டிக்காட்டி கேட்கச் சொல்கிறார்.

நாடிவரும் பல லட்சம் பக்தர்களின் லௌகீக கோரிக்கைகளை யாவும் கேட்காமலேயே தீர்த்து வைக்கும் ஈஸ்வரர் இவரிடம் மட்டும் "என்ன வேணும் கேளு" என்று வலிய வரம் அருள இசைவதை என்னவென்பது!

ஒரு பரிபூர்ண நாயன்மாரின் பக்தி இலக்கணங்களோடு திகழ்வதால் அந்த பக்தருக்கு தன் லௌகீக இடர்களுக்காக வேண்டிக் கொள்ளும் சிந்தையே எப்போதும் இருந்ததில்லை.

"அருணாசலேஸ்வரரா ஸ்ரீ பெரியவா தரிசனம் கொடுக்கணும்" இப்படி ஒரு அபூர்வமான வேண்டுதல் அவரை நாயன்மாரென்பதை ஸ்திரமாக்கியது. எப்போதும், "நீலகண்டம், மகாபிரபோ, சதாசிவம், கைலாசபதே, பசுபதே, மகாதேவா" என்று ஸ்ரீ மஹா பெரியவாளை ஈஸ்வர அம்சங்களாகவே காணும் பக்தர் அன்று அருணாசல சிவனாய் காட்சியருள வேண்டி நின்றார்.

உடனே, அத்தெய்வம் ருத்ராக்ஷ மாலைகளை தன் சிரஸில் தரித்துக்கொண்டு இடதுகாலை தரையில் பதித்து வலது திருப்பாதத்தை உயர்த்தி முட்டிக்குமேல் பதித்து திருக்கரத்தில் தண்டம் ஏந்திய திருக்கோலத்தோடு க்ஷண நேரமல்ல, சுமார் பதினைந்து நிமிட நேரம் தன் திருமேனியை வருத்திக்கொண்டு பேரானந்த அரிய காட்சியை அருளினார்.

அந்த பக்த நாயன்மாரால் தனக்கும் அங்கிருந்தோருக்கும் அன்றைய தினம் அந்த திவ்ய தரிசனம் அபூர்வ அனுக்ரஹமாக கிடைத்ததென்று கனபாடிகள் உருகிக் கூறினார்.

“போறுமான்னு அவரைக் கேளு” தன் அபார கருணையை கொட்டி கேட்பதுபோல் ஸ்ரீ மஹாபெரியாவ கேட்க, இப்படி ஒரு அனுக்ரஹப் பொழிவால் திக்குமுக்காடி அதில் திளைத்துக் கொண்டிருந்த பக்தர் தன் கன்னத்தில் படபடவென்று போட்டுக் கொண்டு “அருணாசலம் அருணாசலம்” என்று உணர்ச்சி மேலிட ஆனந்தமுற்றார்.

❖ ❖ ❖

## 34. நாட்டிய நடராஜ பெரியவா!

**டா**க்டர் பத்மா சுப்ரமணியன் எனும் நடனக் கலைஞர் ஸ்ரீ மஹாபெரியவாளின் பக்தை. ஸ்ரீபெரியவாளெனும் தெய்வத்தின் அருளை அதிகமாக அனுபவித்த அனுக்ரஹம் பெற்றவர்.

ஸ்ரீ மஹாபெரியவாளின் ஆசியோடு ‘ஜெய ஜெய சங்கர’ என்ற இசை நடன நிகழ்ச்சியை பக்தியோடு அரங்கேற்றினார். இவருடைய மன்னி ஸ்ரீமதி சியாமளா இசைக்க இவர் நடனமாடிக் கொண்டிருந்தார்.

நடன மேடையில் காட்சியருள ஒரு நடராஜ விக்ரஹம் வைக்கப்பட்டிருந்தது.

இவர் பக்தியோடு இசைக்கேற்ப ஆடியபோது இவர் கவனத்தை அந்த நடராஜ சிலை ஈர்த்தது. பிரமையோ என்று இவர் ஆடியபடியே உற்றுநோக்க அங்கே ஸ்ரீ மஹாபெரியவா வீற்று நடனத்தை ரசிப்பதுபோல் பெரியவாளின் திருஉரு அந்த நடராஜ மூர்த்தியில் தரிசனம் தந்தது.

இதைக் கண்ட களிப்பில் நடனம் கலைகட்டி முடிந்தது.

வீட்டிற்கு சென்றதும் தன் அண்ணா, மன்னியிடம் இந்த அபூர்வ அனுபவத்தைச் சொல்லி மெய்சிலிர்த்தாள்.

“தெய்வ அனுக்ரஹம்தான்... யார்கிட்டேயும் சொல்லாதே நம்ப மாட்டா... அவா அவாளுக்கு ஏற்படற உணர்வு” என்று அவர்கள் சொல்ல இதை வேறு யாரிடமும் இவர் சொல்ல வில்லை.

பிறகு பெல்காமில் அருளிக் கொண்டிருந்த ஸ்ரீ பெரியவாளை அண்ணா, மன்னியோடு தரிசிக்க சென்றார்.



இவரது அண்ணா பெரியவாளிடம் ஜெய ஜெய சங்கர அரங்கேறியதை சொல்லிவிட்டு

“பெரியவா பாக்கணும்னு பத்மா ஆசை படறா... சியாமளா பாடி பெரியவா முன்னாலே பத்மா ஆடிகாட்டணுமாம்” என்றார்.

ஸ்ரீபெரியவாளெனும் சர்வ வ்யாபியிடமிருந்து சடாலென அப்படி ஒரு பதில் வருமன்று இவர்கள் எதிர்பார்க்கவில்லைதான்.

“நான்தான் பூராவையும் பாத்துட்டேனே” என்று தன் கரத்தை மார்பில் வைத்து அத்தெய்வம் சொல்ல இவர்களுக்கு பெரும் வியப்பு!

அனறு நடன மேடையில் பத்மா அவர்கள் கண்ட காட்சி பிரமையல்ல நிஜம் என்பதை அள்ளவா ஸ்ரீபெரியவா உறுதி செய்தருளியுள்ளார்.

“எப்படிப்பட்டதோர் மிராகிள்” என்று பத்மா சுப்ரமணியன் அந்த மேடையில் இந்த சம்பவத்தை சொல்லி வியந்தார்.

❖ ❖ ❖

## 35. ஏகாம்பரேஸ்வரும் நானே!

**ஸ்ரீ**ஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளை சாக்ஷாத் சர்வேஸ்வரர் என்பதை பூர்ணமாக உணர்ந்து அத்தெய்வத்தின் பக்தியை பரவுவதற்கே புண்ணிய பிறவி எடுத்த நாயன்மாராய் திகழும் பிரம்மஸ்ரீ பிரதோஷ நாயன்மாருக்கு ஸ்ரீ பெரியவா தான் ஈஸ்வர அவதாரமே என்று உறுதி சொன்ன சம்பவங்கள் இது பல உண்டு.

சூட்சமமான உணர்த்திய சம்பவங்களிலிருக்க வெளிப் படையாகவே ஸ்ரீ மஹாபெரியவா இதை காட்டிக் கொண்ட சம்பவம் இது.

ஈஸ்வர சன்னதிக்கு போகும் பாவனையோடுதான் பிரதோஷம் மாமா ஸ்ரீ மஹாபெரியவாளுக்கு வில்வம் சமர்ப்பிக்க எடுத்துச் செல்வார்.

ஒருநாள் வில்வதளங்களை ஏற்றுக்கொண்ட விஸ்வ நாதராய்

“இதையெல்லாம் யார் பறிக்கிறா?” என்று குழந்தையைப் போல் கேட்டார்.

வில்வத்தை தினமும் ஒரு அன்பர் வெளியிலிருந்து பறித்துக் கொண்டு வந்து கொடுப்பதாகவும், மீதியை தானும் தர்மபத்தினியுமாக பறிப்பதாகவும் சொன்ன நாயன்மார் அந்த வில்வதளங்களில் ஒரு பாகத்தை இல்லத்தின் பூஜையறையில் உரைந்தருளும் பெரியவாளின் பூஜைக்கும், மற்றதை தன் மனைவி தொடுத்துக் கொடுக்க ஸ்ரீமடத்தில் அருளும் ஸ்ரீ மஹாபெரியவாளுக்கும் சமர்ப்பிப்பதாக கூறினார்.

இதைப் பார்த்துக் கொண்டு நின்ற ஒரு பக்தை தான் சேர்ப்பிக்கும் வில்வதளங்களை பற்றியும் ஸ்ரீபெரியவாளிடம் கூற ஆசைப்பட்டவளாய் “பெரியவா நான் பறிக்கிற வில்வத்தை ஒரு பாதி ஏகாம்பரேஸ்வரருக்கும், மறு பாகத்தை ஸ்ரீ பெரியவாளுக்கும் கொண்டு வரேன்” என்று பக்தியோடு பரவசப்பட்டாள்.

எல்லாமுமாகிய தெய்வமாய் நின்ற ஸ்ரீபெரியவாளிடமிருந்து அந்த திருவாக்கு அப்போது வெளிப்படும் என்பதை யாரும் எதிர்பார்த்திருக்க இயலாது.

“எப்படி இருந்தால் என்ன? எல்லா வில்வமும் என் தலையிலதானே விழறது” என்று ஒரு ஒப்புதல் திருவாக்கு மூலம் ஸ்ரீபெரியவாளை ஈஸ்வரராக உறுதிசெய்து காட்டியது.

❖ ❖ ❖

## 36. அற்புத ஆனந்த நடன பெரியவா!

**ஸ்ரீ** சந்திரமௌலி ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் பூர்ணாஸ்ரம சகோதரரின் பேரனாகும்.

1975 இல் இவர் ஆழ்வார் திருநகரில் வசித்தபோது அங்கே ஒரு பஜனைக் குழுவில் நாமசங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தார். ஸ்ரீ மஹாபெரியவாளின் பக்தரான இவர் அடிக்கடி தரிசனத்துக்கு போவதுண்டு.

இந்நிலையில் இவருடைய பஜனை கோஷ்டி அன்பர்கள் ஸ்ரீபெரியவா தரிசனத்துக்கு கூட்டிச் செல்லுமாறு வேண்டிக் கொண்டதால் அவர்களோடு அந்த அதிகாலையில் கிளம்பி காஞ்சி சென்றார்.

அந்த மார்கழி மாத விடியற்காலை நாலரை மணிக்கு ஸ்ரீ பெரியவா வாசம் செய்துக் கொண்டிருந்த சிவாஸ்தானத்தை



அடைந்தார். ஸ்ரீ பெரியவா உள்ளே அந்த காலை இருட்டில் அமர்ந்திருக்க இவர் கோஷ்டியோடு பஜனை பாடல்களை பாட ஆரம்பித்தார்.

சில பாடல்கள் கடந்தபோது இவரது பஜனை கோஷ்டிக்கு அன்று ஒரு அற்புதமான அனுக்ரஹம் காத்திருந்தது.

உள்ளே அமர்ந்திருந்த ஆடியபாதம் நின்றாடிய பாதமாகி அங்கே அந்த மெல்லிய விளக்கு வெளிச்சத்தில் உடுத்திய காவி வஸ்திரம் புலித்தோலானதுபோல் அந்த திருஉருவம் தில்லை நாதனாகி நடனம் புரிந்தது.

பக்தி பெருக தாங்கள் காண்பது நிஜமா இல்லை பிரமையோ என்பதுபோல் சென்றிருந்த அத்தனை பாக்யசாலிகளுக்கும் பார்க்க பார்க்க பரவசமூட்டிய பரமேஸ்வரரின் நடனம் சுமார் அரை மணிநேரம் தொடர்ந்து களிப்பூட்டியது.

தங்கள் ஜன்மாவில் இப்படி ஒரு பெரும் பேறு கிடைத்திட்டதில் அனைவருக்கும் ஆனந்தம்.

“சொன்னா நம்பமாட்டேள்” என்று இந்த சம்பவத்தைப் பற்றி ஸ்ரீ சந்திரமௌலி அவர்கள் அதிசயித்து சொல்லிவிட்டு “அதன்பின் இப்போது யாரோ அதே போல் ஸ்ரீபெரியவா நடனமாடுவதை சித்திரமாக வரைந்துள்ளார்கள்” என்று உண்மையில் அப்படி ஒரு விச்சித்திரத்தை ஸ்ரீபெரியவா அருளியதை சிலாகித்து பேட்டி அளித்துள்ளார் (நன்றி: பெரியவா புராணம்).

இதேபோல கிழக்கு தாம்பரத்தை சேர்ந்த ஒரு பக்தை தேனம்பாக்கத்தில் ஒருமுறை ஸ்ரீபெரியவாளை தரிசிக்க சென்றபோது பக்தர்கள் பரபரப்போடு ‘ஹரஹர சங்கர ஜய ஜய சங்கர’ என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு ஓடினராம். பக்தையும் கணவரோடு அங்கு நோக்கியபோது கையில் தண்டத்தை ஏந்தி தன் கண்மலர்களை மூடியபடி பரமானந்தமாக ஸ்ரீபெரியவா ஆனந்த நடராஜ மூர்த்தியாய் ஒரு அற்புத நடனம் ஆடியபடி தரிசனம் தந்துள்ளார்.

இப்படி அன்று தரிசித்த பக்தர்களுக்கு ஒரு பேரருள்!

❖ ❖ ❖

# 37. நினைவில் வைத்தாலே முக்தி தரும் மாமுனிவர்!

**(சேலம் ஸ்ரீரவிசந்திரன் அவர்களின் உபன்யாசத்தில் கேட்டது)**

**ஸ்ரீ** மஹாபெரியவா மிகவும் பலகீனமாக அந்த சாய்ந்த சிம்மாசனத்தில் படுத்தபடி தரிசனம் நல்கிய காலகட்டமது. கைங்கர்யம் செய்யும் ஒரு அன்பர் தன் பேதமையால் ஸ்ரீபெரியவாளுக்கு உடல்நிலை தேறவேண்டுமென பிரார்த்தித்து திருவண்ணாமலையில் பௌர்ணமி கிரி பிரதட்சணம் செய்ய அவல் கொண்டார்.

ஸ்ரீ பெரியவாளிடம் தயங்கியபடி வந்து நின்றார்.

"பெரியவா திருவண்ணாமலை போகணும்" என்று உத்தரவிற்கு வேண்டினார்.

"ஏன்?" என்று பெரியவா கேட்டார்.

"நாளைக்கு பௌர்ணமி. கிரி, பிரதட்சணம் பண்ணினா நல்லதுன்னு சொல்றா" என்றார் அன்பர்.

அப்போது அந்த தெய்வம் அபூர்வமாக எப்போதாவது தான் யார் என்பதான சொரூபத்தை வெளிப்படுத்தியது போல

"டேய்! நான்தான்டா அருணாஜலேஸ்வரர்... என்னை பிரதட்சணம் செய்" என்று திகைக்க வைத்தார்.

அந்த அன்பர் ஸ்தம்பித்து நிற்க அங்கிருந்த பூர்வாஸ்ரம ஸ்ரீமடம் பாலு சுவாமிகளும், ஸ்ரீகண்டன் சுவாமிகளும்

"பொரியவாளே சொல்லிட்டா... பிரதட்சணம் செய்யலாம்" என்று அன்பரையும் கூப்பிட்டு ஸ்ரீபெரியவாளையே பதினோடு வலம் வந்தனராம்.

அப்போது யதேச்சையாக பிரதோஷ சிவநாயன்மாரின் தர்மபத்தியான மாதுஸ்ரீ வேதாம்பாளும் அங்கு வர, உடனே மாமி ஆரத்தி காண்பித்து தானும் அந்த நடமாடும் அண்ணாமலையை பிரட்சணம் செய்யும் பாக்யமடைந்தாள்.

நினைத்தாலே முக்கி தரும் திருவண்ணாமலை!

நினைவில் வைத்தாலே முக்தி தரும் மாமுனிவர்!

❖ ❖ ❖



# 38. தில்லை நடராஜராய் திவ்ய தரிசனம்

**ஸ்ரீ**நிவாசன் எனும் வைணவ பக்தர் 'மஹானின் மகிமையும் கருணை நிழல்களும்' என்ற தலைப்பில் தான் ஸ்ரீ மஹா பெரியவாளை தரிசித்தபோது கண்ட அரிய சம்பவங்களை புத்தகமாக எழுதியுள்ளார்.

பிரபல வங்கியில் அதிகாரியாக பணிபுரிந்தபோது காஞ்சி மகானால் ஈர்க்கப்பட்ட வைணவராய் ஸ்ரீபெரியவா உத்தரவிட பல திருப்பணிகளை செய்யும் பாக்யம் பெற்றிருந்தார்.

அவர் கண்ட ஒரு ஸ்ரீ பெரிவாளின் அபூர்வ தரிசனம் இது.

மேட்டூர் சீதாராம பாகவதர் ஸ்ரீமடத்திலேயே தங்கியிருந்து பூஜையின்போது நாமாவளிகளையும் கீர்த்தனைகளையும் பாடிக் கொண்டிருப்பாராம். விடியற்காலை விஸ்வரூப தரிசனத்தின்போது ஸ்ரீநிவாசன் அவர்களும் இந்த பாகவதரோடு தோடகாஷ்டகம் சொல்லி நமஸ்கரிப்பதுண்டு.

ஒரு வருடம் மார்கழி மாதம் தொடங்குவதற்கு முன் சில நாட்கள் இருக்கும்போது ஸ்ரீ மஹாபெரியவா இவரிடம் விடியற்காலை ஒன்றில்

"உனக்கு எல்லா பாட்டும் நாமாவளியும் தெரியுமோ?' என்றார்.

பாகவதர் "சம்பரதாய பஜனை மொத்த பாடலும் அஷ்டபதி அத்தனையும் தெரியும் பெரியவா" என்றார்.

"புரந்தரதாசரின் ஒரு கீர்த்தனை பாடு" என்றார்.

இவரும் பாட ஆரம்பித்தார்.

அதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த ஈஸ்வரராம் ஸ்ரீபெரியவா சடாலென்று எழுந்து தில்லை அம்பல நடராஜரைப் போல ஒரு திருபாதத்தை மடித்து நின்று நடனமே ஆட தொடங்கி விட்டாராம்.

அந்த கண் கொள்ளா காட்சியை தரிசிக்கும் பெரும் பாக்யம் தனக்கு கிட்டியதை ஸ்ரீநிவாசன் அவர்கள் பக்தியுடன் பதிவிட்டுள்ளார்.

❖ ❖ ❖

# 39. ஸ்ரீ அபிராமி மணாளனான பெரியவா!

**(நன்றி : நூற்றாண்டு மலர்)**

**ச**ந்திரசேகரன் என்ற பக்தர் தன் நண்பர் கிருஷ்ணய்யருடன் திருகடவூர் சென்றார். அங்கு அமிர்தகடேஸ்வரருக்கு அபிஷேகம் நடந்துக் கொண்டிருந்தது.

அந்த லிங்க அபிஷேகத்தை பக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்த லிங்கத்தின்மேல் ஒரு தோன்றி பூர்ண சந்திர பிரகாசமாக அபயகரத்துடன் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதியாம் மஹாபெரியவா தோன்றினார்.

இது பிரம்மையல்ல உண்மையே என்பது இப்படி ஒரு அரிய அபூர்வ தரிசனம். நண்பரில் ஒருவருக்கு மட்டுமே கிடைக்க வில்லை. மெய்சிலிர்த்து போய் சந்திரசேகரன் பார்த்துக் கொண்டிருக்க "ஸ்ரீ பெரியவா தரிசனம் கொடுக்கறா தெரியறதா?" என்று நண்பர் கிருஷ்ணய்யர் முதுகில் தட்டி கேட்டு திகைப்பை இரட்டிப்பாக்கினார்.

இப்படி ஒரே சமயம் இரு பக்தர்களுக்கும் தரிசனம் கொடுத்தன் மூலம் தான் வேறு யாருமல்ல; அமிர்தகடேஸ்வர ஈஸ்வரரே என்ற தெய்வ ரகசியத்தை பெரியவா வெளிக்கட்டியது போலானது.

❖ ❖ ❖

# 40. ஆனந்த நடன அரிய தரிசனம்

**ஸ்ரீ**ரவி என்பவர் குழந்தைகளுக்கு தோத்திர பாடல்களை சொல்லிக் கொடுக்கும் தொண்டினை செய்துக் கொண்டிருக்கும் அன்பர். ஸ்ரீபெரியவா பக்தரான இவர் ஒருமுறை தன்னிடம் படிக்கும் இருபத்தைந்து சிறுவர், சிறுமிகளை அழைத்துக் கொண்டு ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசிக்க சென்றார்.

காஞ்சி சிவஸ்தானத்தில் அப்போது அருளிக் கொண்டிருந்த ஸ்ரீபெரியவாளை தரிசிக்க பக்தர்கள் கூட்டம் காத்திருந்தது. இவர் குழந்தைகளுடன் வந்து நிற்பதை பார்த்துவிட்டு ஒரு ஆசாமி சற்று



ஏளனமாக இவரிடம், "நீங்க யாரு... ஓகோ பெரியவாளை பார்க்கலாம்னு வந்திருக்கேளோ.. பசங்களையும் அழைச்சுட்டு வந்திருக்கேள்... இங்கே அதோ அவர் மகாராஷ்டாலேர்ந்து வந்திருக்கார். பக்கத்தில் டில்லிகாரர் இவர் எல்லாம் ரெண்டு மூணு நாளாக வெய்ட் பண்றா பெரியவா தரிசனமே தரலே... காஷ்டமௌனம்னு வேற சொல்றா. நீங்களும் வெய்ட் பண்ணுங்கோ" என்று கிண்டலாக பேசினார்.

இவரோ "எதற்கு இப்படி பேசறேங்க... இதோ நான் கூட்டிண்டு வந்திருக்கிற பசங்களுக்காகவாவது பெரியவா தரிசனம் கொடுப்பார்னு எனக்கு நம்பிக்கை இருக்கு... பெரியவாளை தரிசனம் பண்ணி வைக்கறேன்று இந்த குழந்தைகளோட பெத்தவாகிட்டே சொல்லி அழைச்சுண்டு வந்திருக்கேன்... யார் கேட்டாலும் கேக்காட்டாலும் பரவாயில்லே... இதோ அந்த மூலையிலே உட்கார்ந்து பாடப் போறேன் பெரியவா இந்த பசங்களுக்காவது தரிசனம் கொடுக்க வருவா பாருங்கோ" என்று தனக்கு தோன்றியதை சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

பஜனையை ஆரம்பிப்பதற்கு முன் ஸ்ரீபெரியவாளெனும் தெய்வம் இருந்த சன்னதியை வலம்வர தொடங்கினார். இவர் பின்னால் ரயில் போல் குழந்தைகளும் வலம் வந்தனர்.

ஒருமுறை வலம் வந்தபோது ஒருவர் வந்து "இங்கே ரவிங்கறது யாரு? பெரியவா கூட்டிண்டு வரச் சொன்னா?" என்றார். உடனே இவரிடம் பயிலும் ஒரு கன்னட சிறுமி,

"Sir. His Holiness calling you" என்று அந்த சிறுமி சொல்ல, இவர் "No. no. Ravi is a common name. Periyava should have mentioned any other popular person having name Ravi" என்று கூறிவிட்டு அடுத்த சுற்றுக்காக அகன்றுவிட்டார்.

அடுத்த வலம் வந்தபோதும் யாரோ இப்படி கூப்பிட தன்னை கூப்பிட வாய்ப்பே இல்லை பெரியவாளுக்கு ரவி என்பது என் பெயரென்பதும் தெரியாதே என்று அடுத்த வலம் தொடர்ந்தார்.

மூன்றாவது சுற்றில்தான் ஸ்ரீபெரியவா குறிப்பிட்டு அழைப்பது இவரைத்தான் என்பது "யாரோ குழந்தைகளோடு பஜனை பாடணும்னு வந்திருக்காராமே அந்த ரவி நீங்கதானே" என்றபோதுதான் உறுதியாயிற்று.

பெரும் ஆச்சர்யத்தோடு ஸ்ரீபெரியவாளின் பக்தர்கள் கூட்டமாக நின்ற கிணற்றை நோக்கி சென்றார். குழந்தைகளும் பின்னால் வர அவர் கிணற்றருகே சென்றபோது கிணற்றை வளைத்து பக்தர்கள் நிற்க ஒவ்வொருவரும் தங்கள் குறை, கோரிக்கைகளை கூறுவது காதில் விழுந்ததேயன்றி, அவர்கள் மறைத்து நிற்கும் மகானை பார்க்க இயலவில்லை.

அப்போதுதான் அந்த பக்த கூட்டம் இப்படியும் அப்படியுமாக இரண்டு பக்கமும் விலக, அப்படி விலகும்படி சொன்ன ஸ்ரீபெரியவா காட்சி அளித்தார்.

இவருக்கோ ஒரு தயக்கம். ஸ்ரீபெரியவா தூரத்தில் நின்ற இவரை “வா” என்று கூப்பிட்டபோது அளவில்லா ஆனந்தமாக அருகே சென்றார்.

உடனே அத்தெய்வம் அங்கிருந்த முக்கிய பிரமுகர்களிடம்,

“இவர் பாடுவார் கேளுங்க” என இவர் முன்பு ‘இந்த மூலை’ என்று அந்த ஆசாமியிடம் குறிப்பிட்ட அதே மூலையை சுட்டிக்காட்டி “அங்கே உட்கார்ந்து பாடு” என்றவுடன் இவருக்கு ஆச்சர்யமும் மெய்சிலிர்ப்புமாக ஒரு அனுபவம்.

எல்லாமும் அறிந்த தெய்வம் என்பதை இப்படி காட்டிய ஸ்ரீபெரியவாளின் கருணையை நினைத்து இவர் அங்கே உட்கார்ந்து குழந்தைகளோடு பாடலானார்.

இவர் பாடிக் கொண்டே இருக்க, ஒரு குறிப்பிட்ட ராகத்தை பாடியபோதுதான் ஆனந்த நடராஜ மூர்த்தி என்பதை இவருக்கு காட்டுவதுபோல் ஸ்ரீ மஹாபெரியவா ஒரு அபூர்வமான தரிசனம் நல்கினார்.

அந்த பாடலை ஆரம்பித்து முடியும் வரை ஸ்ரீபெரியவா எழுந்து நின்று அனந்த நடனம் ஆடிய காட்சி அங்கிருந்த அனைத்து பக்தர்களுக்கும் யாருக்கும் கிட்டாத அரிய பாக்யமாக அருளப்பட்டது.

அதோடு இல்லாமல் இப்படி ஒரு பெரும் பேற்றினை பெறும் வாய்ப்பாக அமைந்த ஸ்ரீரவிக்கு ஸ்ரீபெரியவா இன்னும் கொஞ்சம் விசேஷமான தரிசனம் தந்தார்.

நடனமாடிய சிதம்பர பெரியவாளின் திருமுகம் பிரகாசமாக அதன் பின்னால் தெய்வ சித்திரங்களில் நாம் காணும் ஒளிவட்டமும் ஸ்ரீரவிக்கு காட்சி தந்தது.



சாக்ஷாத் ஸ்ரீநடராஜ மூர்த்தியாய் தரிசனம் தந்த ஸ்ரீமஹாபெரியவாளை மெய்சிலிர்ப்போடு பார்த்த ரவி அவர்களுக்கு உணர்ச்சிப் பெருக்கில் ஆனந்த கண்ணீர் வடிந்தது.

‘தில்லை சிதம்பரநாதனும் நானே’ என்பதாக ஸ்ரீரவி அவர்களுக்கு ஸ்ரீமஹாபெரியவா அனுக்ரஹித்த அபூர்வ சம்பவம் இது.

❖ ❖ ❖

## 41. சேஷாத்ரி சுவாமிகளும் நீரே! ஸ்ரீ ரமண பகவானும் நீரே!

**ஸ்ரீ** கௌரி சங்கர் சொல்லும் அற்புத சம்பவம் இது. திருவண்ணாமலையை சார்ந்த இவரது குடும்பம் பகவான் ரமணரிடமும், ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளிடமும் பக்தி கொண்டிருப்பது இயல்பே.

ஸ்ரீகௌரி சங்கர் கல்கத்தாவில் வேலை பார்த்தபோது அவரது தம்பி பூனாவில் மிக மோசமாக பாதிக்கப்பட்டு கோமா நிலையில் இருந்தார். தவறான ஊசி போட்டதால் உண்டான பாதிப்பு மூளையை தாக்கி இருந்தது. கௌரிசங்கர் பூனா வந்து தம்பியைப்பற்றி தலைமை மருத்துவரிடம் விசாரித்தபோது பத்தாயிரத்தில் ஒருத்தர்தான் இப்படிப்பட்ட பாதிப்பிலிருந்து விடுபட வாய்ப்பு என்றும் அதனால் தெய்வசக்தி ஒன்றே காப்பாற்ற வேண்டுமென்றும் சொல்லிவிட்டார்.

அப்போது அந்த தெய்வ சக்தியாம் ஸ்ரீபெரியவா காஞ்சியில் அருள ஸ்ரீகௌரிசங்கர் கல்கத்தாவிற்கு சென்று தன் தாயாரையும் அழைத்துக் கொண்டு காஞ்சி செல்ல நினைத்தார்.

“நான் எங்கேயும் வரலைடா. என்னை திருவண்ணா மலைக்கு கொண்டு விட்டுடு... பகவானையும், ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளையும் தியானம் பண்ணி வேண்டிக்கறேன்” என்று அம்மா அந்த மகான்களின் மேலிருந்த பக்தி மேலிட சொல்லி விட்டாள்.

“நான் காஞ்சி பெரியவா கிட்டே வேண்டிக்கலாம்னு கிளம்பிட்டேன்... முதல்ல பெரியவாளை தரிசனம் பண்ணிட்டு

அப்புறம் உன்னை திருவண்ணாமலை கொண்டு விடறேன்" என்று அன்னையோடு காஞ்சி வந்தார்.

அப்போது ஓரிக்கையில் ஸ்ரீபெரியவா திருமழையிசை ஆழ்வாரின் விழா ஒன்றுக்காக தங்கியிருந்தார். இவர் ஸ்ரீபெரியவாளிடம் நெருங்க இவருடை தாயார் ஒரு மரத்தடி அருகே வந்ததும்

"நான் இங்கேயே இருக்கேன்... நீ போய் பெரியவாளை பாத்துட்டு வா" என்று பகவான ரமணரிடமும், சேஷாத்ரி சுவாமிகளிடமுமிருந்த உறுதியான பக்தியால் வேறொரு மகானை ஏற்கும் மனநிலை இல்லாமல் கூறிவிட்டாள்.

"என்னம்மா இந்த தெய்வத்தை தரிசிக்க முடியாதான்னு எல்லாரும் ஏங்கிண்டு வர்றா... இப்போ கூட்டமும் அத்தனை இல்லே... அதோ தரிசனம் கொடுத்துண்டிருக்கா... நீ பயித்தய மாட்டம் இப்படி பேசறயே" என்று கௌரிசங்கர் கோபத்துடன கேட்டார்.

"நீ வீணா விதண்டாவாதமெல்லாம் பண்ணாதே. நான் இங்கேயே உட்கார்ந்துக்கறேன் நீ சட்டுன்னு பாத்துட்டு வா" உறுதியாக தன் விருப்பமின்மையை காட்டினாள்.

ஸ்ரீகௌரி சங்கர் மேலும் வற்புறுத்த விரும்பாமல் ஸ்ரீபெரியவாளிடம் சென்று வணங்கி தம்பியின் நிலை சொல்லி வேண்டினார். ஸ்ரீபெரியவாளும் கருணையோடு கேட்டு தன் திருக்கரங்களால் குங்குமத்தை அள்ளி கொடுத்து அதை உடனே பூனா போய் சேரும்படி அனுப்பி வைக்கச் சொன்னார். அந்த தலைமை மருத்துவரே 'மிராகிள்' என வியக்கும் வண்ணம் அனுபவம் என்றால் இங்கே அத்தெய்வம் ஸ்ரீ கௌரி சங்கரின் தாயாரை ஆட்கொள்ள அனுக்ரஹித்த விதம் நெகிழ்ச்சி யூட்டுவதாய் அமைகின்றது.

தம்பிக்காக பிரசாதம் கொடுத்துவிட்டு "உன்னோட யார் வந்திருக்கா?" என்று பெரியவா எல்லாமும் நான் அறிவேன் என்பதுபோல் கௌரிசங்கரிடம் கேட்டார்.

இவர் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிக்கும்போதே, அந்த திரிகாஞானி தன் காவி வஸ்திரத்தை அவிழ்த்தார். கௌபீனம் மட்டுமே கட்டிய திருக்கோலத்தில் அவிழ்த்த வஸ்திரத்தை கொசுவி தன் தோளில் போட்டுக் கொண்டார்.



அங்கிருந்த பக்தர்களுக்கு ஸ்ரீபெரியவாளின் இந்த லீலைக்கு அர்த்தம் புரியவில்லை. தெய்வம் லீலையை தொடர்ந்தது.

மடமடவென கௌரிசங்கரின் தாயார் இருக்கும் இடத்திற்கு பெரியவா போய் நின்றார். அந்த மடி செய்துக் கொண்டிருந்த மூதாட்டி உடனே எழுந்து பரபரப்புடனும் பக்தியுடனும் ஸ்ரீபெரியவாளை வணங்கி நின்றாள்.

அந்த அன்னை தன்னை அறியாமல் கண்ணில் நீர் சுரந்து அழலானார். க்ஷணநேரத்தில் ஆட்கொண்டுவிட்ட அத்தெய்வமாய் ஸ்ரீபெரியவா அந்த மூதாட்டியிடம்

"உன் மாதாமகர் பூர்வீகம் என்ன?" என்றார்.

தான் பெருமையாக நினைக்கும் மாதா வழி பூர்வீகமான திருவண்ணாமலை பற்றி கேட்டதும் அந்த அன்னைக்கு ஆனந்தம்.

"திருவண்ணாமலை" என்றாள்.

"சேஷாத்ரி சுவாமிகளை நீ பார்த்திருக்கயோ?" என்று பெரியவா கேட்க

"கேள்விபட்டிருக்கேன். என் பாட்டி அம்மாவெல்லாம் சொல்லுவா... திடீர்னு ஆத்துக்கு வருவாராம்... சாதம் கொண்டான்னு கேட்பாராம் கொதிக்க கொதிக்க இருந்தாலும் அப்படியே கையிலே எடுத்து பாதி சாப்டு பாதி கீழே சிந்துவாராம்... அப்படி சிந்தினதையே பிரசாதமாக அங்கே எல்லாரும் எடுத்துண்டு போவாலாம்" என்று அன்னை கொஞ்சம் சுவதீனமாகவே ஸ்ரீபெரியவாளிடம் பேசினாள்.

அடுத்து அந்த அன்னைக்கு யாரிடம் பக்தி?

"உனக்கு ரமண பகவானை தெரியுமா பாத்திருக்கயோ அட்சர ரமணமாலை சொல்லத் தெரியுமோ" என்று இதையும் நான் அறிவேன் என்பதுபோல் ஸ்ரீபெரியவா கேட்டார்.

"ஆமாம் சொல்லுவேன்... சின்ன வயசுல பள்ளிக்கூடம் விட்டவுடனே ரமணாஸ்ரமம் போய் பகவானை தரிசனம் செஞ்சுட்டு எல்லோரும் அட்சரரமணமாலை பாராயணம் செஞ்சுட்டு வருவோம். இப்பவும் கார்த்தாலே சொல்லுவேன்" என்று அந்த தாயார் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவளாய் தன்

இஷ்ட குருமான்களைப் பற்றி ஆர்வமாக கூறி நின்றாள். இப்படி மிகவும் சுவாதீனமான அந்த தாயார் ஸ்ரீமஹாபெரியவாளிடம் பேசிக் கொண்டிருந்த போது அத்தெய்வம் தான் புரிந்துள்ள அனுக்ரஹத்தை அந்த தாயார் புரிந்துகொண்டுவிடாமல் மாயை செய்திருந்தார் போலும்.

இப்படி அரியதோர் மகான் இத்தனை இறங்கி வந்து தன் தாயாரிடம் அளவளாவி விட்டு அகன்றதை பிரம்பிப்போடு பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீ கௌரிசங்கர் அவர்களுக்கும் அப்போது தெரியாத மகிமை பின்புதான் ஸ்புரித்தது.

"ஏன்டா... இப்போ வந்தது பெரியவாதானா? உடம்பெல்லாம் தகதகன்னு மின்னித்தேடா... அப்படியே ஸ்ரீரமண பகவானே வந்து கௌபீனத்தோடு பளபளன்னு மேனியோடு பார்த்த போலத்தானே எனக்கு தோணித்து, பெரியவா பெரியவான்னு சொன்னயே... சாக்ஷாத் ரமணபகவானாட்டம்னா இருக்கார்" என்று தாயார் அனுபவித்து கூறியபோது தான் ஸ்ரீபெரியவாளின் லீலை புரிய தொடங்கியது.

ஸ்ரீபெரியவா "உன்னுடன் யாராவது வந்திருக்காளா" என்று கேட்டபோதே அதை யாரென்று நான் அறிவேன். அவளது பக்தி யார்யார்மேல் என்பதையும் நான் அறிவேன் என்பதுபோல் உடனே தன்னை ஸ்ரீரமணபகவானாக மாற்றிக் கொள்ள, அணிந்திருந்த காவி வஸ்திரத்தை கொசுவி துண்டாக தோளில் போட்டுக் கொண்டு ஸ்ரீரமணர் எப்போதும் காட்சிதரும் கௌபீனத்துடன தன் தாயாரருகே வந்ததன் சூட்சமம் ஸ்ரீகௌரிசங்கருக்கு புரியலாயிற்று.

சரி! ஸ்ரீரமணராய் காட்சி அளித்தது மட்டுமா என்றால் அதுதான் இல்லை.

"ஏன்டா இன்னொன்னை கவனிச்சியா பெரியவா முன்னே பின்னே பேசி நான் கேட்டதில்லே... சின்ன வயசிலே சேக்ஷாத்ரி சுவாமி பேசி கேட்ட ஞாபகம்... அதே குரலாட்டமா இருந்ததுடா. எனக்கு அந்த மகானே பேசினது போல இருந்ததுடா" என்று தன் அன்னை ஸ்ரீபெரியவாளின் அடுத்த லீலையையும் சுட்டிக் காட்டினாள்.

ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள்! ஸ்ரீரமண பகவான் இரு மகான்களின் மீதும் பக்தி வைத்த ஒரு மாது தன்னை தரிசிக்க



தயங்கியதை அறிந்திருந்தும் அந்த ஞானி பக்தையை ஈர்த்து தன்னிடம் பக்திகொள செய்வது மிக மிக சாத்யமே.

ஆனால் இந்த மேன்மையான தெய்வம் அந்த பக்தை வணங்கும் இஷ்டதெய்வங்களின் பக்திக்கு பங்கம் சிறிதும் நேராமல் உன் பக்தி மாற வேண்டாம் அந்த மகான்களாக நான் மாறி தரிசனம் நல்குகிறேன் என்று தன் அபார கருணையை சிறிதும் வெளிப்படுத்தா அனுக்ரஹத்தை பொழிந்துள்ளார்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா! சேஷாத்ரி சுவாமிகளும் நீரே! ஸ்ரீரமணபகவானும் நீரே!

❖ ❖ ❖

## 42. 'பரமிரும்மம் ஜகந்நாதம்'

ஷோலாப்பூரில் ஸ்ரீபெரியவாளை தரிசிக்க அந்த யோகீஸ்வரர் வந்தார். கைங்கர்யம் செய்யும் அன்பர்களுக்கு அதுவரை அந்த துறவி ஸ்ரீபெரியவாளை தரிசிக்க வந்ததாக தெரியவில்லை. முற்றிலும் புதியவர்.

வெள்ளை வெளேரென்று வேஷ்டி, விபூதி, ருத்ராஷம் அணிந்து முகத்தில் தாடியுடன் பார்க்கவே தேஜஸாக விளங்கினார்.

ஸ்ரீபெரியவாளிடம் வந்து நின்றவர் "பரப்பிரம்மம், ஜகந்நாதம்" என்று மூன்று முறை பக்தி பெருக்கோடு கூறிவிட்டு வந்தனம் செய்தார்.

முகமெல்லாம் பேரானந்தம் மிளிர ஸ்ரீ மஹாபெரியவாளை சிறிது நேரம் அனுபவித்து பார்த்தக் கொண்டிருந்தார்.

பின் "நான் வந்த காரியம் நிறைவேறியாகிவிட்டது கிளம்புகிறேன்" என்று சூட்சமமாக தெரிவித்துவிட்டு அகன்றார். வந்தவர் யாரென்று தெரியவில்லை. போய் விசாரிக்க விழைந்தவர்களை "அவரிடம் கேட்க வேண்டாம்" என்று பெரியவா தடுத்துவிட்டார்.

அவருக்கு அந்த 'பரபிரம்மம் ஜகன்நாதர்' எப்படி காட்சி தந்தாரோ என்பது தெய்வ ரகசியம்.

❖ ❖ ❖

# 43. ஜோதி பிழம்பாய் ஜொலித்திட்ட பெரியவா!

**தி**ரு டி.ஆர். சுப்ரமணியன் சதாராவில் கூப்பர் இன்ஜினியரிங் கம்பெனியில் வேலை செய்துக் கொண்டிருந்தார்.

திரு சுப்ரமணியனும், சுந்தரம் என்பவரும் உள்ளூரின் மராட்டி குடும்பத்தின் சிலருடன் ஸ்ரீ மஹாபெரியவாளை சதாராவிற்கு அழைக்க சென்றார்.

இவர்கள் அங்கே போகும்போது மதியம் 2.30 மணி வெய்யில் கடுமையாக இருந்தது. ஸ்ரீ பெரியவா ஒரு முனுசிபல் பள்ளிக்கூடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாக அறிந்து அங்கு சென்றனர்.

இவர்கள் பள்ளிக்கூடத்தை நெருங்கியபோது இவர்களின் காலடி ஓசையைக் கேட்டுவிட்டு ஸ்ரீபெரியவா இவர்களை நோக்கி திரும்பினார்.

அப்போது திரு சுப்ரமணியன் அவர்களுக்கு ஸ்ரீ பெரியவாளின் இதய பகுதியில் ஒரு கால்பந்து அளவிற்கு செக்ச் சிவப்பாக ஒரு ஒளிவட்டம் வெளிவருவது போலிருந்தது. வேறு ஒன்றுமே கண்ணில் படாமல் அந்த ஒளிவட்டம் கண்ணை கூசும்படி பிரகாசமாயிருந்தது மிகவும் வியந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தவர் அதன் தாக்கத்தை எதிர்கொள்ள முடியாமல் உடனே சாஷ்டாங்கமாக பெரியவாளை நமஸ்கரித்தார்.

பின் சுதாரித்து எழுந்தார்.

இப்போது மகானை தரிசித்தபோது அந்த ஒளி ஸ்ரீ பெரியவாளின் திருமேனி எங்கும் வியாபித்த அந்த இடமே ஒரு ஜோதி பிஷம்பாகி அதில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா ஜொலிப்பதை இவர் தரிசிக்க முடிந்தது.

கூட வந்த யாரும் சாதாரண நிலையில் தரிசித்துக் கொண்டிருக்க தனக்கு மட்டும் ஸ்ரீபெரியவா இப்படிப்பட்டதோர் ஜோதி ஸ்ரூபமாய் காட்சி தந்ததை அறிந்து மெய்சிலிர்த்தார்.

இதனால் இவர் கொண்டுபோன பூர்ணகும்பம் இத்யாதிகளை சமர்ப்பிக்கக்கூட மறந்த நிலையில் நிற்க கூட வந்தவர்கள் இவரிடம் “என்ன ஆச்சு உங்களுக்கு” என்று இவரை



பயந்து உலுக்கியபோதுதான் இவருக்கு அந்த தாக்கத்திலிருந்து விடுபட முடிந்தது.

தனக்கு மட்டும் தெய்வம் நல்கிய ஜோதிமய காட்சி தன் தந்தை வாரனாசி டி.வி. ராமசந்திர தீட்சதர் ஸ்ரீமடத்திற்கு செய்த கைங்கர்திற்காக ஸ்ரீபெரியவா தந்த வரமாக நினைத்தார்.

சாதாராவில் அமைந்த சங்கர மடத்தை சீரமைக்கும் பணியிலும் ஈடுபட ஸ்ரீபெரியவா இவருக்கு பாக்யமருளினார்.

❖ ❖ ❖

# 44. I am living GOD

**ஸ்ரீ** மஹாபெரியவாளிடம் அந்த வைணவ அன்பருக்கு அபாரபக்தி. ஸ்ரீ சீதாராம சுவாமிகள் என்று அழைக்கப்படும் இந்த பக்தர் தன் 27 வயதில் செய்துக் கொண்டிருந்த வேலையையும் விட்டுவிட்டு ஸ்ரீ மஹாபெரியவாளிடம் ஆத்ம சமர்பணம் என்று ஆத்மாவையே ஒப்படைக்கும் ஒரு அதீத பக்தியுடன் சரணடைந்தவர்.

ஒரு மஞ்சள் தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம் காணிக்கையாக வைத்து தேனம்பாக்கத்தில் அருளிய தெய்வத்திடம்

“பெரியவா நான் ஆத்ம சமர்பணம் பண்ணிகறேன்” என்று சேவித்தார். அப்போது ஸ்ரீ மஹாபெரியவாளிடமிரந்து வந்த திருவாக்கு இதுவரை யாரும் கேட்டிராத அபூர்வமாக அமைந்தது.

“You believe it or not I am living God. I have taken my abode with you. அந்த மதுரை மீனாட்சி கோயில்லே திருவிளையாடல் செஞ்ச சித்தனோட அம்சம் நான்”.

இதைக் கேட்ட இவர் எதிர்பாராத திருவாக்கினால் ஸ்தம்பித்து நின்றாராம். பிறகு தயங்கியபடி தன் சகோதரர் தனக்கு கல்யாணம் செய்விக்க ஏற்பாடு செய்துள்ளதை கூறி “ஆத்ம சமர்ப்பணம் செஞ்சுட்டதாலே கல்யாணம் செஞ்சிக்கலாமா என்று ஒரே கலவரமா இருக்கு” என்றாராம்.

மீண்டும் ஸ்ரீ பெரியவா “நான் வேற யாருமில்லே. நான் மதுரை வல்லவ சித்தனோட அம்சம். கிருஷ்ண அவதாரத்திலே

திரௌபதிக்கு சேலையை ஒரு தறியுமில்லாம, ஒரு நூலுமில்லாம கொடுத்த வல்லவ சித்தன் மாதிரி நான்... கவலைப்படாதே நான் உன்னை என்னோட எடுத்துண்டுட்டேன்"

என்று ஒரு அபார வாக்குறுதியை, மிக அமானுஷ்யமான வகையில் ஸ்ரீ மஹாபெரியவா அனுக்ரஹித்துள்ளதை இவர் கூறுகின்றார்.

"இது மிகவும் தனிப்பட்ட என் அனுபவம். இதை எல்லாம் சொன்னா என்னை எல்லோரும் பைத்தியக்காரன்னு நினைப்பா" என்று இதுவரை யாரும் அடைந்திராத அரிய அனுபவமாய் பெரியவா புராணம் என்ற யூட்யூப் பேட்டி ஒன்றில் நீர் மல்க கூறுகின்றார்.

இவர் திருமலைவையாவூர் என்றகோயில் திருப்பணியை ஸ்ரீ மஹாபெரியவாளின் உத்தரவால் பெற்ற பெரும்பாக்யமும் அடைந்துள்ளார்.

❖ ❖ ❖

## 45. அரூபமாகவும் அருள்வார்

**கு**த்தாலத்திலிருந்து பந்தநல்லூர் வழியாக ஸ்ரீபெரியவா மேனா எனும் பல்லக்கில் அமர்ந்து வந்து கொண்டிருந்தார். இரவு பதினோரு மணியிருக்கும்.

மேனாவின் கதவு மூடப்பட்டிருந்தது.

வழியில் பக்தர்கள் வட்டம் "ஹர யர சங்கர ஜய ஜய சங்கர" என்று கோஷமிட்டு நெருங்கியது. எப்போதும் இப்படி கோஷம் கேட்கும் போதெல்லாம் ஸ்ரீபெரியவா மேனாவின் கதவை திறந்து அந்த பகுதி பக்தர்களுக்கு தரிசனம் கொடுப்பார்.

ஆனால் மோனவின் கதவு திறக்கப்படாததுடன் உள்ளே மகான் இருப்பதற்கான தடயமாக லேசான எந்த ஒலியும் கேட்காததால் கைங்கர்ய அன்பர்கள் சந்தேகத்துடன் தாங்களாகவே மேனாவின் கதாவை திறந்து பார்த்தனர்.

பார்த்தவர்கள் திகைத்து போயினர்.

ஸ்ரீபெரியவாளை மோனவிற்குள் காணவில்லை. அனைவரும் பயந்து டார்ச் அடித்து பார்த்தனர். செய்வதறியாமல்



பெரும் கலவரமாகிவிடப் போகிறதே என்று மேனாவின் கதவைச் சாத்திவிட்டனர்.

சற்றைக்கெல்லாம் அந்த அமைதி சூழலில் மெல்லிய முனகல் சப்தம் கேட்டது. உடனே பாதி பயமும் தயக்கமுமாக கதவை திறந்து பார்த்தவர்களுக்கு ஒரு நிம்மதி பெருமூச்சு பிறந்தது.

திகைத்து வியர்த்து கைங்கர்ய அன்பரிடம்,

"நீ பாக்கும்போது உள்ளே யாருமில்லைன்னு பயந்து போயிட்டாயோ" என்று குறும்பாக கேட்டு தன் மாயாலீலையை உணர்த்தினார்.

"சரி! சரி! இனிமே சட்டுனு திறக்காதே நம பார்வதி பதயேன்னு கோவிந்த நாம சங்கீர்த்தனம் சொல்லிண்டு கதவைத் திற" என்றார்.

எங்கும் நிறைந்தவராக சர்வவ்யாபி அரூபமாகவும் தன்னை மறைத்து அருளும் பரப்பிரம்மம் என்பதை இப்படி ஓர் அரிய சம்பவத்தின்மூலம் அறிகிறோம்.

❖ ❖ ❖

## 46. பைரவ சங்கரர்!

**ஹ**ம்பியில் ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசிக்க ஆந்திராவை சார்ந்த ஸ்ரீசுப்ரமணிய ஐயரின் மகனும், தீட்சதர் ஒருவரும் தன் குழந்தைகளுடன் வந்திருந்தனர்.

ஸ்ரீபெரியவா அவர்களை ஸ்நானம் செய்துவிட்டு கோயிலுக்கு போய் சுவாமி தரிசனம் செய்துவிட்டு வரச் சொன்னார். அப்படியே அவர்கள் போய் வந்தனர்.

அப்போது தன் குழந்தைகளோடு வந்த அந்த தீட்சதர் ஹம்பியில் சுற்றுலாவாக சில முக்கிய இடங்களை சுற்றி பார்க்க கிளம்பினார்.

ஸ்ரீபெரியவாளிடம் உத்தரவு கேட்டார்.

அதற்கு ஸ்ரீபெரியவா "நீ என்னை தரிசிக்கலாம்னு வந்தியா இல்லே ஊரை சுத்தி பார்த்துட்டு போலாம்னு வந்தியா?" என்று கேட்க அவர் வெட்கத்துடன்,

"இல்லே... சுப்ரமணிய ஐயர் பையனும் என் குழந்தைகளும் பார்க்கணும்னு ஆசைபடறா அதனாலத்தான்..." என்றார் தயங்கியபடி.

"சரி! சரி! போயிட்டு வாங்கோ. ஆனா சாயரட்சை இருட்டறதுக்கு முன்னாலே திரும்பி வந்துடணும்" என்ற கட்டளையோடு அனுப்பினார்.

அந்த ஊரின் கெய்ட் ஒருவனை கூட்டிக்கொண்டு சபரி ஆஸ்ரமம், சீதை நகை போட்ட இடம், என பார்த்தவர்கள், வாலிவதம் நிகழ்ந்த இடத்திற்கு செல்லுமுன் கூடவந்த கெய்ட் டீ சாப்பிட செல்வதாக கூறி பணம் வாங்கிக் கொண்டு மது அருந்திவிட்டு எங்கோ சென்றுவிட்டான்.

அப்படியும் இவர்கள் மலையும் காடுமான இடத்தில் ஏறி பார்த்துவிட்டு கீழே இறங்கியபோது நன்றாக இருட்டிவிட்டது. வழி சொல்லி வந்த கெய்டும் இல்லாமல் அந்த காட்டில் திக்கு தெரியாத இருட்டில் வசமாக மாட்டிக் கொண்டனர்.

எந்த பக்கம் செல்வது என்று தெரியாமல் நடுகாட்டில் நிர்கதியாக நின்றபோதுதான் ஸ்ரீபெரியவாளெனும் தெய்வம் எச்சரித்தது ஞாபகம் வந்தது.

சாயரட்சைக்குள் திரும்பி விடுங்கள் என்று ஸ்ரீபெரியவா சொன்னதை மீறியதால் இப்படி கேம்ப்பை விட்டு சுமார் ஏழெட்டு கிலோ மீட்டர் வெகுதூரத்தில் குழந்தைகளை வைத்துக் கொண்டு அழாக்குறையாக நின்ற தீட்சதர், ஸ்ரீபெரியவா வாசம் செய்யும் திக்காக ஒன்றை அனுமானம் செய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

"பிரபோ நீங்கதான் காப்பாத்தனும்" என்று மானசீகமாக வேண்டி எழுந்தார்.

எழுந்தவர் கண்களில் அந்த காட்டு இருட்டில் ஒரு பைரவர் தென்பட்டார். அந்த நாய் இவருக்கு ஏதோ ஒரு சிமிஞை செய்வது போலிருந்தது. ஏதோ ஒரு நம்பிக்கையோடு நாய் சென்ற பாதையிலேயே ஸ்ரீபெரியவாளை பூர்ணமாக பற்றிக் கொண்டு குழந்தைகளோடு நடக்கலானார்.

ஸ்ரீபெரியவா 'கேம்ப்'பிலிருந்து அந்த இடம் ஏழெட்டு கிலோ மீட்டர் தூரத்திலிருப்பதாக அறிந்தும் அந்த நாய் செல்லும் திசை தனக்கு நல்வழி காட்டும் என நடந்தனர்.



அத்தனை சோதனையிலும் ஆச்சர்யபட வைக்கும் விதமாக இரண்டே பர்லாங் நடந்ததும் உடனே ஸ்ரீபெரியவாளின் இருப்பிடம் வந்துவிட்டது.

நிம்மதி பெருமூச்சும், தப்பித்தோமென ஆனந்த கண்ணீருமாக ஸ்ரீபெரியவாளெனும் தெய்வத்திடம் ஓடி வந்து நமஸ்கரித்தனர்.

"என்ன நாய் வந்ததா" என்று தெலுங்கில் ஸ்ரீபெரியவாளெனும் சர்வக்ஞர் குறும்பாக கேட்டார்.

"லேது லேது... ஸ்ரீவருதான்"னு என்று அந்த பைரவரவராக வந்து தங்களை காப்பாற்றியது ஸ்ரீபெரியவாளே என்ற முழு நம்பிக்கையோடும், நன்றி பெருக்கோடும் தெய்வத்தை வணங்கி நின்றனர்.

❖ ❖ ❖

## 47. எல்லாமும் பெரியவா! அல்லாவும் பெரியவா!

**ம**தங்களையும் கடந்த தெய்வமான ஸ்ரீமஹாபெரியவா ஹைதராபாத் ஏ.ஸி.ஸி. சிமெண்ட் ஆலையின் பப்பிங் ஸ்டேஷனில் தங்கி இருந்த சமயம்.

அந்த ஊரில் பீம்சேனப்பா கிட்டப்பா என்பவர் ஸ்ரீபெரியவாளை தன் தோட்டத்திற்கு வருமாறு வேண்டிக் கொண்டார். நவாப் ஆட்சியின்போது அட்டூழியங்களை எதிர்த்து வெற்றி கண்டவர்களின் பாரம்பர்ய குடும்பம் அது.

இப்படி வேற்று மதத்தின் கொடுமைகளை எதிர்த்து போராடிய குடும்பத்தை சார்ந்தவர்களின் தோட்டத்திற்கு சென்றுக் கொண்டிருந்த ஸ்ரீமஹாபெரியவா வழியில் ஒரு கடையில் தன் திருப்பார்வையை செலுத்துவதை யாரும் பார்க்கவில்லை.

அந்த க்ஷணநேர பார்வையில் அந்த கடையில் வேலை செய்துக் கொண்டிருந்த ஒரு முஸ்லிம் அன்பரை ஸ்ரீபெரியவாளெனும் தெய்வம் ஆட்கொண்டுவிட்ட விந்தை அரங்கேறியது.

அன்று மதிய வேளையில் ஏதோ ஒரு உந்துதலும் உற்சாகமாக அந்த ஏழை இஸ்லாமிய அன்பர் தரிசிக்க வந்தார். ஸ்ரீபெரியவா எல்லாமும் அறிந்த சர்வக்ஞராய்,

“உன் சம்சாரம் இன்னிக்கு கார்த்தாலே பழங்களோடு வந்து தர்சனம் செஞ்சுட்டு போனாளே” என்றவுடன் அன்பருக்கு மேலும் திகைப்பு.

“அல்லா அல்லா” என்று உணர்ச்சி மேலிட குரல் கொடுத்துவிட்டு” காலையிலே பெரியவங்க ரிக்ஷாவை பிடிச்சி நடந்து போனபோது என் கடையை பாத்தீங்க. எனக்கு அல்லாவையே பார்த்ததுபோல மனசுலே அப்படியே பதிஞ்சிடுச்சி. அதோட என்கிட்ட உருது பாஷையிலே ஏதோ சொல்லிட்டு போனீங்க... உங்களை பார்க்கணும்னு தோனி ஓடிவந்தேன்” என்று அந்த பாக்யசாலியான முஸ்லிம் அன்பர் வணங்கி நின்றார்.

ஒன்றுமே நடவாததுபோல ஸ்ரீமஹாபெரியவா ஒரு புன்னகையில் தன் மகிமையை மறைத்து அந்த மாற்றுமத அன்பருக்கும் அவருடைய தெய்வமாகவே மாறியதுபோல் பழங்களை கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினார்.

எல்லாமுமான பெரியவா அல்லாவும் ஆனதில் அதிசயம் ஏது?

❖ ❖ ❖

## 48. ஈசன் திருமுகத்தில் ஏசு!

**தி**ரு டெமெட்ரின் ஒரு பிரெஞ்சு நாட்டை சேர்ந்தவர். முதன்முறையாக ஸ்ரீபெரியவாளை தரிசிக்க வந்தார். இப்படி வரும் அயல் மதத்து அயல்நாட்டினர் ஏதோ ஒரு தேடலுடனும், தத்துவார்த்தமாகவும் மதசம்பந்தமானதாகவும் சந்தேகங்களோடும் வருவர். ஸ்ரீபெரியவாளை தரிசித்ததுமே பலருக்கு சந்தேகம் தீர்ந்தது போலாகும். சிலருக்கு பெரியவாளிடம் அளவளாவி அது புரியும் நிலைவரும்.

ஆனால் இந்த பிரெஞ்சுகாரரோ ஸ்ரீபெரியவாளுக்கு எந்தவித தொந்திரவும் கொடுக்காமல் அடிக்கடி தரிசனம் செய்து செல்வார்.



தரிசனம் செய்த பிறகு தினமும் தன் டைரியில் எதையோ எழுதிக் கொள்வார். தினமும் இதைப் பார்த்துக் கொண்டிருந்த கைங்கர்ய அன்பர்களுக்கும் அப்படி என்ன தினமும் எழுதிக் கொள்கிறார் என்று ஆவல் எழுந்தது.

எல்லாமும் அறிந்த ஸ்ரீமஹாபெரியாவளே ஒருநாள் கைங்கர்ய அன்பர் ஒருவரிடம் “அவர் என்ன எழுதறார்னு பார்த்துண்டு வா” என்று அனுப்பினார்.

அன்று அந்த பிரெஞ்சுகாரர் எழுதியதில் இவர் கண்ணில் பட்ட முக்கிய வரிகள் வியப்பூட்டின.

“நான் ஏசுபிரானின் திருமுகத்தை தரிசனம் செய்கிறேன்” என்று எழுதிய அந்த கிறிஸ்தவ பக்தர் ஸ்ரீ மஹாபெரியவாளெனும் ஈசன் திருமுகத்தில் ஏசுநாதரை தரிசித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

❖ ❖ ❖

## 49. உலகளந்த பெரியவா!

**ஸ்ரீ**மதி பத்மாசினி எனும் வைணப பக்தை ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் ஒரு அபூர்வ தரிசன பாக்யத்தை ஆனந்தித்துள்ளாள்.

அடிக்கடி ஸ்ரீபெரியவாளை தரிசிக்க செல்லும் பக்தை ஒருமுறை தன் குடும்பத்தோடு தேனம்பாக்கத்தில் அருளிய மகானை காணச் சென்றாள். ஸ்ரீபெரியவா அந்த மாலையில் அனுஷ்டானம் செய்துக் கொண்டிருந்ததால் பக்தையின் கணவர் அதுவரை சென்று ஏதாவது உணவு உட்கொண்டு வரலாமென சென்றுவிட, பக்தையும் அவள் பேத்தியான சிறுமியும் மட்டும் அங்கிருந்தனர்.

அப்படி அவர்கள் அங்கிருந்து நகராமல் பொறுமையாக இருந்ததற்கான பலன் இப்படி ஒரு பெரும்பேறாக அமையும் என்பதை ஸ்ரீமதி பத்மாசினி அம்மாள் எதிர்பார்க்கவில்லை.

ஸ்ரீ மஹாபெரியவா அனுஷ்டானங்களை முடித்து வெளியே வந்து காட்சி தந்தார். மாமி எப்போதும் ஸ்ரீபெரியவாளை தரிசிக்கும் போது சொல்லும் ஸ்லோகத்தை பக்தியுடன் சொன்னாள்.

**ஸ்ரீமன் அபீஷ்ட வரத த்வாமஸ்மீ ஸரணம் கத;**
**ஏதத் தேஹாவஸானே மாம் த்வத்பாதம் பராப்ய ஸ்வயம;**

என்று மனமுருக ஸ்ரீபெரியவாளெனும் ஸ்ரீவரதரை தியானித்து பக்தி பரவசத்துடன் 'த்வத்பாதம் பராப்ய ஸ்வயம்; என்று சொல்லும் போது ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா சடாலென்று எழுந்து தன் இடது காலை இப்படியம் செங்குத்தாக தூக்க முடியுமோ என்பதாக வியக்கும் வகையில் மடித்து மேலே தூக்கி சில நிமிட துளிகள் உலகளந்த பெருமாள் தன் திருபாதம் ஒன்றினால் விண்ணுலகை அளந்தாற்போல் ஸ்தம்பிக்க வைக்கும் திருகோலத்தில் நின்றார். எப்படித்தான் குச்சியைப் போல் காலை செங்குத்தாக தூக்க முடியும் என்று பக்தை இன்றும் அதிசயிக்கிறாள்.

ஸ்ரீமதி பத்மாசினி அம்மையாரே விக்கித்து இந்த அபூர்வத்தை நோக்க பக்கத்தில் இதைப் பார்த்த அதிர்ச்சியில் பக்தையின் பேத்தி பயந்து நடுங்க ஆரம்பித்தாள்.

"பயப்படாதே... பாரு... நல்லா கண்ணைத் திறந்து பாரு என்று தெய்வத்தின் அரிய சொரூபத்தை தன் பேத்தி பயப்படாமல் பார்க்கும்படி பாட்டி தேற்றினாள்.

இந்த எதிர்பாராத ஆனந்த அனுக்ரஹத்தால் மெய்சிலிர்த்து "வரதா வரதா" என மனமுருக பக்தை கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

ஸ்ரீவேதாந்த தேசிகரின் இந்த ஸ்லோகத்தில் ஸ்ரீவரதராஜ பெருமானிடம் வைகுந்த பதவி அடைவதற்கு அவர்தம் திருபாதங்களை சரண் புகுவதாக கூறியுள்ளார்.

பக்தை இந்த ஸ்லோகத்தில் 'த்வத்பாதம் பராப்ய ஸ்வயம்' என்று சொன்னதும் சாக்ஷாத் உலகளந்த பெருமானாக ஸ்ரீபெரியவா காட்சி தந்து உடனே தன் இயல்வு நிலைக்கு வந்துவிட்டார்.

அப்போது அங்கு இன்னொரு பக்தர் வர அவரிடம் "இவ ஏன்டா இப்போ கன்னத்துலே போட்டுகறா?" என்று குறும்புடன் தன் திரு நாடகத்தை மறைத்து கேட்டுள்ளார்.

இந்த அரிய தரிசனம் 'சொப்பனமா நிஜமா' என்று பக்தைக்கு எப்போதும் சந்தேகமளிக்கும் வியப்பாகவே உள்ளதாம்.

❖ ❖ ❖



# 50. நீதிபதி அருகே பசுபதி

**ஸ்ரீ**மதி நீலாங்கரை மாமி எனும் ஸ்ரீபெரியவா பக்தையின் பெண்ணிற்கு கிட்டிய அபூர்வ தரிசனம் இது.

ஹைகோர்ட்டில் வக்கீலாக இருந்தவர் ஒருமுறை தன் வழக்கிற்கு வாதாட சென்றாள். அவ்வழக்கில் நியாயமான தன் தரப்பிற்கு நீதி கிடைக்க வேண்டுமென்று ஸ்ரீ மஹாபெரியவாளை வேண்டிக் கொண்டு நீதிமன்றம் சென்றாள்.

வழக்கு விவாதம் நடந்தது. தனது தரப்பிற்காக மிகவும் அனல் பரக்கும் வகையில் வாதம் செய்துக் கொண்டிருந்தாள். நீதிபதியை நோக்கி தன் வலுவான கருத்துக்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தபோது, அந்த நீதிபதி உட்கார்ந்திருந்த ஆசனத்திற்கு நேர் பின்னால் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியாவளின் திருமுகம் மெல்லிய புன்னகையுடன் தோன்ற இந்த பெண்மணிக்கு மெய்சிலிர்த்தது.

'நா பாத்துகறேன்' என்று சொல்வதுபோல் ஸ்ரீபெரியவா அபயகரம் அருள அந்த சில நொடிகளில் ஸ்ரீபெரியவாளின் அரிய தரிசனம் இந்த பெண் வக்கீலுக்கு பெரும் பாக்யமாக கிட்டியது.

கோர்ட்டிலிருந்து வந்து இந்த இன்ப அதிர்ச்சியை ஸ்ரீமதி நீலாங்கரை மாமியிடம் பெண் சொல்லி ஆனந்தத்தை பகிர்ந்தாள்.

❖ ❖ ❖

# 51. கதவைத் தட்டிய காஞ்சி தெய்வம்

**பி**ரம்பஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரின் அதீத பக்தி அவருக்கு. அறுபத்து நாலாம் நாயன்மார் என்ற அரும்பெரும் அங்கீகாரத்தை ஈஸ்வரராம் ஸ்ரீ மஹாபெரியவாளின் திருவாக்காகவே அருளப்பட்டிருக்க, அப்படிப்பட்ட நாயன்மாரை "என் பக்தி போறலையோ, என் ஜன்மா இப்படியே பக்தி பண்ணாம கழிஞ்சுடுமோ" என்று வேறொரு எளிய பக்தருக்கு கிட்டிய அருளை நினைத்து ஆதங்கப்பட வைத்துள்ளது.

அந்த பக்தர் திரு. பவார் என்று அழைக்கப்படும் ஸ்ரீமடத்தின் காவல் கைங்கர்யம் செய்ய சான்டூர் மஹாராஜாவால் ஸ்ரீபெரியவாளிடம் பண்டர்பூரில் அனுப்பப்பட்ட பாக்யசாலி.

ஒருமுறை பிரதோஷம் மாமா ஸ்ரீமடம் சென்றபோது, திரு. பவார் இவரிடம் ஓடோடி வந்தார். ஸ்ரீபெரியவாளிடம் உண்மையான பக்தி கொண்டு தரிசிக்க வரும் பக்தர்களிடம் பவார் மிக்க மரியாதை காட்டுவதுண்டு. ஓடோடி வந்த பவார் சொன்ன ஸ்ரீ மஹாபெரியவாளின் அமானுஷ்யமான தரிசன அனுபவமிது.

எப்போதும் ஸ்ரீபெரியவாளை பிரியாதிருக்கும் பவாருக்கு தன் சொந்த ஊருக்கு செல்லும் நிர்பந்தம் ஏற்பட்டது. ஸ்ரீ பெரியவாளிடம் உத்தரவு பெற்று தன் கிராமத்துக்குச் சென்றார்.

ஒருநாள் இரவு பத்தரை மணிக்கு பவார் தன் மனைவியுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க, அவனுடைய மாமனார் உள்ளே அறையில் உறங்கிக் கொண்டிருந்தார்.

தம்பதி இருவரும் எப்போதும் போல ஸ்ரீபெரியவாளின் நினைவாகவே இருந்தனர்.

"பெரியவா தெய்வம்! அவர் கிட்டே வேலை செய்ற பாக்யம் கிடைச்சுதே! அந்த தெய்வத்துக் கூடவே இருக்கணும் போலிருக்கு... இந்த வேலை முடிஞ்சதும் கிளம்பிடனும்" என்பது அவர்கள் மொழியில் பேசிக் கொண்டிருந்தனர்.

பத்தரை மணி இரவானதால் வாசல் கதவு பூட்டப் பட்டிருந்தது. அப்போது கதவை யாரோ தட்டுவது போலிருக்க இருவரும் கதவை நோக்கினர்.

பார்த்த இருவருமே ஸ்தம்பித்து போயினார்.

அங்கே சாக்ஷாத் மஹாபெரியவாளே 'இதோ நானே வந்துட்டேன்' என்பவர்போல் பூட்டியிருந்த கதவை தாண்டி உள்ளே தண்டத்துடன் திருமுகத்தில் புன்னகையுடன் காட்சி தந்தருளினார்.

"பெரியவா! பெரியவா!" என்று இருவரும் ஒரு நிமிட நேரம் உருகி வணங்கினர். பின் உள்ளே தூங்கிக் கொண்டிருந்த தன் மாமனாரை எழுப்ப குரல் கொடுத்தனர்.

"பெரியவா வீட்டுக்கே வந்திருக்கார் எழுந்து வந்து பாருங்கோ" என்று ஆவலோடும் பரவசத்தோடும் அழைக்கும் போதே அந்த மாயம் செய்த மகானின் திருஉருவம் மறைந்து போனது.



அன்று இரவு முழுவதும் இந்த அமானுஷ்யமான பாக்யத்தால் அதையே பேசி மகிழ்ந்தனர். உடனே ஊரிலிருந்து கிளம்பி காஞ்சி வந்தடைந்தனர். பவார் இதை ஸ்ரீபெரியவாளிடம் உணர்ச்சி பொங்க கூறியபோது அத்தெய்வம் ஒரு புன்சிரிப்போடு தான் சர்வ்வவியாபியாக அங்கே வந்து தரிசனம் நல்கியது சத்தியமே என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டது போலானது. அன்று ஸ்ரீமடத்திற்கு வந்த பிரம்மஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரிடம் பவார் இந்த அதிசய அனுக்ரஹத்தை சொன்னாராம். 'இப்பேர்பட்ட அனுக்ரஹம் எனக்கு கிடைக்கலையே... என் பக்தி குறைவா இருக்கு... இப்படி பெரியவா பக்தி பூர்ணமா இல்லாம ஜன்மா போயிடுமோ' என்ற வகையில் நாயன்மாரின் பக்தி மேன்மையிலும் அவர் மனம் ஆதங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# 52. ஸ்ரீராமரும் நீரே!<br>ஸ்ரீபக்த ஹனுமனும் நீரே!

'ஸ்ரீராம ஈஸ்வர பெரியவா' என்ற நூலில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளிடம் காணும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் அம்சங் களைப்பற்றி எழுதிய பாக்யம் எனக்குண்டு. ஸ்ரீராம பிரானாகவே ஸ்ரீபெரியவாளை தரிசனம் செய்த பைரவி சன்யாசிகளின் அனுபவத்தை ஸ்ரீசீனிவாசன் என்ற பக்தர் அனுபவித்ததை இப்போது படிக்க நேர்ந்தது.

ஸ்ரீ மஹாபெரியவா ஹம்பியில் அருளியபோது பல முக்கிய கிராமங்களுக்குச் சென்று ஸ்ரீவித்தியாரன்னியர் சாம்ராஜ்ஜியத்தின் மகிமைகளை ஆராய்ச்சி செய்து பல விஷயங்களை பக்தர்களுக்கு கண்டறிந்து சொன்னார்.

ஹாஸ்பெட்டில் மலவல்லியபந்தம் என்பது பல மலைகள் அடங்கி பிரதேசம். ராமாயணத்தில் வாலி சுக்ரீவன் போர் நடந்த இடமுள்ளது.

மலையின் மேல் ஒரு கோதண்டராமனின் கோயிலும் உள்ளது. அங்கு பல பைரவி சன்னியாசிகள் எப்போதும் ராமாயண பாராயணம் செய்து கொண்டு வாழ்கின்றனர்.

சிலர் இதில் விசேஷமாக ஒற்றைக் காலை மடித்து வைத்துக் கொண்டு ஒரே காலில் நின்றவண்ணம் பாராயணம் செய்வது குறிப்பிடத்தக்கது.

இப்பேர்பட்ட கடுந்தவத்துடன் எப்போதும் ராமாயணமே நினைவாக உள்ள இந்த பைரவி சன்யாசிகளுக்குத்தான் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா ஸ்ரீராமசந்திர மூர்த்தியாக காட்சியருளியுள்ளார்.

அந்த மலையில் ஸ்ரீராமநவமி கொண்டாட குஜராத்தை சேர்ந்த ராமபக்த குழுவினர் மூன்று பெரிய பஸ்களில் ஆண்களும் பெண்களுமாக 200 பேர் 10 நாட்கள் தங்கி ராமர் பட்டாபிஷேக நிகழ்ச்சியை செய்வதுண்டு.

இந்த மலையிலிருந்து 7 கிலோ மீட்டர் தூரத்தில் ஸ்ரீமஹாபெரியவாளெனும் ஸ்ரீராமசந்திரமூர்த்தி தங்கி இருந்தார்.

அன்று அதிகாலை ஸ்ரீபெரியவா சரியாக 4 மணிக்கு எழுந்துக் கொண்டார். கைதட்டி அருகே படுத்திருந்த கைங்கர்ய அன்பர்களை எழுப்ப முயற்சி செய்தார். அவர்களுக்கு இப்படி ஒரு குளிரில் ஸ்ரீபெரியவா எழுந்து எங்கேயாவது கிளம்பிவிடப் போகிறாரோ என்ற கவலையில் தூங்குவதாக நடித்து எழாமல் படுத்துக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீபெரியவா இதை எல்லாம் பொருட்படுத்தவில்லை. அவர்கள் பாசாங்கு செய்வதை அறிந்தவராய் தன் கையில் ஒரு டார்ச்சை எடுத்துக் அந்த மங்கிய ஒளியில் படுத்திருந்த அன்பர்களை தாண்டி, தாண்டி எங்கேயோ கிளம்பிவிட்டார்.

உடனே இவர்கள் எழுந்து பின்னால் ஓடி ஸ்ரீபெரியவாளை நமஸ்கரித்து, “மிகவும் இருட்டும், பனியுமா இருக்கே பெரியவா... இந்த இருட்டிலே எங்கேயும் போக வேண்டாம்... இன்னிக்கு ஸ்ரீராமநவமிக்கு இங்கேயே இருக்கலாமே” என்று வேண்டி கேட்டுக் கொண்டனர்.

“ஸ்ரீராமநவமிக்குத்தான் கிளம்பறேன். அந்த மலையில் ராமர் பட்டாபிஷேகம் நடக்கப் போறது அவா வந்து கூப்பிட்டாளே” என்று ஸ்ரீபெரியவா சொன்னார்.

இவர்கள் “பெரியவா அந்த மலை 7 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கு... இருட்டும் பனியும் குறைஞ்ச உடனே விடியும்போது கிளம்பலாமே” என்றனர்.



“குறுக்கு வழியா போனா 4 கிலோ மீட்டர்தான் ஆகும்... இப்போ கிளம்பினாதான் சூரிய உதயத்தும் போது அங்கே போயிடலாம்” என்று தீர்மானமாக சொல்லிவிட்டு ஸ்ரீபெரியவா அவர் வழியில் நடக்கலானார்.

வேறு வழியின்றி அத்யாவஸ்யமானவைகளை உடனே எடுத்துக் கொண்டு இவர்களும் பின் தொடர்ந்தனர். நல்ல சாலையில்லாமல் தாறுமாறாக கற்கள் பரப்பியிருந்த மூன்றே அடி அகலமுள்ள பாதையில் இரண்டு பக்கமும் முட்புதர்களாக உருத்த அந்த இருட்டை பல டார்ச் லைட்டுகளாலும் ஈடுசெய்ய முடியாமல் எத்தனை சிரமம் உண்டோ அத்தனையும் ஏற்று ஸ்ரீபெரியவா நடக்கலானார்.

பூச்சிகள் மொய்க்க திருபாதத்தில் பாதுகை அந்த கரடுமுரடான கற்களால் அடிக்கடி கழன்ற வண்ணம் இருந்தாலும் ஒரே ஒரு பாதுகையோடு மட்டுமே நடப்பார். உடனே ஒருவர் கழன்ற பாதுகையை எடுத்து முன்னே போடுவார். இப்படி தான் நடப்பதை சற்றும் நிறுத்தாமல் அந்த கடுமையான குறுகிய பாதை வழியே மலை கோயிலை ஸ்ரீபெரியவா அடைய யாரும் எதிர்பாராத சூழ்நிலையில் அங்கேயிருந்த குஜராத்தி பக்தர்கள் உடனே எழுந்து ஹிந்துஸ்தானி பாண்டு வாத்யங்களுடன் வரவேற்றனர்.

காலை எட்டு மணி அளவில் ஸ்ரீகோதண்டராமர் கோயிலை ஸ்ரீபெரியவா அடைந்தபோது அங்கே இருந்த நீண்ட சடைமுடி தரித்த பைரவி சந்தியாசிகள் “ராம் ராம்” என்று ஒலித்து சாக்ஷாத் ஸ்ரீராமசந்திரமூர்த்தியை தரிசித்ததுபோல் ஆனந்தமடைந்து நமஸ்கரித்தனர்.

தெற்கே தமிழ்நாட்டை சார்ந்த முன்பின் அறியாத ஒரு சந்நியாசியை இப்படி அந்த பைரவி சந்நியாசிகள் அனைவருமே பரிபூர்ணமாக உணர்ந்து பக்தி செய்வதைப் பார்த்த கைங்கர்ய அன்பர்களுக்கு வியப்பு மேலிட்டது.

சதாசர்வ காலமும் ராமாயணம் பாராணயம் செய்து அதில் சிலர் ஒற்றை காலில் தவம் இருக்கும் நிலையிலும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளை அவர்கள் வெறும் துறவியாய் தரிசிக்காமல் சாக்ஷாத் ஸ்ரீராமபிரானாகவே தரிசித்தது சத்தியம் என்று தெரிந்தது.

அன்று மாலை 4 மணிக்கு அங்கிருந்து கிளம்பி தன் இடத்திற்கு புறப்பட்ட ஸ்ரீபெரியவாளை பிரிய மனமில்லாமல்

அந்த பக்தர்களும், பைரவி சந்நியாசிகளும் பெரியவா ஸ்ரீராம ராக தரிசனம் அளித்ததாக ஓயாமல் பேசியதை இந்த சம்பவத்தை அனுபவித்த ஸ்ரீநிவாசன் அவர்கள் எழுதியுள்ளார்.

❖ ❖ ❖

முதற் கடவுளான கணபதி விஷயத்தில் ஸ்ரீபெரியவா விக்னேஸ்வரராக காட்சி அருளிய சம்பவங்கள் அத்தனை அதிகமில்லாதது போல், முடிவாக கொண்டாடிடும் ஸ்ரீஹனுமனின் விஷயத்திலும் அப்படியோர் சம்பவம் யாரிடமிருந்தும் சொல்லப் படவில்லை.

ஸ்ரீ மஹாபெரியவாளை மாருதியாக யாராவது தரிசனம் செய்திருக்கக் கூடும்; ஆனால் அது பற்றி அந்த பக்தர் அறிவித்திராது தவிர்த்திருக்கலாம் என்றுதான் சிலரிடமிருந்து பதில் வந்தது. (இந்நூலை படிக்கப் போகும் ஏதோ ஒரு பக்தருக்கு அப்படிபட்டதோர் சம்பவம் கேள்விப்பட்டதாக அமையலாம்).

இப்படியோர் நூலை அடியேன் எழுதப் போவது தெரிந்திருந்ததாலோ என்னவோ, அந்த ஸ்ரீ ஹனுமனும், மகானுமாக சேர்ந்து அன்றே இந்த ரீதியில் எனக்கே ஒரு அனுபவத்தை அனுக்கிரஹித்துள்ளதாக இப்போது நினைக்க தோன்றுகிறது.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளன்றி வேறு தெய்வமில்லை என்ற பிரம்மஸ்ரீ பிரதோஷ சிவநாயன்மாரின் அதீத பக்தியை அசைப் போட்டு அப்படிப்பட்டதோர் ஏகக்கிரக பக்தி எனக்கு ஏற்பட வில்லையே என்று எப்போதும் நினைப்பதுண்டு.

“குலதெய்வமே அவாதாண்டா” என்று அந்த நாயன்மாரும் பக்தர்களிடம் கூறி நம்மிடையே சத்தியமாக நடமாடும் தெய்வமாய் ஸ்ரீபெரியவாளை விட்டு வேறு தெய்வத்தை நாடாத நிலையையும் பல பக்தர்கள் மனதில் நிலைநிறுத்தியுள்ளார்.

அப்படிப்பட்ட கட்டுப்பாட்டோடு நம் பக்தி இல்லையே என்று ஆதங்கப்படுவதுண்டு. சாக்ஷாத் சர்வேஸ்வரர் என்ற உறுதி ஏற்படாததால்தானோ நம் மனம் இப்படி அலைபாய்கிறது என்ற உறுத்தலோடுதான் அன்றும் ஸ்ரீபெரியவா தரிசனத்திற்கு சென்றேன்.

அந்த பிரதோஷ வேளையில் சிவப்பழமாக ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா காஞ்சி மடத்தின் அப்போதைய மாட்டுக் கொட்டகை எதிரே இருந்த வரிசையான அறைகளில் ஒன்றில் தரிசனம் நல்கினார்.



பக்தர்கள் கூட்டம் அவ்வளவில்லை. கைங்கர்ய அன்பர்கள் ஓரிருவரோடு கிட்டத்தட்ட ஏகாந்தமாக கிடைத்த அந்த தரிசனத்தை பூர்ணமாக அனுபவிக்கவிடாமல் என் மனதில் எண்ணங்கள் குவிந்து குழப்பின.

ஸ்ரீபெரியவாளை தரிசித்த பின் என்ன செய்யவிருக்கிறேன் என்பதை நினைத்தேன். எப்போதும்போல் ஸ்ரீமடத்தில் ஸ்ரீபெரியவாளை தரிசித்து விட்டு வெளியே வரும்போது எதிரே அந்த பெரிய மண்டபத்தில் காட்சி அருளும் ஆஞ்சநேயரை தரிசித்துவிட்டு செல்வதுதான் என் ஆசையும், வழக்குமுமாக இருந்தது.

அன்று ஏனோ அப்படி நான் செய்யப் போகிறேனா அல்லது ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளெனும் சாக்ஷாத் தெய்வத்தை தரிசித்து விட்ட பூர்ண திருப்தியில் அதை தவிர்க்கப் போகிறேனா என்ற குழப்பம் மேலோங்கியது. வழக்கம்போல் நான் ஹனுமனை தரிசித்து விட்டு போகப் போவதாக இருந்தால் ‘எல்லா தெய்வமும் ஸ்ரீபெரியவாளே’ என்றில்லாமல் ஒரு அரைகுறை பக்தி யோடல்லவா ஸ்ரீபெரியவாளிடம் இருக்கிறோம். இது தவறல்லவா என குழம்பியபடி நின்றேன்.

மனம் குழம்பியபடி இதற்கான தீர்வை நேரிலே காட்சிதரும் கடவுளாம் ஸ்ரீபெரியவாளிடம் மானசீகமாக வேண்டிக் கொண்டால் என்ன என்று தோன்றியது. ஏதாவது சூட்சமமாக இதற்கான ஸ்ரீபெரியவா அருள வேண்டுமென நினைத்தேன்.

அந்த தாயினும் மேலோனுக்கு என் மனதை படிக்க தெரிந்துவிட்டதுபோல் அனுக்ரஹம் ஆரம்பமாயிற்று.

சடாலென எழுந்து தெய்வமாம் ஸ்ரீபெரியவா அந்த அறைவையிட்டு வெளியேறினார். இங்குதான் போகிறார் என்பதை அறியாதவர்களாய் கைங்கர்ய அன்பர் இருவரும் கூடவே பின்சென்றனர்.

‘அடடா தெய்வ சன்னதியில் ஏதேதோ எண்ணிக் கொண்டிருந்தோமே அது பிழையோ... அதனால் தரிசனம் தருவதை தவிர்த்து அகன்று விட்டாரோ என்ற உறுத்தலோடு நானும் பின் சென்றேன்.

ஸ்ரீபெரியவா ஆதிசங்கரர் அருளும் பூஜை மேடையை வலமாக வந்தார். பின் ஸ்ரீமடத்தை விட்டு வெளியே சென்று விட்டார். எங்கே போகிறார் என்று யாருக்கும் தெரியவில்லை.

ஸ்ரீமட வாசலில் நின்றவர் மடமடவென சாலையை கடந்து எதிரே அந்த ஆஞ்நேயர் அருளும் மண்டபத்திற்குள் சென்றார். அங்கு அப்போது ஏதேனும் விழாவோ, ஹனுமன் சம்பந்தமான விசேஷ நாளோ அல்ல.

‘ஏன் எதற்கு ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா திடுதெப்பென்று ஒரு காரணமுமில்லாமல் அங்கு சென்ற அமர்ந்து காட்சி தரவேண்டும்’ என்று என்னைத் தவிர யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை.

அந்த சிவன் போக்கின் அர்த்தம் எனக்கு மட்டுமே புரிந்த ஒன்றாக அருளப்பட்டது.

ஸ்ரீமடத்தை விட்டு வெளியே வந்து ஆஞ்சநேயரை தரிசித்துவிட்டு போகும் என் வழக்கத்தை மாற்றிக் கொள்ள இயலாதே என்று என்னுள் ஏற்பட்ட குழப்பத்திற்கு விடை யருளுவது போல் அந்த ஆஞ்சநேய சன்னதிக்கு வந்து அமர்ந்து மாருதி சுவாமி சமேதராய் ஸ்ரீ மஹாபெரியவாளெனும் தெய்வம் தரிசனம் தருவது எப்பேர்ப்பட்ட கருணை என நெகிழ்ந்து போனேன்.

‘நீ என்னை தரிசித்த பின்னும் போய் தரிசிக்க நினைக்கும் ஆஞ்சநேய சுவாமியும் நானேயல்லவா’ என்று உணர்த்துவது போலான இப்பேர்பட்ட பேரனுக்ரஹம் அன்று எனக்கு அரிய அனுபவமானது.

‘ஹனுமனும் நானே’ என்று எல்லா தெய்வமுமான ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரியவா அருளிய பின்னும், பிரம்மஸ்ரீ பிரதோஷ நாயன்மாரைப் போல ஸ்ரீபெரியவாளன்றி வேறு தெய்வமில்லை என்ற மேலான பக்தியில் திளைக்காமல், எல்லா தெய்வ சன்னதியிலும் ஸ்ரீ பெரியவாளை நினைத்துக் கொள்ளும் அளவில்தான் என் பக்தி நிற்கிறது.

இந்த கடைநிலை பக்தனுக்கும் இப்படியோர் நூலை எழுத அனுக்ரஹித்த தெய்வமாம் ஸ்ரீமஹாபெரியவாளின் மலரடி பணியும் அன்பன்

- அகிலா கார்த்திகேயன் -

❖ ❖ ❖